விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 10 ஞாயிற்றுக்கிழமை (26.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 250

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித நபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## ஜனாதிபதி செயலணியில் பங்கேற்பதால்

# அரசியல் தீர்வுக்கு குந்தகம் ஏற்படாது

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு) வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கூட்டத்தில் பங்கேற்பதானது அரசியல் தீர்வினை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் எவ்விதமான குந்தகத்தினையும் ஏற்படுத்தாதென எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

(15-ம் பக்கம் பார்க்க...)

## 2 பவுண் சங்கிலி சந்நிதியில் திருட்டு

### 23 வயது இளைஞர் ஒருவர் மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆயைத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று பல்லாயிரக் 15

## நாடளாவிய ரீதியில் திடீர் சுற்றிவளைப்பு

### 3,099 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் பல குற்றங்களை புரிந்தவர்கள் மற்றும் பிடியாணை பிறப் 15

## எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிராக வாக்களித்தவர்கள் வெட்கப்பட வேண்டும்!

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை தள்ளிப் போடும் நோக்கில் எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிராக வாக்களிப்பதற்கு அரசாங்கக்கட்சி 15

## நல்லூர் கந்தசுவாமி ஆலய நேற்றைய மஞ்சத்திருவிழா

(யாழ்ப்பாணம்)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவில் 10-ம் நாளான நேற்று மாலை மஞ்சத் திருவிழா பக்திபூர்வமாக இடம்பெற்றது.

வள்ளி, தெய்வானை சமேதராய் முத்துக்குமார 15

## பிரதமர் ரணில் வியட்நாம் பயணம்

(கொழும்பு)

இந்து சமுத்திர பெருங்கடல் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சனிக்கிழமை வியட்நாமிற்கான பயணத்தினை மேற்கொண்டுள்ளார்.

குறித்த மாநாடு நாளை 27-ம் திகதி மற்றும் 28-ம் திகதி ஆகிய இருநாட்கள் இடம் பெறவுள்ளதுடன் இதில் பல நாட்டு 15

## நல்லாட்சி அரசாங்கத்திலும் மனித உரிமை மீறல்கள்!

### இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன்



(கொழும்பு)

நல்லாட்சி அரசிலும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார். 16

## மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைக்கக்கூடாது

### சபாநாயகர் கருஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயகுழுவின் அறிக்கைக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைக்காமையால் சபாநாயகர் அரசியலமைப்பு 15

## ஜனாதிபதி மைத்திரி - மகிந்த சந்திப்பு



15

## தேர்தல் பரிந்துரைகளை பெற ரணில் தலைமையில் குழு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் தொடர்பிலான பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐவர் கொண்ட குழுவை 15


### மகாராஜா பொதிகள் சேவை

Parcel.lk | GTV Express SRI LANKA | aramex

| | |
|---|---|
| லண்டன் | 600/- |
| கனடா | 900/- |
| ஜெர்மனி | 650/- |
| சுவிஸ் | 900/- |
| அவுஸ்திரேலியா | 800/- |

11Kgக்கு மேல் 1Kgக்கான கட்டணம்

ஏனைய நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்
உங்கள் வீட்டுக்கே சென்று கையளிக்கப்படும் சேவை



| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 225,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி. |
| 021 2224338<br>021 4925024 | 021 4930099 | 024 4930200<br>076 6908961 | 021 4930330 |


## அரசாங்கத்துக்கு எதிராக பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இன்று பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த முறைமையொன்று இல்லையெனவும், மக்களின் பிரச்சினைகளை அரசாங்கத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகள் கண்டுகொள்ளாதிருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் இன்று மக்களுக்கு தலைக்கு மேல் பிரச்சினைகள் அதிகரித்துள்ள நிலையில் நாட்டில் மக்கள் சந்தோஷமாக இருப்பதாக அமைச்சர்கள் அறிவித்தல் விடுத்து வருகின்றனர். இதனைக் கேட்கும் மக்களுக்கு சிரிப்புதான் 15

## துன்னாலை பகுதியில் 5 மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன



(கரணவாய்)

துன்னாலை காட்டுப்பகுதியில் இருந்து மீட்கப்பட்ட ஐந்து 15

# மரண அறிவித்தல்

## நவரத்தினராசா இராசேந்திரம்

(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தரும்-(நீர்ப்பாசனத் திணைக்களம்) அகில இலங்கை சமாதான நீதவானும்)

பிறப்பு 22 - 11 - 1949



இறப்பு 24 - 08 - 2018

கணையந்தோட்டம், புலோலி கிழக்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், நாவல்தோட்டம், புற்றளை வீதி, புலோலி தெற்கு, புலோலியை வாழ்விடமாகவும் கொண்ட நவரத்தினராசா இராசேந்திரம் அவர்கள் 24.08.2018 (வெள்ளிக்கிழமை) அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நவரத்தினராசா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி-பாறுபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவனும், கயல்விழி, திரிசூலன் (பிரான்ஸ்), கிருஷ்ணப்பிரியா (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடேசானந்தராஜா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்-நீர்ப்பாசனத்திணைக்களம்-கனடா), மகேந்திரராஜா (முன்னாள் உதவி பொது முகாமையாளர்-இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், சட்டத்தரணியும்-இலண்டன்), சௌந்தராஜா (முன்னாள் வேலை மேற்பார்வையாளர்-நீர்ப்பாசனத்திணைக்களம்-பிரான்ஸ்), சௌபாக்கியவதி (அமரர்) ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரனும், விநாயகமூர்த்தி (அமரர்), நடராஜமூர்த்தி (அமரர்), ஏரம்பமூர்த்தி (அமரர்), கணேசமூர்த்தி (அவுஸ்திரேலியா), சத்தியமூர்த்தி (இத்தாலி), புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.08.2018 புதன்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவல்தோட்டம், புற்றளை வீதி, புலோலி தெற்கு, புலோலி.**

**தகவல்:-குடும்பத்தினர்**
**தொடர்பு:மகள்- 0778696921**


(சி-3642)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

அமரர்

## மயில்வாகனம் மனோராஜ்

(உரிமையாளர் - ஹரே பிறின்டேர்ஸ் வெள்ளவத்தை )



மலர்வு:-18.06.1974
உதிர்வு:-27.07.2018

கடந்த 27.07.2018 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

(5469)

"சிவசுந்தரபதி" வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
(077 316 5557)

## வேலையாட்கள் தேவை

தையல் வேலைக்கு வெட்டி தைக்க தெரிந்த பெண் வேலையாட்கள் தேவை.

**தொடர்பு:-**
**0770583481**

(5485)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(தம்புள்ள)

குருநாகல்பிரதான பாதையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்

கலேவெல பொலிஸ் பிரிவிலுள்ள இப்பன்கட்டுவ என்ற இடத்தில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

கெப் ரக வாகம் ஒன்றின் பின் பகுதியில் லொறி ஒன்று மோதியதில் குறித்த கெப் வாகனம் அருகிலிருந்த வியாபார நிலைய மதிலில் மோதியதில், கெப் வாகனத்தில் இருந்த ஒருவரே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் மரணித்தவர் தம்புள்ள பிரதேசத்தின் பஹலவெவ கப்புவத்தை என்ற இடத்தைச் சேர்ந்த 40 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

கேப்ரக வாகனத்தை திருப்புவதற்கு முயற்சித்த வேளை கொழும்பிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி சென்ற லொறியொன்று கெப் வாகனத்தின் பின்பக்கமாக மோதியே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக கலேவெலப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த விபத்து தொடர்பில் கலேவெலப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## பணியாளர் தேவை

யாழ்.நகரில் நிறுவனம் ஒன்றிற்கு கணக்குப் பதிவாளர், சிட்டை எழுதுநர் கணணி இயக்குநர் வேலைகளுக்கு பெண் பணியாளர் தேவை.

வயதெல்லை 18-35 வரை

தொடர்புகளுக்கு
077 516 4928

## காணி உடன் தேவை

பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திக்கும் உரும்பிராய் சந்திக்கும் இடையில் அமைந்த 3 பரப்புக்குக் குறையாத காணி உடன் தேவை.

**தொடர்புகளுக்கு:-**
**0774869567**

(சி-3637)

## உடனடி வேலைவாய்ப்பு

DS-Max International (Pvt) Ltd ஆகிய எமது நிறுவனத்தில் உயர்நிலை பதவிகளுக்கு திறமையினை மட்டுமே பரிசீலித்து தேர்வுகள் நடைபெறுகின்றன. இலவச பயிற்சியுடன் நிரந்தரமான வேலை வாய்ப்பினைபெற்றுக் கொள்ளலாம்.

கல்வித் தகைமை:-O/L மற்றும் A/L

வயதெல்லை:-18-30 ஆண், பெண் இருபாலாரும்

சம்பள விபரம்:-பயிற்சிக் காலத்தில் 25,000/= -30,000/=
பயிற்சியின் பின் 45,000/=

குறுகிய காலத்தில் உயர்நிலை பதவியினை பெறுவதோடு உயர்நிலை வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

Note:-பயிற்சிக் காலத்தில் வெளிக்களம் (Filed) தொடர்புபட்டு இருப்பதனால் ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:-**
**0761932118, 0766048878**

(5483)

## மாபெரும் விலைக்கழிவு!!!

**லங்கா வோல் ரைல்ஸ், லங்கா புளோரைல்ஸ்க்கு 32.5% வரை கழிவு வழங்கப்படும். லங்கா (Delux), றொசல் கொமொட், றோயல் செரமிக்ஸ் ரைல்ஸ் வகைகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.**

(நிபந்தனைக்குட்பட்டது)

**நியூ கமல் செரமிக்ஸ்**
**37, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 021 222 2085**

(5477)

## வேலைவாய்ப்பு

*# கேக் ஐசிங் பயிற்சி ஆசிரியர் (Cake Icing)*
*# ஆரி எம்பிராய்டரி பயிற்சி ஆசிரியர் (Aari Embroidery)*
*# சுத்திகரிப்பாளர் (Cleaning)*

போன்ற துறைகளுக்கான வெற்றிடம்.

21 வயதிற்கு மேற்பட்ட பெண்கள்

மேற்படி துறைகளுக்கு தகுதி உடையவர்கள் 29.08.2018 அன்று 10.00மணி தொடக்கம் 04.00 மணி வரை நேரில் வருகை தரவும்.

தொலைபேசி இல : 0772288243

**YICSD College**

இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கன்னாதிட்டிச் சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

## பருவமழை பொய்த்தாலும் தொடரும் பரிசுமழை

தேசிய லொத்தர் சபையின் யாழ்முகவர் கனகலிங்கம் ஊடாகவும் அபிவிருத்தி லொத்தர் சபையின் யாழ் முகவர் **S.K.** திலகவதி பரிசுகள் தொடர் வெற்றிவாய்ப்புகள் 16.08.2018 நீரோகாவில் பத்து லட்சமும் 21.08.2018 மகாஜன சம்பத்தில் ஒரு லட்சமும் தொடர்ந்து 23.08.2018 ஒரே நாளில் அத கோடிபதியில் ஒரு லட்சமும் அபிவிருத்தி அதிர்ஷ்டத்தில் தங்க நாணயமும் சுப்பர்போல் விசேட சீட்டிழுப்பின் ஊடாக மோட்டார் சைக்கிள் என்பனவும் வெல்லப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் தெரிவிப்பதுடன் நீங்களும் வெற்றிகொள்ள இன்றே கனகலிங்கம் திலகவதி முகவரின் முத்திரை பொறிக்கப்பட்ட ரிக்கட்களை அதிகளவில் கொள்வனவு செய்து வெற்றியாளராகுங்கள்.

(5482)

# கண்ணீர் அஞ்சலி

அமரர் **குமாரசாமி கார்த்திகேசு**



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக கடமையாற்றும் **திரு.கா. குகபரன்** அவர்களின் அன்புத் தந்தையார் **குமாரசாமி கார்த்திகேசு** அவர்கள் 25.08.2018 சனிக்கிழமை அன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(5481)

விரிவுரையாளர் நலன்புரிக் கழகம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

# பௌத்த கோட்பாடுகளுக்கு எதிரான படைப்புக்களை உருவாக்க முடியாது

## சந்திரிகாவுக்கு எதிராக மங்கள

(கொழும்பு)

நாட்டில் பௌத்த கோட்பாடுகளுக்கு எதிரான படைப்புக்களை உருவாக்க அரசாங்கம் இடமளிப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை தாம் வன்மையான முறையில் நிராகரிப்பதாக நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் தயாரித்த வானொலி நாடகங்களின்பெயர் தொடர்பிலான சர்ச்சை தொடர்பாகவே அமைச்சர் மங்கள மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் ஒரு நாடகம் சமூக சீரழிவு பற்றி பேசுகிறது. இதன் பெயர் சார்ந்த அர்த்தத்தை தவறான முறையில் புரிந்து கொண்டு அரசாங்கத்தின் மீது சேறுபூசும் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டுள்ளதாகவும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் குற்றம் சாட்டினார். (இ)

# சு.கவின் துரோகிகளுக்கு எதிராக ஒக்டோபருக்கு முன் நடவடிக்கை

## அமைச்சர் சமரசிங்க எச்சரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 அதிருப்தியாளர்களுக்கு எதிராகவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் கட்சியின் மத்திய குழு தீர்மானிக்கும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

16 அதிருப்தியாளர்களும் கட்சிக்கு எதிராக தொடர்ந்தும் சதி முயற்சியில் ஈடுபட்டால் கட்சியின் மத்திய குழு ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள கட்சியின் வருடாந்த மாநாட்டிற்கு முன்னர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜெயசேகர 16 பேர் கொண்ட குழுவினருடன் இல்லை என அமைச்சர் தெரிவித்தார். அதேவேளை முன்னாள் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால முன்னாள் ஜனாதிபதியுடன் நெருக்கமாகவுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ள அமைச்சர் சமரசிங்க பலர் இந்த குழுவிற்கு ஆதரவு வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

சிலர் இரு தரப்பிலும் கால்வைத்துள்ளனர். அவர்கள் ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை குற்றம் சாட்டுவதுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டுவர முயல்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் இதனை இதற்கு மேலும் சகித்துக்கொண்டிருக்க முடியாது. இதனால் மத்திய குழு சு.கவின் துரோகிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என நான் கருதுகின்றேன் எனவும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார். (இ)

# இந்து இளைஞர் மாநாடு யாழில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஐந்தாவது இந்து இளைஞர் மாநாடு இன்று யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகிலுள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இரு அமர்வுகளாக இடம்பெறும்.

காலை 9 மணிக்கு வண்ணைச் சிவன் கோவிலிலிருந்து பாரம்பரியக் கலை நிகழ்வுகளுடன் ஆன்மீக ஊர்வலம் ஆரம்பமாகி விழா மண்டபத்தை சென்றடையும்.

முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ள சிவயோக சுவாமிகள் அரங்கில் இசைக் கச்சேரி, தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இளைஞர் கருத்தாடல் களம், இலக்கியச் சுடர் த.இராமலிங்கத்தின் (தமிழ்நாடு) சிறப்புரை என்பன இடம்பெறும்.

பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கில் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இளைஞர் கருத்தரங்கம், பிரியதர்சினி வாகீசனின் நெறியாள்கையில் கண்ணப்பர் குறவஞ்சி நாட்டிய நாடகம், இலக்கியச் சுடர் த.இராமலிங்கம் தலைமையில் யாழ். முன்னணிப் பேச்சாளர்கள் பங்கு கொள்ளும் பட்டிமண்டபம் என்பன இடம்பெறும். (இ)

# மகிந்தவின் சகோதரனின் உடலுக்கு மைத்திரி அஞ்சலி





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய சகோதரரின் உடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அஞ்சலி செலுத்தினார்.

நேற்றுக்காலை மெதமுலானவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட சந்திரா ராஜபக்ஷவின் உடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர்.

இதன்போது அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ உள்ளிட்டவர்களும் அஞ்சலி செலுத்தினர். (இ)

# அமிர்தலிங்கத்தின் ஜனன தினம்



(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பெரும் தலைவரும் இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 91 ஆவது ஜனன தினம் இன்று வலி. மேற்கு பிரதேச சபைமண்டபத்தில் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.துரைலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இதில் நினைவுப் பேருரையை மாவட்ட அபிவிருத்திச் சபை முன்னாள் தலைவர் ந.இராசேந்திரம் வழங்குவார்.

நினைவுரை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் த.நடனேந்திரன், வடமாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ், அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளைத் தலைவர் க.கௌரிகாந்தன், யாழ்.அராலி சரஸ்வதி மகா வித்தியாலய ஆசிரியர் அ.முருகதாசன், பண்ணாகம் அண்ணா கலை மன்ற காப்பாளர் இ.தம்பையா, காரைநகர் பிரதேச சபை தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ், வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன் ஆகியோர் வழங்குவர். (இ)

# தலைவர் பிரபாவுடன் பேரறிவாளன் சந்திப்பு

## ராஜீவ் கொலை வழக்கில் திருப்பம்

(கொழும்பு)


இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன் விடுதலைப்புலிகள் அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளை பேணியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு கட்டமாக, பேரறிவாளன் கடல் கடந்து இலங்கைக்குச் சென்று, விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனை சந்தித்துள்ளதாக மத்திய புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி தியாகராஜன் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணைகளின் போதே இந்த விடயங்கள் வெளியாகியுள்ளதாக கொழும்பு ஊடகம்ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்திய உச்ச நீதிமன்றத்தில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த விசாரணைகளின் போதே மறைந்திருக்கும் பல விடயங்கள் வெளியாகியுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பேரறிவாளன் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்துள்ளதாக மத்திய புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர்.



பேரறிவாளன் சிவராசனுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்துள்ளமை, அவர்களுடன் புகைப்படங்கள் எடுத்தமை, விடுதலைப் புலிகள் அமைப்பு உறுப்பினர்களுடன் இணைந்திருந்தமை, இந்திய முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் கூட்டங்களுக்கு பிரசன்னமாகியமை, விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட பொருட்களை பெற்றுக் கொடுத்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களை இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தின் முன்னிலையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.


அத்துடன், பேரறிவாளன் கடல் கடந்து இலங்கைக்கு சென்று, விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்துள்ளதாகவும் மத்திய புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வேலூர் கோட்டை பகுதிக்கு விடுதலைப்புலி உறுப்பினர்களுடன் பேரறிவாளன் சென்று, அவர்களுடன் தங்கியிருந்துள்ளதாகவும் மத்திய புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

இவ்வாறான காரணங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் பட்சத்தில், பேரறிவாளன் விடுதலைப்புலிகள் அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளை மிக நீண்ட காலமாகப் பேணி வந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மத்திய புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மரண அறிவித்தல்

## குமாரசாமி கார்த்திகேசு



மீசாலையைப் பிறப்பிட மாகவும் உசனை வசிப்பிட மாகவும் கொண்ட குமாரசாமி கார்த்திகேசு (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்) நேற்று (25.08.2018) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான குமாரசாமி - சேதுப் பிள்ளை தம்பதியரின் புதல் வரும் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலா தேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும் தயாபரன் (கனடா), சிவபரன் (டென்மார்க்), பூங்கோதை (கனடா), குகபரன் (விரிவுரையாளர் - ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்), குமாரபரன் (ஆசிரியர் - நாவாந்துறை R.C ) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைவாணி, தமிழ்ச்செல்வன், ஆனந்தி (ஆசிரியர் - உரும்பிராய் இந்துக் கல்லூரி), ரூபினி (ஆசிரியர் - நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர் களான அன்னப்பிள்ளை, சிவஞானம் மற்றும் செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் அஸ்வினி, நிதர்சன், கஸ்தூரி, காவேரி, கிருஸ்ணா, கர்ணன், கஜானி, சஸ்விந், சௌமியா, நுகேஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2018) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 2 மணியளவில் உசன் ஈச்சங்காடு இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


(5479)

'தேவிவாசா'
உசன், மிருசுவில்.

தகவல்:- குடும்பத்தினர்
077 636 5740, 077 607 9018

## ஆசிய விளையாட்டு 2018

# சாய்னா, சிந்து காலிறுதியில்




ஆசிய விளையாட்டு பட் மிண்டனில் இந்தியாவின் சாய்னா, சிந்து காலிறுதிக்கு முன்னேறினர்.

இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவில் ஆசிய விளையாட்டு நடக்கிறது.

இதன் பட்மிண்டன் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற் றில் தரவரிசையில் 10 ஆவது இடத்திலுள்ள இந் தியாவின் செய்னா, இந்தோ னேஷியாவின் பிட்ரி யானியை (40ஆவது இடம்) 21-6, 21-14 என்ற நேர் செட் களில் வீழ்த்தி, காலிறுதிக் குள் நுழைந்தார்.

### சிந்து ஆதிக்கம்

மற்றொரு போட்டி யில் இந்திய வீராங் கனை பி.வி.சிந்து, இந் தோனேஷியா வின் மிரிஸ்காவை 21-12, 21-15 என்ற நேர் செட் கணக்கில் வென்று காலி றுதிக்கு முன்னேறினார்.





# அதிபர் முழந்தாளிட்ட விவகாரம்

# விசாரணை அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது

## இலங்கை ஆசிரிய சேவைச் சங்கம் நிராகரிப்பு

(பதுளை)

பதுளை தமிழ்ப் பெண்கள் பாடசாலை அதிபர் ஆர். பவானியை முழந்தாளிட வைத்த சம்பவம் தொடர்பில் ஊவா மாகாண ஆளுநரின் ப்ணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை ஆசிரிய சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த விசாரணை அறிக்கையில் அவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளதாக ஆசிரிய சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை பதுளை தமிழ்ப் பெண்கள் பாடசாலை அதிபருக்கு நிகழ்ந்த அநீதி தொடர்பில் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் முறையான விசாரணை ஒன்று இடம்பெறும் எனவும் ஆசிரிய சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (இ)


VD
V CHILLI POWDER
மிளகாய்த்தூள்
சுத்தமான முறையில் தரமாக யாழ்ப்பாண பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட மிளகாய்த்தூள்.
சைவ, அசைவ உணவுகளுக்கு ஏற்றபடி தயாரித்துக் கொடுக்கப்படும்.
Home Delivery Available
வெளிநாடுகளுக்கும் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கும் பிரத்தியேகமாக பொதி செய்தும் கொடுக்கப்படும்.
விதானை வளவு
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.
V Darling Sweets
TP No:- 077 944 7977, 077 508 4685



# சேவை நலன் பாராட்டு





உயர்திரு.

## கந்தசாமி சுசீந்திரன்

(பிராந்திய முகாமையாளர் (2013-2018), மக்கள் வங்கி, யாழ் பிராந்தியம்)

1980 ஆம் ஆண்டு மக்கள் வங்கி குடும்பத்தில் பதவிநிலை உதவியாளராய் இணைந்து உதவி முகாமையாளர், பிரதி முகாமையாளர், முகாமையாளர், உதவி பிராந்திய முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் எனும் பதவிகளில் உயர்ந்து இலங்கைத் தீவின் பல பாகங்களில் மக்களுக்கும் மக்கள் வங்கிக்கும் ஆற்றிய மகத்தான வங்கிச் சேவைக்கு மனமுவந்து தலை வணங்குவதோடு அவரின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்தி நிற்கின்றோம்.

மக்கள் வங்கி குடும்பம்,
யாழ் பிராந்தியம்.

(சி-3634)


# இராசி பலன்

**மீனம்:** உறவினர்கள் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், சுபகாரியச் செலவுகள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மேடம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர்.

**கும்பம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை கூடும்.

**இராசி பலன் – கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | இராசி பலன் கிரகநிலை | | புத. ராகு |
| செவ். கேது | சந்திராஷ்டமம் பூசம், ஆயிலியம் | | சூரி |
| சனி | | குரு | சுக் |

26.08.2018
ஆவணி 10, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
பூரணை பிற்பகல் 5.46 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 1.51 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
இரண்டாம் ஆவணி ஞாயிறு, பூரணை விரதம்

வள்ளுவன்

**கடகம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**சிம்மம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.

**தனுசு:** தெய்வ அனுகூலத்தால் சிறப்புகள் வந்து சேரலாம், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறும்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி:** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கிடைக்கும் கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோசத்திற்கு மத்தியில் அன்னதானக் கந்தன் நேற்று தேரில் வலம் வந்தார். தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெற்றது. விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து தேரில் ஆரோகணித்த முருகப் பெருமான் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பக்தர்களின் வசதி கருதி போக்குவரத்து சேவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பக்தர்களின் தாகம் தீர்ப்பதற்காக ஆங்காங்கே தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சந்நிதி ஆலய சுற்றுப் புறங்களில் உள்ள மடங்களில் அன்னதானமும் வழங்கப்பட்டது. (படங்கள்:-மகாலிங்கம்)

# மூன்றாவது தேசிய வைத்தியசாலையை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரிக்கை



(சாவகச்சேரி)

கொழும்பிலுள்ள தேசிய வைத்தியசாலைக்குப் புறம்பாக இரண்டாவது தேசிய வைத்தியசாலையைக் கண்டியில் நிறுவியுள்ளீர்கள். ஏன் மூன்றாவது தேசிய வைத்தியசாலையை யாழ்ப்பாணத்தில் நிறுவக் கூடாது? என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் கேள்வி எழுப்பியுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்தெரிவித்துள்ளார்.

அண்மையில்சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற இரத்த சுத்திகரிப்பு நிலையத் திறப்பு விழா நிகழ்வின் போதே தான் சுகாதார அமைச்சரிடம் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளதாக சிவாஜிலிங்கம் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானியர் காலம் தொடக்கம் கொழும்பு - கண்டி - யாழ்ப்பாணம் என்ற வரிசையில் தான் பார்க்கப்பட்டது.

அந்த அடிப்படையில் வேண்டுமென்றால் இன்னொரு தேசிய வைத்தியசாலையை யாழ்ப்பாணத்தில் உருவாக்க முடியும் என்பது தான் என்னுடைய கருத்து.

மத்திய அரசாங்கமும் தற்போது சிறப்பு வைத்தியசாலைகளை, சிறுவர் வைத்தியசாலைகளை, கண்நோய்களுக்கான வைத்தியசாலைகளை அமைப்பதற்கு இணங்கியுள்ளது. நான் வடக்கு மாகாண சபையில் புற்று நோய்க்கு ஒரு சிறப்பு வைத்தியசாலைஅமைக்கப்பட வேண்டும் என ஒரு தீர்மானத்தை முன் மொழிந்திருக்கிறேன்.

மாகாண அரசாங்கத்தாலோ-மாகாண சபையாலோ இதனை அமைக்க நிதி போதாது. புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் நிதி இல்லாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்க முடியாது.

அவர்களுக்குத் தேவை சிகிச்சை. மத்திய அரசா? மாகாண அரசா? என்று பார்க்க முடியாது. உயிர் தான் எமக்கு முக்கியம். அந்த அடிப்படையில், சுகாதார அமைச்சர் ராஜிதவிடம் இரத்த சுத்திகரிப்பு நிலையங்களை மூன்று மடங்குகளாக அதிகரிக்குமாறு கூறியிருந்தேன்.

அதனைவிட சுகாதார அமைச்சரிடம், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வருகின்ற விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்துமாறு கோரி இருந்தேன்.

ஏ-9 வீதியில் இடம்பெறுகின்ற விபத்துக்களால் ஆன உயிரிழப்புக்களைத் தவிர்க்க கிளிநொச்சி மற்றும் சாவகச்சேரியில் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்பதே எமது ஆலோசனையாக இருந்தது.

துரதிர்ஷ்ட வசமாக இவ்வளவு காலம் இழுபட்டு விட்டது. உதாரணமாக பளையில் ஒரு விபத்து இடம்பெற்று விட்டால் விபத்துக்குள்ளானவரை யாழ் போதனா வைத்தியசாலைக்குக்கொண்டுசெல்லும்வரையில் அவரது உயிர் தங்குமா? என்று தெரியாது.

ஆகவே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை போருக்கு முன், போருக்குப் பின் என்ற அடிப்படையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

சமாதான காலத்தில் நெப்போட் திட்டத்தின் அடிப்படையில் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் பல அபிவிருத்திகளை செய்யக் கூடியதாக இருந்தது. அதன் பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மீண்டும் பல உதவிகள் கிடைத்திருந்தாலும் கூட அவை மிகத் தாமதமாகவே இருக்கின்றன. ஆகவே மத்திய, மாகாண அரசுகள், சுகாதார அமைச்சர்களைக் கொண்டு சாவகச்சேரி வைத்தியசாலையைமேம்படுத்தவேண்டும்.

தென்மராட்சி பிரதேச மக்களுக்கு மாத்திரமன்றி ஏனைய பிரதேச மக்களுக்கும் இவ் வைத்தியசாலை சேவையாற்றி வருகிறது. இந்த வைத்தியசாலையின் வசதிகளை மேம்படுத்துவதற்கு எங்களால் ஆன சகல முயற்சிகளையும் மேற்கொள்வோம். வைத்தியசாலை நிர்வாகம் எடுக்கின்ற முயற்சிகளையும் பாராட்டுகின்றோம். வைத்தியசாலையில் விடுதி மற்றும் கட்டட வசதிகளை ஏற்படுத்தினால் தான் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் விருப்புடன் பணியாற்ற வருவார்கள்.

அதனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு கட்டமைப்பாக மேம்படுத்த வேண்டும். அதற்கு மத்திய அரசினுடைய, அமைச்சர்களுடைய ஆதரவும், மாகாண சபையின் ஒத்துழைப்பையும் பெறுவதற்கு எங்களால் இயன்ற முயற்சிகளை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் யாழில் நேற்று காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினரும் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல்துறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ். எச்.ஹஸ்புல்லாஹ் (வயது - 64) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுக் காலை காலமானார்.

பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த இவர் பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்துள்ளார். விடுதியில் இருந்து இவர் வெளியே வராத காரணத்தினால் விடுதி அறைக்குச் சென்று பார்த்த போது அசைவின்றிக் கிடந்துள்ளார்.

உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பரிசோதிக்கப்பட்டபோது அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இவர் மாகாண எல்லை நிர்ணய ஆணைக்குழு உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளதுடன் மாகாண சபை எல்லை நிர்ணய அறிக்கையில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கூறி முஸ்லிம் மக்களுக்கு விழிப்பூட்டல் நிகழ்வுகளை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# தொலைபேசிக்கம்பத்தில் மோதி கார் விபத்து



(கரணவாய்)

நெல்லியடி நகரில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் கார் பலத்த சேதமடைந்ததுடன் தொலைபேசிக் கம்பம் ஒன்றும் முறிவடைந்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள தொலைத் தொடர்பு கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் தொலைபேசிக் கம்பம் முறிந்ததுடன் காரும் பலத்த சேதமடைந்தது.

இதில் மூவர் பயணித்த போதிலும் அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)




# முத்தமிழ் விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி- பெரியமாவடி சித்தி விநாயகர் கலை மன்ற 41ஆம் ஆண்டு நிறைவின் முத்தமிழ் விழா நாளை முதல் எதிர்வரும் 29ஆம் திகதி வரை மூன்று தினங்கள் மாலை 6.45மணிக்கு சித்தி விநாயகர் கலை அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை மாலை 6.45மணிக்கு முதலாம் நாள் நிகழ்வு நிலையத் தலைவர் மு.கதிரவேலு தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வினை ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் குடும்பத்தினர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பர்.

இந்நிகழ்வில் அறிமுக உரையை மன்றத்தின் உப செயலாளர் விஜயேந்திரன், ஆரம்ப உரையை கிராம உத்தியோகத்தர் ப.நிரஞ்சன், இசைவுரையை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.சுவீற்றா, இன்னுரையை வைத்திய கலாநிதி சு.சி.அருளானந்தம், உவப்புரையை சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் சிவமங்கை, ஊக்கவுரையை சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளர் க.சண்முகதாசன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளாக நா.நவராஜின் "வாழ்வாங்கு வாழ்தல்" நாடகம், தெ. திருவேரகனின் இசையமுதம் நிகழ்வு,த.கனிஸ்ரனின் "அடையாளம்" தனியாள் அரங்க நடிப்பு, நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "உறவுகள்" என்ற சமூக இயல் நெறி நாடகம் ஆகியன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு கலை உணர்வினை வளர்க்குமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.(இ-30)

# மகாதேவ ஆச்சிரமம்

Regd.No.HA/04/KL02 of 25.11.1980

ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

தொ.இல:021 324 3443,
077 459 4283, 077 431 9281

இலங்கை வங்கி S/AC.82791221
கிளிநொச்சி.

**ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்**
**சமாதித் திருக்கோயில் திருப்பணி.**



மெய்யன்பர்களே!
சற்குருநாதனின் சமாதித்திருக்கோயில் 25ஆனி 2018 இல் அடிக்கல் நாட்டப்பட்டு, வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றது.சற்குருநாதனின் முதலாம் ஆண்டு குருபூசைக்கு முன்னர் கும்பாபிஷேக நிகழ்வை நடத்த தீர்மானித்துள்ளோம். நிதிவளம் போதாமையால் தங்கள் வசம் நிதிப் பங்களிப்பை நாடியுள்ளோம். தங்களால் இயன்ற நிதிப் பங்களிப்பை, இலங்கை வங்கி ஊடாக அல்லது நேரில் செலுத்தி சற்குருநாதன் திருப்பணியை நிறைவு செய்வீர்களாக.

குருபாதம் பணிந்து குறைகளை போக்குவோம்.

சற்குருநாதன் பணியில்
அறங்காவலர்,
நிர்வாக உறுப்பினர்கள்.

(சி-3364)

## மணமகள் தேவை

1979, கேட்டை 8 செவ்வாய், நியூசிலாந்து சிற்சிசன் மணமகனிற்கு மணமகள் தேவை. சீதனம் தேவை இல்லை.
துர்க்கா திருமண சேவை
077 818 5978,
075 011 1122

(5458)

## வகுப்பு

கணிதம் (English Medium) Grade 6-11, Accounting(English Medium) A/L வீடு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புக்கு:
077 332 9316,
077 699 5680

(5448)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவிப்புலனற்ற 1986 இல் பிறந்த கேட்டை நட்சத்திரம். கிரகபாவம்14 உடைய சுயதொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 973 8802

(5464)

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா"

தமிழ்ப்பெருந் தலைவரும்,
இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவரும் எமதூரில் உதித்த மாபெரும் தலைவருமாகிய

அமரர் திரு.

# அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

அவர்களின் **91** ஆவது

## பிறந்தநாள் விழா



இடம்:
வலிகாமம் மேற்கு பிரதேச சபை மண்டபம்

காலம்:
26.08.2018
ஞாயிற்றுக்கிழமை
பி.ப.3.00 மணி

தலைவர்:
கௌரவ
த.துரைலிங்கம்
அவர்கள்.
(விழாக்குழுத்தலைவரும்,வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரும்)

அனைவரும் வருகை தந்து எம்து இனத்தின் பெருந் தலைவருக்கு உரிய மரியாதையினையும் கௌரவத்தினையும் வழங்கி விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.

விழா அனுசரணையாளர்கள்
பண்ணாகம் அண்ணா கலை மன்றம்,
பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

இங்ஙனம்
விழாக் குழுவினர்

(5470)

# மயூரன் ஆசிரியரின் ஜேர்மன் கல்லூரி



06.07.2018 அன்று **Goethe institute** ஆல் நடத்தப்பட்ட **"Deutsch" A1** பரீட்சையில் 61-85 வரையான அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் **Goethe Institute** அதிபரையும் மேலே உள்ள புகைப்படத்தில் காணலாம்.

**German Swiss Academy**

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C.T.B. பஸ் நிலையம் பின்புறம்)

இல.17A கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(Near New Market)

T.P: 077 645 4998

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய

## மஹோற்சவ தற்காலிக கடை அமைத்தல்-2018

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவத்தையிட்டு கீழ்வரும் கடைகளுக்கான இட ஒதுக்கீடு எதிர்வரும் 01.09.2018 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளன. கடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் காலை 9.30 மணிக்கு சமுகமளித்து வாடகைப் பணத்தினை அன்றைய தினமே முழுமையாகச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1.ஐஸ்கிறீம் கடை
2.இனிப்புக்கடை
3.கச்சான் கடை
4.புடைவைக் கடை

(சி-3300)

தொ.இல: 021 226 3074,
021 205 6644

அறங்காவலர் சபை.
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில்,
துன்னாலை வடக்கு, புலோலி

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 32
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/8801

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம் செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:IT/ பொறியியலாளர் டுபாய்
தொ.இ: B/8803

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம் செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:MIB/பிரான்ஸ் குடியுரிமை
தொ.இ: B/8804

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 23 செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:B.COM, MBA, DBF, /வங்கியாளர்
தொ.இ: B/8805

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரம் செவ் 8இல்
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8807

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:HNDE, B.COM
தொ.இ: G/8813

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 36
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8814

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 42
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:ஆசிரியர்
தொ.இ: G/8815

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# English & ICT Courses

**Sept-Oct 2018**



✓Spoken / Business English with Soft Skill & Career Guidance.
✓காரியாலய, வியாபார, ஆங்கிலம். நுண்திறனும் தொழில் வழிகாட்டியும்
2 நெறிகளுக்கும் கட்டணம் ரூபா: 4,000
✓Ms Office- ICT,equivalent to NVQ 3 கட்டணம் ரூபா: 6,000
✓100% வரை புலமைப்பரிசில் வழங்கப்படும்:
✓**For admission please contact before 5th Sept.**
✓**Main office NTI Director:-0776505580 NTI Chairman :-076 852 5406**
NORTHEREN TECHNICAL INSTITUTE J / YMCA 107, 2/1, Kandy Rd, Jaffna

(5417)

**Regional Office:**
கலைவாணி சனசமூக நிலையம்,
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.
078 700 8588

**Regional Office II:**
சங்கானை பிரதேச
இளைஞர் கழக சம்மேளனம்,
காரைநகர் வீதி, சித்தங்கேணி.
070 377 7152/ 077 843 5580

**Regional Office III:**
அறவளிக்குழு 29 கண்டி வீதி,
நுணாவில்,
சாவகச்சேரி.
076 690 0867

# மாகாண எல்லை நிர்ணய அறிக்கையை மாற்று வழியில் நிறைவேற்றுவோம்

## அமைச்சர் சு.க. சமரசிங்க உறுதி

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான எல்லை நிர்ணய அறிக்கைக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் அதனை மாற்று வழியில் நிறைவேற்றுவோமென அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கலப்பு முறையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதே சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

• கொழும்பு டார்லி வீதியிலுள்ள சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் · நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

"எல்லை நிர்ணய அறிக்கையை வாசித்த பின்னரே அதனை ஏற்றுக் கொள்வதா, இல்லையா? என்ற முடிவுக்கு நாம் வருவோம்.

ஆனால் தேர்தல் நடத்தப்படும் முறை மாற்றப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுப்பதென்பது அத்தனை இலகுவான விடயமல்ல. அவ்வாறு எடுக்க முடியாமல் போனால் அதனை நிறை வேற்றுவதற்கு ஏற்ற மாற்று வழியை நாம் கையாள்வோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சபாநாயகரால் பிரதமர் தலைமையில் நியமிக்கப்படும் ஐந்து பேர் கொண்ட குழு இரண்டு மாத காலத்துக்குள் ஜனாதிபதிக்கு முன் வைக்கும் அறிக்கையில், எல்லை நிர்ணயத்தை ஏற்றுக் கொண்டால் இதன்னை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படாது என்றும் அமைச்சர் விளக்கமளித்தார்.

மேலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட்டது போல் மாகாண சபைத் தேர்தலும் புதிய முறையில் நடத்தப்பட வேண்டுமென்பதே எமது விருப்பமென சுட்டிக்காட்டிய அமைச்சர் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை புதிய முறையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசியலமைப்புச் சபையை கோரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)



# தாய் மீது கல்வீசித் தாக்குதல்; 11 வயது சிறுவனுக்குப் பிணை

(கொழும்பு)

பொகவந்தலாவ - செல்வகந்த தோட்டப் பகுதியில் தனது தாயை கல்லால் தாக்கிய 11 வயதுச் சிறுவனுக்கு பொகவந்தலாவ பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை பிணை வழங்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவனுக்கு அவருடைய தாய் மிளகாய்த் தூள் எறிந்ததன் காரணமாக அத்திரமடைந்த சிறுவன் தனது தாயை கல்லால் தாக்கியுள்ளான்.

இதில், படுகாயமடைந்த தாய் பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவன், அயல் வீடுகளில் வேலை செய்து தனது தாய்க்கும் தங்கைக்கும் உணவு தேடிக் கொண்டு வந்து கொடுப்பதாகவும் தனது தாயின் வலது கையில் நரம்பு முறிவு ஏற்பட்டுள்ளமையால், தொழில் புரிய முடியாது எனவும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

அத்துடன், சிறுவனின் தந்தை கொழும்பில் பணி புரிந்து வருவதாகவும் இரண்டு அல்லது ஒரு வருடங்களுக்கு ஒரு முறை வந்து தனது பிள்ளைகளைப் பார்த்துவிட்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தான் பாடசாலைக்குச் செல்வதில்லையெனவும் தான் பாடசாலை செல்ல ஆசையாக இருந்தாலும் தனக்கு கற்றல் உபகரணங்களைப் பெற்றுத்தர எவரும் இல்லையெனவும் குறித்த சிறுவன் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளான்.

இதேவேளை, குறித்த சிறுவனின் வீட்டில் சமைத்து உண்பதற்கான வசதிகள் கூட இல்லையென பிரதேசமக்கள் தெரிவித்தனர்.(இ)





வரலாற்றுச் சிறப்பு மிக்க,வீரகெட்டிய நயிகல புராண ரஜமகா விகாரைக்கு நேற்று முற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி அங்கு சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் நயிகல புராண ரஜமகா விகாராதிபதி வண.முருத்தவெல சுமன நாயக்க தேரரை தரிசித்து அவரின் நலன் தொடர்பில் விசாரித்தறிந்தார்.

நிக்கினி பூரண தினத்தை முன்னிட்டு பெருமளவிலான பிரதேச மக்கள் விகாரைக்கு வருகை தந்திருந்ததுடன், அவர்கள் மிகுந்த அன்புடன் ஜனாதிபதியை வரவேற்றனர்.

ஜனாதிபதி பிரதேச மக்களின் நலன் தொடர்பில் கேட்டறிந்ததுடன், சுமுகமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (இ)

# கோத்தா மீதான குற்றச்சாட்டுக்கள் ஆவணமாக பிரதம நீதியரசருக்கு

## சட்டமா அதிபர் அனுப்பினார்

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ உட்பட ஏழு பேருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணத்தை சட்டமா அதிபர் பிரதம நீதியரசருக்கு அனுப்பியுள்ளார்.

கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள பாரிய நிதி மோசடிகளை விசாரணை செய்யும் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யும் நோக்கிலேயே இந்த ஆவணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மெதமுலன்ன டீ.ஏ.ராஜபக்ஷ நினைவுத்தூபி மற்றும் நூதனசாலையை அமைக்கும் விடயத்தில் 81 மில்லியன் ரூபாய் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறியே இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த நிர்மாணத்துக்காக கடற்படையினரின் உதவியும் பெறப்பட்டுள்ளது. அத்துடன் காணி மறுசீரமைப்பு கூட்டுத்தாபனம் 49 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாக சட்டமா அதிபரின் ஆவணம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த நூதனசாலை 2014 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.08 26

❖1768-கப்டன் ஜேம்ஸ் குக் தனது கடற்பயணத்தை இங்கிலாந்தில் இருந்து ஆரம்பித்தான்.

❖1795-திருகோணமலையின் பிரெடிரிக் கோட்டையை ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படையினர் ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றினர்.

❖1920-ஐக்கிய அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

❖1972-22 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் ஜேர்மனி, மியூனிக்கில் ஆரம்பமானது.

❖1978-முதலாவது ஜெர்மனிய விண்வெளி வீரர் சோயூஸ் விண்கலத்தில் விண்ணுக்குப் பயணமானார்.

❖1993-யாழ்ப்பாணம், கிளாலியில் இரண்டு இலங்கைக் கடற்படைப் படகுகள் கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது.

❖1997-அல்ஜீரியாவில் 60இற்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர்.

❖2006-திருகோணமலை மூதூர் கிழக்கில் இலங்கை விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் பொதுமக்கள் இருவர் பலியாகினர்.

**பிறப்புகள்**

❖1883-திரு. வி. கலியாணசுந்தரனார். தமிழறிஞர் (இ. 1953)

❖1910-அன்னை தெரேசா, நோபல் பரிசு பெற்ற மக்கெடோனிய-இந்திய அருட்சகோதரி (இ. 1997)

❖1927-அ. அமிர்தலிங்கம், ஈழத்து அரசியல்வாதி (இ. 1989)

❖1933-வி. தெட்சணாமூர்த்தி, ஈழத்து தவில் கலைஞர் (இ. 1978)

❖1934-அ. ஜெ. கனகரத்னா, ஈழத்து இலக்கியவாதி (இ. 2006)

❖1952-பொன். சிவகுமாரன், ஈழ விடுதலைப் போராட்டத்தில் நஞ்சு அருந்தி உயிர் நீத்த முதலாவது போராளி (இ. 1974)

❖1954-ராஜ்கிரண், இந்தியத் திரைப்பட இயக்குனர், நடிகர்

❖1956-மேனகா காந்தி, இந்திய அரசியல்வாதி

**இறப்புகள்**

❖1951-அபலா போஸ், வங்காள சமூக சேவகி(பி. 1864)

❖1969-எஸ். எஸ். வாசன், திரைப்படத் தயாரிப்பாளர் (பி. 1904)

❖1995-என். பி. அப்துல் ஜப்பார், சிறுகதை எழுத்தாளர் (பி. 1919)

❖2012-த. சரவணத் தமிழன், தனித்தமிழ் அறிஞர், நூலாசிரியர்

❖2014-மா. ரா., எழுத்தாளர், தமிழ்த் திரைப்பட கதை வசனகர்த்தா

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 100 | 95 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 140 | 110 | 300 |
| தக்காளி | 50 | 60 | 80 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 140 | 130 | 60 | 160 |
| கரட் | 250 | 380 | 370 | 250 | 400 |
| பூசணி | 80 | 60 | 80 | 55 | 80 |
| புடோல் | 60 | 70 | 60 | 40 | 60 |
| வாழைக்காய் | 120 | 110 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 110 | 90 | 120 |
| பெரிய வெங்காயம் | 110 | 110 | 100 | 95 | 120 |
| பாகற்காய் | 150 | 120 | 120 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 | 40 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 80 | 60 | 120 |
| பயற்றங்காய் | 120 | 120 | 80 | 70 | 160 |
| லீக்ஸ் | 160 | 100 | 110 | 90 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 80 | 60 | 100 |
| கறிமிளகாய் | 120 | 180 | 140 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 60 | 100 | 100 | 70 | 120 |
| போஞ்சி | 240 | 200 | 200 | 120 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | — | 70 | 100 |
| கீரை-1பிடி | 40 | 25 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 30 | 50 | 40 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 140 | 150 | 120 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 140 | 120 | 80 | 200 |
| முள்ளங்கி | 60 | 50 | 70 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 40 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 60 | 110 | 80 |

# மாகாண பூப்பந்தாட்ட பயிற்சி முகாம் மன்னாரில் ஆரம்பம்








உலக தமிழர் பூப்பந்தாட்ட பேரவையின் அனுசரணையுடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சும் வடக்கு மாகாண பூப்பந்தாட்ட சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த பாடசாலைகள் தேசிய பூப்பந்தாட்ட போட்டியில் கலந்து கொள்ளும் வடமாகாண பாடசாலை அணிகளுக்கான வதிவிட பூப்பந்தாட்ட பயிற்சி முகாம் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தின் உள்ளக அரங்கில் ஆரம்பமாகியது. ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் கலந்து கொண்டு பூப்பந்தாட்ட பயிற்சி முகாமை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது பயிற்றுவிப்பாளர்களாக உலக தமிழர் பூப்பந்தாட்ட கனடா கிளையின் தலைவர் ஜெயகாந்தன் கலந்து கொண்டார்.மேலும் மன்னார் மாவட்ட பூப்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவர் அருட்சகோதரர் ஏ.மனோ, உலக தமிழர் பூப்பந்தாட்ட பேரவையின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மன்னார் அணிகள் 3, வவுனியா அணிகள் 2, கிளிநொச்சி அணி 1, யாழ்ப்பாண அணிகள் 6 உள்ளடங்கலாக வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 அணிகளைச் சேர்ந்த 80 வீர,வீராங்கனைகள் குறித்த கான வதிவிட பூப்பந்தாட்ட பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். (இ)



அகில இலங்கை மக்கள் மயப்படுத்தப்பட்ட அரச திணைக்களங்களுக்கிடையேயான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி கடந்த 23 ஆம் திகதி சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் இ.போ.சபை தலைமைக் காரியாலய அணி சார்பில் பங்குபற்றிய இ.போ.வடபிராந்திய சாலையை பிரதிநிதித்துவப்படுத்தும் கி.புவி சம்பியன் சிப் பிரிவில் வேக நடைப் போட்டியில் 2 ஆம் இடம்பெற்று வெள்ளிப் பதக்கத்தை சுவிகரித்துக் கொண்டார். (க)

# குருநகர் பாடும்மீன் அணி வெற்றி



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட் டில் பிரிவு 11 அணிகளுக் கிடையிலான கால்பந்தாட்ட போட்டியொன்று அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மணற்காடு செண்.அன்ரனீஸ் அணி மோதியது. இதில் பாடும்மீன்அணி, 02:00 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. பாடும்மீன் அணிசார்பாக விசோத் மற்றும் கெயின்ஸ் தலா 1 கோலை அடித்தனர். (க-26)

# முடிவிற்க்கு வருகிறதா ரோகித்சர்மாவின் சகாப்தம்



இந்திய அணியின் துவக்க வீரரான ரோகித் சர்மா அவுஸ்திரேலியா ஏ அணிக்கு எதிரான இந்திய ஏ அணியில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளதால், அவரின் டெஸ்ட் கனவு இனி அவ்வளவு தானா என்ற கேள்வி எழுந்துள்ளது.

துவக்க வீரரான ரோகித் சர்மா ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினாலும் அவரால் இந்திய அணிக்கான டெஸ்ட் அணியில் இடம்பெற முடியவில்லை.

ரோகித் கடந்த ஒரு வருடமாக டெஸ்ட் போட்டியில் இடம்பெற முடியாமல் தவித்து வருகிறார். ரோஹித் சர்மாவிற்கு இந்திய அணியில் இடம் கொடுக்க வேண்டும் என்று அவரது ரசிகர்கள் தொடர்ந்து வைத்து வரும் கோரிக்கை வைத்து வந்தாலும் ஒவ்வொரு தொடரிலும் அவர்களுக்கு ஏமாற்றம் மட்டுமே கிடைத்து வருகிறது.

அதுமட்டுமின்றி தற்போது இங்கிலாந்து அணிக்கு எதிரான 4 ஆவது மற்றும் 5 ஆவது டெஸ்ட் போட்டிகளுக்கான அணியில் ஹனுமா விஹாரி, ப்ரிதீவ் ஷா போன்ற இளம் வீரர்கள் பலருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலாவது வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ரோகித் புறக்கணிக்கப்பட்டார்.

இந் நிலையில் ரோஹித் சர்மா மற்றும் அவரது ரசிகர்களுக்கு மேலும் ஒரு அதிர்ச்சி செய்தியாக, அவுஸ்திரேலியா ஏ அணியுடனான போட்டிக்கான இந்திய ஏ அணியில் இருந்தும் ரோஹித் சர்மா புறக்கணிப்பட்டுள்ளார்.

முதல் தர டெஸ்ட் போட்டிகளில் கூட ரோஹித் சர்மாவை புறக்கணிக்கும் வேலையை பி.சி.சி.ஐ. துவங்கிவிட்டதால் ரோஹித் சர்மா இனி டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதில் சந்தேகம் எழுந்துள்ளது. (க)

VACANCIES
பிரபல கல்லூரியின் மன்னார் கிளைக்கு
ENGLISH TEACHER
RECEPTIONIST
Call : 077-3854283
BRITISH COLLEGE OF EDUCATION
email.- britishcollegekandy@gmail
5473

உயர்தரப் பரீட்சையின் பின்னர்...
Diploma in / Spoken Full / Part time
English
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
Full time / Part time
திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
BRITISH COLLEGE of Education More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu: Tel : 021-4927497
Station Rd, Mannar. Tel : 023- 4924124
5473
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6
British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்



முல்லைத்தீவு கோட்டையை மாவீரன் பண்டாரவன்னியன் வெற்றிகொண்ட 215 ஆம் ஆண்டு வெற்றி நாள் நேற்று நினைவு கூரப்பட்டது. முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் திரு உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் கரைதுரைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேசுவரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.
(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# முல்லைத்தீவில் தமிழ் மக்களின் காணி அபகரிப்புக்கு எதிராக 28 இல் போராட்டம்

## அனைவரையும் அணி திரளுமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறும் நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு PWD சந்தியில் பேரணி ஆரம்பமாகி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை சென்றடையும். இந்தப் பேரணியில் அனைவரையும் அணி திரளுமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

தமிழர் தாயகத்தின் இதய பூமியாகிய மணலாற்றுப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவ வன்முறைகள் காரணமாக அப்பகுதிகளிலிருந்து முற்றாக வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அவ்வாறு வெளியேற்றப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் மாகாவலி அபிவிருத்திச் சபையினால் கையகப்படுத்தப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கும் செயற்றிட்டம் மிக இரகசியமாக முன்னெடுக்கப்படுகின்றது.

மகாவலி அபிவிருத்தி எனும் போர்வையில் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்படும் சிங்கள மயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவையினால் ஏற்பாடு செய்யப்படும் எதிர்ப்புப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பூரண ஆதரவு தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழர் தாயகத்தின் இதயப்பகுதியை பாதுகாப்பதற்காக மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டத்திற்கு அனைத்து தமிழ் மக்களும் அணிதிரண்டு ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)




## வீடு புனரமைக்கப்படாமையால் கொட்டில் அமைத்து வாழ்கின்றோம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றிற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட நிரந்தர வீடு காற்றினால் சேதமடைந்து நான்கு மாதங்களைக் கடந்துள்ளபோதும் குறித்த வீடு புனரமைக்கப்படாத நிலையில் மேற்படி குடும்பம் வீட்டில் வாழமுடியாது அவதியுறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாங்குளம் கற்குவாரிக் கிராமத்தில் மீள்குடியேறி வசித்து வரும் பெண்தலைமைத்துவக்குடும்பம் ஒன்றிற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட நிரந்தர வீடு உரிய முறையில் குறித்த ஒப்பந்தகாரர்களால் அமைக்கப்படாத நிலையில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் வீசிய காற்றினால் வீட்டின் கூரை தூக்கி வீசப்பட்டு சேதமடைந்தது.

இவ்வீட்டை புனரமைக்கக்கூடிய நிதி வசதி இல்லையென்றும் குறிப்பிட்ட வீட்டின் உரிமையாளரான பெண் இச்சேதமடைந்த வீட்டை புனரமைத்துத்தருமாறு கிராம அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிய போதும் இதுவரை புனரமைத்துத்தரவில்லை என்றும் இந்தவீட்டில் இருக்க முடியாத் நிலையில் தற்போது கொட்டில் ஒன்றை அமைத்தே வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், வீட்டின் கூரையைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (2-281)

## பேருந்து நடத்துநர் மீது தாக்குதல்

### மூவர் கைது

(பனிக்கன்குளம்)


வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்று அதிகாலை 3 மணியளவில் தனியார் பேருந்து நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொண்ட தனியார் வங்கியில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பதுளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் தரித்து நின்ற சமயத்தில் நடத்துநர் அதிகளவு கட்டணம் பெற்றுள்ளதாக தெரிவித்து நடத்துநர் மீது அப் பேருந்தில் பயணம் மேற்கொண்ட தனியார் வங்கியின் உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர் உட்பட மூவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இத் தாக்குதலில் காயமடைந்த நடத்துநர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொண்ட மூவரையும் கைது செய்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## 30 அடி ஆழமான கிணற்றில் வீழ்ந்த இளைஞன் மயிரிழையில் உயிர்தப்பினான்



(பனிக்கன்குளம்)

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் 30 அடி ஆழமான கிணற்றில் வீழ்ந்த இளைஞன் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது. இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா உக்கிளாங்குளம் முதலாம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றின் கிணற்றை சுத்தப்படுத்தும் நோக்கில் இளைஞன் ஒருவர் கிணற்றினுள் இறங்கி சுத்தம் செய்துவிட்டு கிணற்றின் மேல் பகுதிக்கு ஏறி அப் பகுதியை அடைந்த போது கை நழுவியதில் 30 அடி உயரமான பகுதியிலிருந்து கீழே வீழ்ந்துள்ளார்.

விழுந்ததும்சுயநினைவை இழந்துள்ளார். எனினும் கிணற்றருகே நின்ற குடும்பத்தினர் கூச்சலிடவும் அயலவர்கள் விரைந்து இளைஞனை மீட்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த அவசர அழைப்பு (1990) அம்புலனஸ் வண்டி மூலம் பாதிக்கப்பட்ட இளைஞனை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர் என்பதும்குறிப்பிடத்தக்கது. (2-281)

# ஆளுநர்கள் வசமுள்ள மாகாண சபைகளுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்

## சிறிநேசன் எம்.பி. வலியுறுத்து



(கொழும்பு)

உடனடியாக தேர்தலை நடத்த வேண்டுமாயின் பழைய தேர்தல் முறையே சாத்திய மானதாக இருக்கும். மீண்டும் மீண்டும் திருத்தங்களை மேற்கொண்டவாறு இருந்தோமானால் கால தாமதங்களே ஏற்படும்.

எனவே கலைக்கப்பட்டு ஆளுநர்கள் வசமுள்ள அனைத்து மாகாண சபைகளுக்கும் உடனடியாக தேர்தலை நடத்தி அவற்றை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதிய தேர்தல் முறைக்கான எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பான வாக்கெடுப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இனவாரிப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கு ஓர் முடிவு கட்ட வேண்டும் என்பதற்காகவே 1931 ஆம் ஆண்டில் வட்டார முறையிலான பிரதிநிதித்துவ முறையினை எமது நாட்டிற்கு ஆங்கிலேயர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

இருந்தும் இம்முறையில் கட்சிகள் பெறுகின்ற வாக்குகளுக்கு ஏற்ப ஆசனங்கள் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு காணப்பட்டமையால் 1978 ஆம் ஆண்டில் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல்முறை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இந்த விகிதாசார தேர்தலில் உள்ள விருப்பு வாக்கு முறைமையால் பல பிரச்சினைகள் காணப்படுவதாகத் தெரிவித்தே அத்தேர்தல் முறையானது திருத்தப்பட்டு விகிதாசார முறையில் 40 வீதமும் வட்டார முறையில் 60 வீதமுமாக கலப்பு முறையில் கடந்த உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட்டன.

இந்த தேர்தல் முறையை கோட்பாடு ரீதியாக சிந்திப்பதிலிருந்து செயற்பாட்டு ரீதியாக பார்க்கும் போது பல குறைபாடுகளைக் கொண்டுள்ள ஓர் தேர்தல் முறையாகவே காணப்படுகின்றது.

இலங்கையில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பாலான சபைகள் அறுதிப் பெரும்பான்மையை பெறுவதில் சிக்கல் நிலையை எதிர்நோக்கியுள்ளன.

அத்துடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்கனவே விகிதாசார முறையில் தமிழர்கள் பெற்று வந்த வாக்குகள், ஆசனங்களைக்கூட இந்த புதிய தேர்தல் முறையில் இழக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஆசனங்களை இழப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

ஏற்கனவே கலைக்கப்பட்டு மக்களால் தெரிவு செய்யப்படாத ஆளுநர்கள் வசம் உள்ள அனைத்து மாகாண சபைகளுக்கும் உடனடியாக தேர்தலை நடத்தி அவற்றை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

அவ்வாறு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டுமாயின் பழைய தேர்தல் முறையே சாத்தியமானதாக இருக்கும். எனவே இந்த எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிராகவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வாக்களிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சிறப்பு அதிரடிப்படை மீது சரத் சரமாரி குற்றச்சாட்டு



(கொழும்பு)

பொலிஸ் சிறப்பு அதிரடிப் படை கட்டளை அதிகாரி லதீப் தொடர்பாக அமைச்சர் பீல்ட்மார்சல் சரத் பொன்சேகா நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்தினால் நாடாளுமன்றத்தில் சர்ச்சை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சரத் பொன்சேகா, தமது ஆதரவாளர்கள் பலர் அண்மையில் சோடிக்கப்பட்ட மற்றும் பொய்யான சாட்சியங்களின் அடிப்படையில் சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சிறப்பு அதிரடிப்படை கட்டளை அதிகாரி லதீப் உள்ளிட்ட சில அதிகாரிகளின் பெயர்களை குறிப்பிட்டு உரையாற்றிய அவர், 2016 ஆம் ஆண்டு உறுகொடவத்தையில் கைப்பற்றப்பட்ட கொக்கேய்ன் கொள்கலனுடன் லதீப்பின் மைத்துனருக்குத் தொடர்பு உள்ளதாகவும் குற்றம்சாட்டினார்.

பாதாள உலகப் பிரமுகர் மஞ்சு அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதை குறித்து சிறப்பு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். பொலிஸ்துறைக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு அதிக சுதந்திரத்தைக் கொடுத்துள்ளது. அதனை சில பொலிஸ் அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்றும் தெரிவித்தார்.

இதையடுத்து சரத் பொன்சேகா கூறிய குற்றச்சாட்டுகள் உண்மையானால் அது பாரிய பிரச்சினையாக இருக்கும்என்று விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரிகளின் பெயரைக் குறிப்பிட்டு சரத் பொன்சேகா நிகழ்த்திய உரை சர்ச்சைக்குரியது என்று ஒப்புக் கொண்ட சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சர் நளின் பண்டார, இதுகுறித்து சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஏற்கனவே கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் சுதந்திரமான விசாரணைக்காக இந்த விடயம் அரச புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்பப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# நல்லூர் ஆலயச் சூழலில் தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில்தினமும்மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணி வரை தெய்வீக இசையரங்கு நடைபெறுகிறது.

வீணை இசை:

இதில் இன்று வீணை-கு.கல்யாணி, உ.சௌமியா, வி.அம்சத்வனி, மிருதங்கம்-க.சுவாமி நாதசர்மா.

இசைக்கச்சேரி:

பாட்டு-ரஜீந்திரன் சரசாஹித்யன், வயலின்-எஸ்.தியாகரன், மிருதங்கம்-எஸ்.கமலதாஸ், கடம்-ஞா.வசந் ஆகியோர் வழங்குவர். (இ)

# கந்தபுராண எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் "கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" என்ற தொனிப் பொருளில் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவகாலத்தை முன்னிட்டுக் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா-2018 நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில் பதினொராம் நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறும். சாவற்கட்டு அந்திக்குளி ஞானவைரவர் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அட்சராத்மானந்த மகராஜ் திருமுன்னிலையில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களக் கணக்காளர் மா.கோ.காண்டீபன் தலைமையில், கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலைச் சிரேஸ்ட விரிவுரையாளர் மு. கௌரிகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க, வேலணைப் பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நீர்வேலி, அரசகேசரிப் பிள்ளையார் கோவில் சிவஸ்ரீ தியாக. மயூரகிரிக் குருக்களின் "தீவினை நீக்கி உய்ந்தான்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் நல்லூர் ஸ்ரீஸ்கந்தபதிக் கலாமன்றக் குழுவினரின் குழு இசை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறும்.

உற்சவகாலச் சிறப்புச் சொற்பொழிவின்போது பத்து வினாக்கள் அடங்கிய வினாக்கொத்து அன்றைய நிகழ்வுச் சொற்பொழிவினை உள்ளடக்கியதாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு அன்றைய தினமே விடைத்தாள்கள் மாணவர்களிடமிருந்து பெறப்படும். முதல் இருபது நாட்களிலும் விடையளித்த மாணவர்களில் முன்னிலை பெறும் ஐந்து மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் ஏனைய மாணவர்களுக்கு பெறுமதியான கற்றல் உபகரணங்களும் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# யாழ்.சின்மயா மிஷனில் இன்று "முருக தத்துவம்" அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால் "முருக தத்துவம்" என்ற தலைப்பில் இன்று இரவு 7.15 மணி முதல் 8.00 மணி வரை, இல. 700, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் இடம்பெறும்.(இ)

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று பதினொராம் திருவிழா



## நலம் அருள்வாய்

பார்வதியின் பாலகனே
பன்னிரு கை வேலவனே
ஆறுபடை வீடு கொண்ட
ஆறுமுகப் பெருமானே
அண்டிவரும் அடியவர்கள்
அனுதினம் உனை வணங்க
அருள் தந்து காப்பவனே
ஆனைமுகன் தம்பியே
நாள்தோறும் உனைத் தொழுவோம்
நலம் அருள்வாய் நல்லூரானே

சி.திவ்வியா

## நல்லூரில் நல்லாட்சி கூட்டுகிறாய்

நல்லூரில் நல்லாட்சி கூட்டுகிறாய்
நாள்தோறும் புதுக்காட்சி காட்டுகிறாய்
நாளும் ஒரு வாகனத்தில் நீ வரும் திருக்காட்சி
கோலமயில் வாகனனே கொள்ளை அழகக்காட்சி
தனிப் பெரும் வேலாய் அசைந்தும் வந்திடுவாய்
தெய்வயானை வள்ளியொடு இசைந்தும் நீ வருவாய்
உலகெல்லாம் உன்னோடு சேர்ந்துவரும் கோலம்
உவப்பாகத் தரும் நல்லூர் கந்தன் திருவிழாக்காலம்


புலோலியூர்
வேல் நந்தன்

## நல்லைக் குமரப் "பா"

அருண கிரியார் நாவினிலே
அழகாய் வேல்கொண் டேயெழுதி
உருகி மயக்கும் திருப்புகழை
உயர்வாய்ச் சந்தந் விந்தையுடன்
பெருகிப் பாயச் செய்துகவிப்
பேற்றை யெங்கும் விதைத்தவனே
விரிவாய் இந்நும் தமிழோங்க
விழைவாய் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்





முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்ற நிலையில் நேற்று முன்தினம் ஆலயத்தில் சப்பறத் திருவிழா நடைபெற்றது. இன்றைய தினம் தீர்த்தத் திருவிழாவும் நாளையதினம் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெற்று ஆலய உற்சவம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- பனிக்கன்குளச் செய்தியாளர்)

# வவுனியாவில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட நபர் கைது



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் சாப்பாட்டு கடை ஒன்றில் மறைத்து வைத்து சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட நபரை வவுனியா உதவிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஜ.குமாரசிங்க தலைமையின் கீழுள்ள புலனாய்வுப் பிரிவினருக்குக்கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து நாலேமுக்கால் போத்தலுடன் சாராயமும் 48பியர் ரின்களும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போயா தினமான நேற்று சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனையில் ஈடுபட்டுள்ள நபர் ஒருவர் தொடர்பாக புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸாருடன் இணைந்து மேற்கெரள்ளப்பட்ட நடவடிக்கையின் போது வவுனியாமகாறம்பைக்குளம் ஸ்ரீராமபுரம் பகுதியிலுள்ள கடை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டு மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது. இதையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது அக் கடையில் மறைத்து வைத்து வியாபாரம் மேற்கொண்டு வருவது தெரியவந்துள்ளது.

விற்பனைக்குத்தயாராக வைக்கப்பட்டிருந்த நாலேமுக்கால் போத்தலுடன் சாராயமும் 48 பியர் ரின்களும் கைப்பற்றப்பட்டதுடன் 43 வயதுடைய சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட மதுபானப் போத்தல்களையும் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந் நடவடிக்கையின் போது பொலிஸ் சார்ஜன், பொலிஸ் கொஸ்தாபல்கள் ஆகியோர் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-281)

# வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்ட காணியில் அபிவிருத்தி வேலைகள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையின் மேலதிக கடடுமானப் பணிகளுக்காக 10 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் இதன் கட்டுமானங்களை விஸ்தரிப்பதற்கான போதிய இடவசதி தற்போது வைத்தியசாலை அமைந்துள்ள பகுதியில் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த வைத்தியசாலையில் குறிப்பிட்ட சில சிகிச்சைப் பிரிவுகளையும் கட்டுமா னங்களையும் அமைப்பதற்கான பொருத்தமான காணி கோரப்பட்டு வந்த நிலையில் புதுக்குடியிருப்பு-பரந்தன் ஏ-35 வீதியின் கைவேலி பகுதியில் 10 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டு வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட நிலையில் இக் காணியில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (2-315)




# வேகக்கட்டுப்பாட்டை இழந்த கனரக வாகனம் விபத்துக்குள்ளானது

## சாரதி, உதவியாளர் படுகாயம்



(பனிக்கன்குளம்)

யாழ்ப்பாணம் நோக்கி நேற்று அதிகாலை பயணித்துக்கொண்டிந்த கனரக வாகனம் ஒன்று கனகராயன் குளம் கொள்ளர்புளியங்குளம் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. இதன்போது வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர்படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நித்திரைத் தூக்கமே விபத்துக்குக் காரணம் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# கற்சிலைமடு சுற்றுலா மையம் திறந்து வைப்பு



(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டு சுற்றுலா அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கற்சிலைமடு பகுதியில் 4 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கற்சிலைமடு சுற்றுலா மையம் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந்தினால் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் நாடாவை வெட்டித்திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந்த் மற்றும் சபை உறுப்பினர்கள், முல்லை. மாவட்ட பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் ஜே.ராஜமல்லிகை, புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலாளர், பண்டார வன்னியன் அறங்காவல் அமைப்பின் உறுப்பினர்கள், புதுக்குடியிருப்புப் பிரதேச சபை ஊழியர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(2-281)

# மாதிரிக்கிராமத்துக்கு அடிக்கல் நாட்டல்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மூங்கிலாறு கிராமத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான 36 ஆவது மாதிரிக் கிராமத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

குறித்த பகுதி கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந்த், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரதீபன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் விஜிதகமகே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தனர். நிகழ்வில் வீட்டுப் பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.(2-281)

# ஒட்டுசுட்டானில் அபிவிருத்திப்பணிகள்; 25 இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசசபைக் குட்பட்ட சின்னச்சாளம்பன் பகுதியில் விளையாட்டு மைதானமொன்றுக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான காதர் மஸ்தானினால் பத்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச இளைஞர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இடம்பெற்ற இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச சபை உறுப்பினர் சத்திய சுதர்சன், இளைஞர் கழகங்கள், ஊர்மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்திற்கு கௌரவ பிரதி அமைச்சரின் ஏற்பாட்டில் பதினைந்து இலட்சம் ரூபாய்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# 864 காணி அனுமதிப்பத்திரங்கள் துணுக்காயில் இதுவரை வழங்கல்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் இதுவரை 864 காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 864 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை பிரதேச சபைக்குரிய காணிகளைப் பாரப்படுத்துவதற்காக மாகாண காணி ஆணையாளரின் சிபாரிசுக்கு 27 காணிகளின் ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்காக 500 விண்ணப்பப்பத்திரங்கள் இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

> தமிழீழத்தைப் பற்றி கனவு கண்டிருந்தபோது எனது கோவணமும் காணாமல் போய்விட்டது.
>
> – யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நிலம் இருந்தால்தான் எதையும் செய்ய முடியும்

காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும் என்பது பாரதியாரின் கோரிக்கை.

பாரதியாரின் இந்தக் கோரிக்கை வித்தியாசமானது என்று யாரேனும் கருத முடியும்.

புரட்சிக் கவிதையானது சுதந்திர தாகத்தை விதைக்கும் கவிஞனாக விளங்கிய பாரதி எதற்காக, காணி நிலம் வேண்டும் என்று பராசக்தியிடம் வேண்டினான் என்ற கேள்விக்கான விடையின் பொருள் அற்புதமானது.

அதாவது பாரதியின் வாழ்வுக் காலத்தில் இந்திய தேசம் அந்நியராட்சியில் அகப்பட்டிருந்தது.

நிலபுல உரிமை அனைத்தும் இன்னொருவரின் கைக்குள் இருந்தபடியால், நிலத்தின் தேவையை இந்திய மக்கள் உணரமுடியாதவர்களாக இருந்தனர்.

இந்நிலையில் நிலத்தின் தேவையை அதன் அவசியத்தை பாரத மக்களிடம் ஏற்படுத்துவதற்காக பாரதி ஒரு புதுவிதியைப் படைக்கின்றான்.

அதுதான் காணிநிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும் என்ற கவி வரியாகும்.

சொந்தமாகக் காணி நிலம் இருப்பதில் ஒரு பெரும் திருப்தி ஏற்படுகிறது.

தவிர, அந்த நிலத்தில் தென்னைகளும் பயிர்களும் இருப்பதென்பது நிலத்தின் மீதான பற்றையும் விருப்பையும் ஏற்படுத்தும்.

எனவேதான் பராசக்தியிடம் காணி நிலமும் அதில் பத்துப் பதினைந்து தென்னைகளும் வேண்டும் என்று கேட்பதனூடாக நிலத்தின் உரிமையை – அதன் சொந்தத்தை பாரதி வலியுறுத்துகின்றான்.

அன்றைய சூழ்நிலையில் காணி நிலத்தைப் பராசக்தியிடம் கேட்பதனூடாக; மக்களிடம் தேசப்பற்றை ஏற்படுத்தும் உபாயமாக பாரதியின் மேற்போந்த பாடல் வரிகள் அமைகின்றன.

இவ்வாறாக பாரதியின் இப்பாடல் இந்திய தேசத்தில் பிறந்தவர்களை சொந்த நிலத்தில் தென்னைகளும் பயிர்களும் வைத்து சுதந்திரமாக வாழுகின்ற ஒரு சூழ்நிலைக்குள் கொண்டு வருகின்றான்.

பாரதியின் காணி நிலம் வேண்டும் என்ற பாடலை எவரும் சுயநலம் சார்ந்த பாடலாகக் கருதிவிடக்கூடாது என்பது நம் தாழ்மையான கருத்து.

இவை ஒருபுறம் இருக்க, நிலம் என்பதை இழந்துவிட்டால்; அது உரிமையை இழப்பதற்குச் சமானமானது.

அதனால்தான் நிலம் இருந்தால் எதையும் நாம் செய்து கொள்ள முடியும் என்று தந்தை செல்வநாயகம் கூறியிருந்தார்.

ஆக, எங்கள் தாயகம் என்பது நிலத்தின் எல்லைப் பரப்பைக் குறிப்பதாகும்.

அவ்வாறு எங்கள் தாயகம் தமிழர் தேசம் என்று குறித்தொதுக்கப்பட்ட நிலத்தை – காணியைக் காப்பாற்றுவது எங்கள் இனத்தையும் மொழியையும் எங்கள் எதிர்காலச் சந்ததியையும் காப்பாற்றுவதற்கு ஒப்பானது என்பதால்,

அரசியல் பேதம் கடந்து எங்கள் நிலத்தைக் காப்பாற்ற நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிலத்தின் உரிமைக்கான குரலை உரக்க எழுப்ப வேண்டும்.

ஆம், முல்லைத்தீவில் நடந்த காணி வழங்கல் தமிழர் தாயகத்துக்குள் நுழைகின்ற நுட்பம். இதனை முளையிலேயே கிள்ளுவது கட்டாயமானதாகும்.

# 36 ஆயிரத்துக்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் நாடளாவிய ரீதியில் இனங்காணப்பட்டுள்ளனர்

## டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு அறிவிப்பு

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 785 ஆல் அதிகரித்துள்ளதாகவும் இவ் வருடத்தின் ஆரம்பம் முதல் ஒகஸ்ட மாதத்தில் இதுவரையில் 36 ஆயிரத்து 7 நோயாளர்கள் நாடளாவிய ரீதியில் இனங்காணப்பட்டுள்ளனர்.

மேலும் ஒகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 2788 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கொழும்பு உள்ளிட்ட கம்பஹா ஆகிய மாவட்டங்கள் மற்றும் கண்டி மாவட்டத்திலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.

இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதல் இதுவரையில் கொழும்பு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 937 நோயாளர்களும் கொழும்பை அண்மித்த மாவட்டமான கம்பஹாவில் 3 ஆயிரத்து 619 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த தகவல்களின் அடிப்படையில் 35.4 வீதமான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேல் மாகாணத்தில் பதிவாகின்றன.

மேலும் கண்டி மாவட்டத்தில் இதுவரையில் 2 ஆயிரத்து 563 நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். இம்மாதத்தில் மாத்திரம் ஒட்டுமொத்தமாக 2 ஆயிரத்து 788 நோயாளர்கள் நாடளாவிய ரீதியில் இனங் காணப்பட்டுள்ளதுடன் சுற்றுச் சூழல் பேணப்படாமை, முறையான வைத்திய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளாமையுமே இவ்வாறு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணம் என அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

# 2 மாதங்களுக்குள் அறிக்கை கையளித்தால் ஜனவரியில் தேர்தல்

## மேலதிக தேர்தல் ஆணையாளர்

சபாநாயகரால் நியமிக்கப்படும் பிரதமர் தலைமையிலான குழு, தனது அறிக்கையை இரண்டு மாதங்களுக்குள் கையளிக்குமானால் ஜனவரி மாதத்தில் மாகாண சபை தேர்தலை நடத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளின் எல்லை நிர்ணய குழுவின் செயலாளர் மற்றும் மேலதிக தேர்தல் ஆணையாளர் சமன்ஸ்ரீ ரத்நாயக்க ஆகியோர் இதனை தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும், குறித்த காலப்பகுதியில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் பைசர் முஸ்தபாவினால் அதற்கான சட்ட திருத்தங்கள் நிறைவேற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன், வடக்கு மாகாண சபை கலைக்கப் படுகின்ற ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதியில் குறித்த அறிக்கை வழங்கப்படுமாயின், ஆறு மாகாண சபைகளின் தேர்தலையும் ஒன்றாக நடத்த முடியும் என மேலதிக தேர்தல் ஆணையாளர் சமன்ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (ம)

## முச்சக்கரவண்டி - கார் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

(கரணவாய்)

சந்நிதி கோவிலுக்கு சென்றவர்களின் முச்சக்கர வண்டியை கார் மோதியதில் அதில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை இரவு 7.00 மணியளவில் வல்லை உப்புரோட் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதில் இமையாணன் பகுதியைச் சேர்ந்த சோதிலிங்கம் (வயது-48) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

வீட்டில் இருந்து முச்சக்கரவண்டியில் பயணித்த அவர்கள் உப்புரோட் சந்தியால் சந்நிதி கோவில் பக்கம் திரும்ப முற்பட்டபோது யாழில இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்த கார் மோதி விபத்துக்குள்ளானதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

## புல்லுமலையில் யானை தாக்கி ஒருவர் பலி!

(புல்லுமலை)

மட்டக்களப்பு - பதுளை வீதி புல்லுமலை பிரதேசத்தில் 45 வயதுடைய நபர் ஒருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளர்.

மண் அகழ்வில் ஈடுபட்டுக கொண்டு இருந்தவர்களுக்கு காவல் காத்தவருக்கே நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் யானை தாக்கி யுள்ளது.

உயிரிழந்தவர் 45 வயதுடையவரென்றும் மயிலம் பாவளியைச் சேர்ந்தவர் என்றும் முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

குறித்த நபரின் சடலம் செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டுள்ளனா என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## புத்தகப் பூங்கா இன்றும் நாளையும்

(யாழ்ப்பாணம்)

சமயப்பணியாளரும் சமூக சேவையாளரும் யாழ்.நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் பழைய மாணவியுமான அமரர் சின்னராசா சந்திரவதனாவின் ஞாபகார்த்தமாக சக்தி கலாசார அபிவிருத்தி மன்றம் மற்றும் யாழ்.பொதுசன நூலக நடமாடும் சேவை Book Lab ஆகியன இணைந்து நடத்தும் ''புத்தகப்பூங்கா'' இன்றும் நாளையும் யா/நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இ.சனுஜா தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்க ழக ஊடகவியல் துறைத் தலைவர் கலாநிதி சு.ரகுராம், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இளைய தம்பி இரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக யா/நாயன்மார்க்கட்டு மகேஸ்வர வித்தியாசாலை அதிபர் சொ.லோகேஸ்வரன், ஓய்வு நிலை திட்டப்பணிப்பாளர் சிவசாமி ஐயர் ரவீந்திர சர்மா, கௌரவ விருந்தினர்களாக ஜே/94 கிராம உத்தியோகத்தர் ராமலிங்கம் தவரெட்ணம், இலங்கை போக்குவரத்துச்சபை ஓய்வு நிலை உத்தியோகத்தர் சின்னத்தம்பி சின்னராசா, யா/நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளர் க.சசிக்குமார், சமூகசேவையாளர்அ.இருதயநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

## பெண் கைதி மரணம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் பெண் கைதி ஒருவர் நேற்று முற்பகல் உயிரிழந்துள்ளார்.

அண்மையில் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, காயமடைந்த பெண் கைதியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக, சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.

எனவே, குறித்த பெண் கைதியின் மரணம் தொடர்பில் மரண விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்து, பொறளை பொலிஸ நிலையத்தில் அவர்கள் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர். (ம)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- உங்களிடம் உள்ளதை எல்லாம் பிறருக்கு கொடுத்துவிட்டு பிரதிபலன் எதிர்பாராமல் வாழுங்கள்.
- நாம் உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் கடவுளுக்காகவே. அனைத்திலும் எப்போதும் கடவுளையே காணுங்கள்.
- ஒரு எஜமானனைப் போல கடமையைச் செய்யுங்கள். அடிமையைப் போல இருக்காதீர்கள். சுதந்திர உணர்வுடன் பணியாற்றுங்கள்.
- சாகின்ற நிலையிலும் கூட நாம், ஒருவர் யார் எப்படிப்பட்டவர் என்று கேள்வி கேட்காமல் உதவி செய்வதுதான் கர்மயோகம்.
- சுதந்திர உணர்வு இல்லாத வரையில் மனதில் அன்பு தோன்றுவதில்லை. அடிமையாகி விட்டால் உண்மையான அன்புக்கு இடமே இல்லை.
- ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலைகளைச் செய்து கொண்டே இருங்கள். ஆனால் வேலைகளுக்குள் கட்டுப்பட்டு விடாதீர்கள்.
- வாழ்வில் மனிதன் உயர வேண்டுமானால் கடுமையான சோதனைகளைக் கடந்து சென்றாக வேண்டும்.

# விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசால் பாரிய செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

விவசாயிகள் முகம் கொடுத்த துயரச் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பாரிய செயற்றிட்டங்கள் இடம்பெற்று வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

16 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் வயம்ப எல செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் பொல்பித்திகமவில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எல்லங்கா குளக் கட்டமைப்புடன் தொடர்புடைய 2400 கிராமியக் குளங்களை புனரமைக்கும் செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் பொல்பித்திகம கும்புகுலாவ குளத்தருகில் இடம்பெற்றது.

விவசாயிகள் நீண்டகாலமாக முகம்கொடுத்து வந்த நீர்ப் பிரச்சினைக்கு துரித செயற்றிட்டத்தின் மூலம் தீர்வு எட்டப்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி விவசாயிகளிடமிருந்து அதிக விலைக்கு நெல் கொள்வனவு செய்வதற்காக நெல் விநியோக சபை பாரிய பங்களிப்பை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

மகாவலி நீரை வடமேல் மாகாணத்திற்குக் கொண்டு செல்லும் வடமேல் கால்வாய் செயற்றிட்டத்தினூடாக நீர்ப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட வடமேல் மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மாற்றியமைக்க முடியுமென்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சூழல் அழிப்பின் காரணமாக எதிர்நோக்க நேர்ந்துள்ள விளைவுகள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நாடுகளின் வரிசையில் நான்காம் இடத்தில் இலங்கை இருப்பதாக தெரிவிக்கும் ஆய்வுகளையும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஐம்பது வருடங்களுக்கு முன் 97ஆவது இடத்தை வகித்த இலங்கை இன்று இவ்வாறான நிலைமையை எதிர்நோக்க நேர்ந்ததன் காரணம் வியாபாரிகளால் மேற்கொள்ளப்படும் பாரிய சுற்றாடல் அழிப்பு எனத் தெரிவித்த ஜனாதிபதி நிலம் பாலைவனமான பின் எதிர்கால சந்ததிகள் நீரைத்தேடி வெகுதூரம் செல்ல நேரும். அவ்வகையான துர்ப்பாக்கிய சம்பவம் நேர்ந்தால் காடழிப்புக்கு உடந்தையாக இருந்த அனைவரும் அதற்கு பொறுப்புக் கூற வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மகாவலி செயற்றிட்டத்தில் உள்ளடங்காத, மகாவலி நீரை வடமேல் மாகாணத்திற்குக் கொண்டு செல்லும் செயற்றிட்டம் மொரகஹகந்த-களுகங்கை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மற்றுமொரு பலனாக ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் 2016 ஆம் ஆண்டு இது ஆரம்பிக்கப்பட்டது.

இச்செயற்றிட்டம் முடிவடைந்ததன் பின்னர் 105,000 ஏக்கர் அடி மகாவலி நீர் வருடம் முழுவதும் குருநாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம, எஹெட்டுவெவ, கல்கமுவ, மாஹோ மற்றும் அம்பன்பொல ஆகிய பிரதேசங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அதன் மூலம் அப்பிரதேசங்களில் இருபோகங்களுக்கும் பயிர்ச் செய்கைக்கான நீர் கிடைக்கப்பெறுவதுடன். அப்பிரதேச மக்களின் குடிநீர்த் தேவையும் பூர்த்தி செய்யப்படும்.

வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களின் மீஓய, ஹக்வட்டுனாஓய, கலாஓய ஆகிய குளங்களை அண்மித்து இருக்கும் 315 சிறிய குளங்களும், 08 பிரதான குளங்களும் மகாவலி நீரால் பலனடைகிறது. அதற்காக அமைக்கவிருக்கும் பிரதான கால்வாய் 92 கிலோ மீற்றர் நீளமுடையதாகும்.

2400 கிராமிய குளங்களை புனரமைப்பு செய்யும் எல்லங்கா குளக் கட்டமைப்பு செயற்றிட்டம் என்பது உலர் வலயத்தில் தற்போது செயலிழந்து காணப்படும் எல்லங்கா குளக்கட்டமைப்பினை மீண்டும் புனரமைப்பு செய்து அப்பிரதேச மக்களுக்கு நீர்ப்பாசனத்திற்கு தேவையான நீரைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகும்.

இலங்கையின் கிராமங்களை மையப்படுத்திய நீர்ப்பாசன தொழில்நுட்பமான எல்லங்கா கிராமிய குளக்கட்டமைப்பு முறை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாயம் பற்றிய அமைப்பினால் உலகின் முக்கியமான விவசாய மரபுரிமையாக இனங்காணப்பட்டுள்ளது.

இலங்கைக்கே உரித்தான இந்த பாரம்பரிய விவசாயத் தொழில்நுட்பத்தின் ஊடாக இந்நாட்டின் விவசாயத் துறையையும் விவசாய பொருளாதாரத்தையும் புத்துயிர் பெறச் செய்யும் நோக்குடன் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இச்செயற்றிட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தில் மாத்திரம் 300 குளங்கள் புனரமைப்பு செய்யப்படவுள்ளதுடன், பொல்பிட்டிகம, கும்புகுலாவ குளத்தின் புனரமைப்பு செயற்பாடுகளை ஆரம்பிப்பதன் ஊடாக இந்த செயற்றிட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகின்றது.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து வடமேல் கால்வாயின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடமேல் கால்வாய் அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான அலுவலகமும் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது.

சிறுநீரக நோய் பரவலாக காணப்படும் பிரதேசங்களுக்கு தூய குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட 09 நீர் சுத்திகரிப்பு தொகுதிகளை டிஜிற்றல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் ஊடாக ஜனாதிபதி திறந்து வைத்தார்.

அமைச்சர்களான காமினி ஜயவிக்ரம பெரேரா, எஸ்.பி. நாவின்ன, துமிந்த திசாநாயக்க, மகிந்த அமரவீர மற்றும் வடமேல் மாகாண மக்கள் பிரதிகள், ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்க, செயற்றிட்டத்தின் பொறியியலாளர்கள், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர உள்ளிட்ட பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ)

# போர்க்கப்பலை பொறுப்பேற்க அமெரிக்கா சென்று ஏமாந்த இலங்.பாதுகாப்பு அதிகாரிகள்



(வோஷிங்டன்)

அமெரிக்க கடலோரக் காவல்படையிடம் இருந்து 'யுஎஸ்சிஜிசி ஷேர்மன்' என்ற போர்க்கப்பலைப் பொறுப்பேற்க ஹவாய்க்குச் சென்றிருந்த இலங்கை பாதுகாப்பு செயலர் கபில வைத்தியரத்னவும், கடற்படைத்தளபதி அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவும் ஏமாற்றத்துடன் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க கடலோரக் காவல்படையின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட 'யுஎஸ்சிஜிசி ஷேர்மன்' என்ற போர்க்கப்பலை இலங்கை கடற்படைக்கு வழங்க அமெரிக்கா இணங்கியிருந்தது.

இதற்கமைய, ஹவாயில் உள்ள ஹொனொலுலு துறைமுகத்தில் அந்தப் போர்க் கப்பலில் மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்ததுடன், அதில் இலங்கை கடற்படையினர் பயிற்சிகளையும் பெற்று வந்தனர்.

இந்தக் கப்பல் இலங்கை கடற்படையிடம், கடந்த புதனன்று அதிகாரபூர்வமாக அமெரிக்க அதிகாரிகளிடம் கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைப் பொறுப்பேற்பதற்காக, இலங்கை பாதுகாப்பு செயலர் கபில வைத்தியரத்னவும், கடற்படைத் தளபதி அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவும் ஹவாய்க்குச் சென்றிருந்தனர்.

அவர்கள் 'யுஎஸ்சிஜிசி ஷேர்மன்' போர்க்கப்பலுக்குச் சென்றிருந்த போதும், அதனைக் கையளிக்கும் நிகழ்வு திட்டமிட்டபடி நடைபெறவில்லை. ஹவாய் தீவு தற்போது லேன் என்ற சூறாவளியினால் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தச் சூறாவளி கடந்த புதனன்று ஹவாயை நோக்கி வந்து கொண்டிருந்ததால், அங்கு அதற்கான தயார்ப்படுத்தல்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டன.

இதனால், 'யுஎஸ்சிஜிசி ஷேர்மன்' கப்பலை இலங்கையிடம் கையளிக்கும் நிகழ்வை அமெரிக்க அதிகாரிகள் பிற்போட்டனர்.

இந்த நிகழ்வு பிற்போடப்பட்டதால், இலங்கை பாதுகாப்பு செயலர் கபில வைத்தியரத்னவும் கடற்படைத் தளபதி அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவும் ஏமாற்றமடைந்தனர்.

எனினும், இம் மாத இறுதியில் "யுஎஸ்சிஜிசி ஷேர்மன்" இலங்கை கடற்படையிடம் அதிகாரபூர்வமாக கையளிக்கப்படும் என்றும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் கொண்டு வரப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# விபத்தில் இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -நுணாவில் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் துவிச்சக்கரவண்டியும்-மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதில் நுணாவில் மேற்கைச் சேர்ந்த 32 வயது மோ.சர்மிலன், மீசாலையைச் சேர்ந்த ஆ.விநாயகமூர்த்தி ஆகியோரே காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

# கலப்பு தேர்தல் முறையை மாற்ற முயற்சிப்போர் ஜனநாயக துரோகிகள்

## அமைச்சர் பைசர் காட்டம்



(கொழும்பு)

தொகுதிவாரி முறையையும் உள்ளடக்கிய கலப்பு முறையான தேர்தல்முறையை மாற்ற முயற்சிப்பவர்கள் ஜனநாயக துரோகிகளாவார்கள் என மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா குற்றஞ்சாட்டினார்.

தேர்தல் முறையை இனவாதக் கோணத்தில் பார்க்க வேண்டாம் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். மாகாண சபைகளின் தேர்தல் தொகுதி எல்லைகளை நிர்ணயிப்பதற்கான குழுவின் அறிக்கை மீதான விவாதத்தை நாடாளுமன்றில் நேற்று முன்தினம் ஆரம்பித்து உரையாற்றும் போதே அமைச்சர் பைசர் முஸ்தபா இதனைத் தெரிவித்தார்.

கலப்பு முறையினால் இனத்துக்கான பிரதிநிதித்துவம் கிடைக்காது என சில கட்சிகள் கூறினாலும், கட்சிக்கான பங்கு கிடைக்கவில்லையென்பதே அவர்களின் முக்கிய கவலையாகும். இவ்வாறான கட்சிகள் தேசிய கட்சிகளைப் பிடித்துத் தொங்குவதற்கு முயற்சிப்பதாகவும் அமைச்சர் குற்றஞ்சாட்டினார்.

விருப்புவாக்கு முறை மோசடி நிறைந்த முறை என்பதாலேயே ஜனநாயகத்தை நிலைநாட்ட தொகுதிவாரி முறையையும் உள்ளடக்கிய கலப்பு முறையை கொண்டு வந்தோம்.

சில கட்சிகள் இனவாதக் கோணத்தில் இதனைப் பார்க்கின்றன. நாடு ஏற்கனவே பாரிய இன முரண்பாட்டுக்கு முகங்கொடுத்திருப்பதால் மீண்டும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்தார். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் உள்ளூராட்சி தேர்தலுக்கு கலப்பு முறையை கொண்டு வந்த போது அதனை பாராட்டி உரையாற்றியவர்கள் தற்பொழுது அந்த முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். விருப்பு வாக்குமுறையினால் கடந்த காலங்களில் கட்சிகளுக்குள் மோதல் ஏற்பட்டன.

இந்தமுறை தொடர்ந்தும் நீடித்தால் கல்விமான்கள் மாகாண சபைகளுக்குத் தெரிவுசெய்யப்படமாட்டார்கள்.

எல்லை நிர்ணயக் குழுவினை அமைச்சர் என்ற ரீதியில் நான் அமைக்கவில்லை. இந்தக் குழுவில் அழுத்தம் கொடுக்க எனக்கு அதிகாரம் இல்லை. அது மாத்திரமன்றி இந்தக் குழுவின் அறிக்கை என்னுடைய சொந்த அறிக்கை அல்ல. சட்டமொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு மாதகாலத்துக்குள் நிறைவேற்றப்படாவிட்டால் அதன் உள்ளடக்கங்களில் மாற்றம் ஏற்படாது எனவும் தெரிவித்தார். (இ)

## நாடளாவிய ரீதியில்...

பிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நாட்டில் 11 மணிநேரம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில், பல குற்றங்களுக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 700 பேர் உள்ளிட்ட 3099 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சுற்றிவளைப்பு நேரத்தில் போக்குவரத்து விதிகளை மீறிய 4967 குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசாங்கத்துக்கு எதிராக...

வரும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

மக்களின் பிரச்சினைகளை மறந்து செயறபட்டு கொண்டிருக்கும் இந்த நல்லாட்சி அரசாங்கத்துக்கு எதிராக நல்லதொரு பாடத்தைப் புகட்டுவதற்கு எதிர்வரும் செப்ரெம்பர் 5ஆம் திகதி கொழும்பில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெறவுள்ளத்தாகவும் மகிந்த ராஜபக்ஷ எம்.பி மேலும் குறிப்பிட்டார். (ம)

## துன்னாலை பகுதியில்...

மோட்டார் குண்டுகளை நெல்லியடி பொலிஸில் விஷேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

துன்னாலை குடத்தனையை அண்டிய காட்டுப் பகுதியில் மோட்டார் குண்டுகள் இருப்பதாக விஷேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று சனிக்கிழமை மாலை அப்பகுதிக்கு சென்ற விஷேட அதிரடிப்படையினர் ஐந்து மோட்டார் குண்டுகளையும் மீட்டு நெல்லியடி பொலிசில் ஒப்படைத்துள்ளனர்.

மீட்கப்பட்ட மோட்டார் குண்டுகள் 60 மில்லிமீட்டர் வர்க்கத்தை சேர்ந்தவை என தெரிவிக்கப்பட்டது. (ம-60)

## ஜனாதிபதி மைத்திரி...

மெதமுலனவிற்கு ஜனாதிபதி சிறிசேன மேற்கொண்ட விஜயத்தின்போது இடம்பெற்ற கலந்துரையாடலில், ராஜபக்ஷ தரப்பினருடன் அரசியல் விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவில்லையென ராஜபக்ஷ தரப்பினருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய சகோதரர் சந்திரா ராஜபக்ஷவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று சனிக்கிழமை காலை மெதமுலனவிலுள்ள ராஜபக்ஷாக்களின் பாரம்பரிய வாசஸ்தலத்திற்கு ஜனாதிபதி சிறிசேன சென்றிருந்தார்.

இந்த விஜயத்தின் போது முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் வரவேற்றதுடன் கலந்துரையாடலிலும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதியின் சகோதரரின் மறைவு தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டதாகவும் அரசியல் விடயங்கள் ஏதும் கலந்துரையாடப்படவில்லை என்பதை தன்னால் உறுதிப்படுத்த முடியும் என்றும் முன்னாள் ஜனாதிபதியின் உதவியாளரொருவர் தெரிவித்தார்.

கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்து வெளியேறியதன் பின்னர் மெதமுலனவிற்கு ஜனாதிபதி மைத்திரி மேற்கொண்ட முதலாவது விஜயம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## பிரதமர் ரணில்...

தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் ஏனைய நாட்டு அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார் எனவும் கூறப்படுகின்றது.

குறித்த மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் மற்றும் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசியல் தீர்வுக்கு...

வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணிக் கூட்டம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிலையில் அக்கூட்டத்தில் பங்கேற்க கூடாதென முக்கிய சில காரணங்களை சுட்டிக்காட்டி வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடத்தில் கடிதம் மூலம் கோரியிருந்தார். எவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழு பங்குபற்றுவதாக ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி செயலணியில் படையினருடன் இணைந்து செயற்படுவதானது அரசியல் தீர்வு உட்பட பல விடயங்களில் பாதிப்பினை ஏற்படுத்தும் என வடமாகாண முதலமைச்சர் மீண்டும் சுட்டிக்காட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏகமனதாக பங்கேற்கும் முடிவுக்கு பதிலளிக்கும் வகையில் அறிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் இவ்விடயங்கள் குறித்து எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலணியில் குறைகள் காணப்படுவதாக கூறிக்கொண்டு அச்செயலணியில் நேரடியாக பங்கேற்பதன் மூலம் குறைகளை சுட்டிக்காட்டி அதற்கான தீர்வுகளைக் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் என்றே நாம் கருதுகின்றோம். அத்துடன் இச்செயலணியில் பங்கேற்பதையும் அரசியல் தீர்வுக்கு உத்வக்கூடிய வகையில் சாதகமாக மாற்றியமைப்பதற்கு முயற்சிப்போம் என்ற நம்பிக்கையை கொண்டிருக்கின்றோம் என்றார். (ம)

## நல்லூர் கந்தசுவாமி...

சுவாமி மாலை 6 மணிக்கு மஞ்சத்தில் ஆரோகணித்தார்.

வழமை போன்று கற்பூர பந்தங்கள் அலங்கரிக்க, ஆயிரக்கணக்கான அடியவர்கள் சூழ முத்துக்குமார சுவாமி மஞ்சத்தில் வீதியுலா வந்தார். (ம)

## மாகாண சபைத் தேர்தலை...

க்கு அமைய செயற்படுவது அவசியமாகும் என தெரிவித்த சபாநாயகர் கருஜயசூரிய.

எந்தக் காரணத்திற்காகவும் மாகாண சபைத் தேர்தல் ஒத்தி வைக்கப்படக்கூடாது என வலியுறுத்தினார்.

கட்சித் தலைவர்களுக்கு மேலதிகமாக தேர்தல்கள் ஆணைக்குழு எல்லை நிர்ணய ஆணைக்குழு என்பனவற்றின் தலைவர்களுடன் சபாநாயகர் இதன் போது கலந்துரையாடினார். (ம)

## 2 பவுண் சங்கிலி...

கணக்கான பக்தர்கள் சூழ நடைபெற்றது.

நேற்றைய தேர்த்திருவிழாவின் போது பக்தர்களின் நெரிசலை சாதகமாகப் பயன்படுத்தி 23 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவர் வயோதிப பெண்மணி ஒருவரின் 2 பவுண் தங்கச்சங்கிலியை அறுக்க முயற்சி செய்துள்ளார்.

இதனை அவதானித்த அங்கு நின்ற அடியவர்கள் அவ் இளைஞனை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ம-17)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற தயார்

### சீன அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு அப்பகுதிகளில் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சீனா முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் பல்வேறு அபிவிருத்தி செயற்பாட்டு திட்டங்கள் சீனாவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் வடக்கு, கிழக்கு மக்களும் அதன் பயன்களை பெறவேண்டுமென்ற நோக்கத்தில் இச்செயற்பாட்டினை சீனா மேற்கொள்ள முன்வந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை வடக்கு, கிழக்கு பகுதிகளில் அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியம் தொடர்பாக கொழும்பிலுள்ள சீன தூதுவராலயத்தின் அரசியல் பிரிவின் தலைவர் லுவா சொங் குறிப்பிட்டுள்ளதாவது,

தென் பகுதிகளுக்கு மாத்திரமின்றி வடக்கு கிழக்கு பகுதிகளிலும் வீடுகள் மற்றும் வீதி நிர்மாண பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அப்போதுதான் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மக்களுக்கு அதன் பயன்களை பெற்று தங்களது வாழ்வாதாரத்தை முன்னேற்றிக்கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும்.

மேலும் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னர் பாரிய மாற்றத்தினை தற்போது காணக்கூடியதாக உள்ளது.

இதனால் வடக்கு, கிழக்கு மக்களும் நாட்டில் இடம்பெறுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகளை அனுபவிக்க வேண்டியது அவசியம் என லுவா சொங் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

# முன்னாள் கடற்படைத்தளபதிகள் இருவரை கைது செய்ய நடவடிக்கை

### குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவிப்பு

சட்ட மா அதிபரின் ஆலோசனை கிடைக்குமானால், முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவையும், தற்போதைய முப்படைகளின் அலுவலக பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவையும் கைது செய்ய சி.ஐ.டி தயாராக இருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து 2008ஆம் ஆண்டு 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வேனில் கடத்திச் சென்று, சட்டவிரோதமாக தடுத்து வைத்து, கப்பம் பெற்றமை மற்றும் காணாமல் ஆக்கியமை தொடர்பில், நேரடியாகவோ, மறைமுகமாகவோ பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எனும் அடிப்படையில் இவர்கள் இருவர் குறித்தும் குற்றப் புலனாய்வுப் பிரிவு சாட்சிகளை சேகரித்துள்ள நிலையிலேயே, அது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாகவும் அவ்வாலோசனை கிடைக்குமாயின் அவர்கள் இருவரும் உடன் கைது செய்யப்படுவர் எனவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (ம)

# மகிந்த குழு தேர்தல் வருவதை விரும்பவில்லை-மகிந்த அமரவீர

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க் கட்சியும் தேர்தல் வேண்டும் என கூக்குரல் இட்டதற்கு, தேர்தல் ஒன்று வருவதை உண்மையில் விரும்பாதவர்களாகவே உள்ளதாகவும், இதன் உண்மை நிலை நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற எல்லைநிர்ணய அறிக்கை மீதான வாக்கெடுப்பின் போது தெளிவாகவே வெளிப்பட்டதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

தேர்தல் ஒன்று விரைவாக வேண்டுமாக இருந்திருந்தால் அவர்கள் அறிக்கைக்கு ஆதரவாக வாக்களித்திருக்க வேண்டும். இருப்பினும் அவர்கள் அவ்வாறு செய்ய வில்லை.

அரசாங்கத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில் எதிர்வரும் ஜனவரி மாதம் தேர்தல் ஒன்று வரவேண்டும் என்பதில் தீர்மானமாகவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (ம)

## எல்லை நிர்ணய...

பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் எடுத்தமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும் என கபே அமைப்பின் நிறைவேற்று அதிகாரி கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு, சப்ரகமுவ, வட மத்திய மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் செயற்படுகின்றது. இது எதிர்வரும் ஒக்டோபர் மாதமாகும் போது ஆறாக அதிகரிக்கும்.

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் கடந்த 2015 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலை மாத்திரமே விருப்பத்துடன் நடத்தியது. கடந்த 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பாரிய அழுத்தங்களின் பின்னரே அரசாங்கம் நடத்த முன்வந்தது.

நாட்டுக்கு நல்லாட்சியையும் ஜனநாயகத்தையும் எடுத்து வருவதாக வாக்களித்த அரசாங்கம் தேர்தலை பிற்போட்டு வருவது வெட்கப்பட வேண்டிய ஒன்று எனவும் அவர் கூறியுள்ளார். (ம)

## தேர்தல் பரிந்துரைகளை...

நியமிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கட்சி பிரநிதிகளின் இணக்கத்துடன் ஐவர் அடங்கிய குழு, சபாநாயகர் கரு ஜயசூரியவினால் நியமிக்கப்படவுள்ளது.

பிரதமரைத் தவிர, குழுவில் நியமிக்கப்படும் ஏனைய உறுப்பினர்கள் அரசியலுடன் தொடர்பற்ற புத்திஜீவிகள் என சபாநாயகர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற செயற்குழு கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக சபாநாயகர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. -(ம)


க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான

**Personal Class மற்றும் Group Class கற்றுத்தரப்படும்.**

இடம் :- யாழ்ப்பாணம் (தமிழில்)

P.Surash (இணைந்த கணிதம்)
No:-077 896 4706

A.Praveen (இரசாயனவியல்)
No:-077 860 2325



**சுபிரி வாசனா**

திகதி 2018/08/25
சீட்டிழுப்பு இலக்கம் 1354
எழுத்து 20 | வெற்றி இலக்கம் 07 20 28 59 | முதலாம் போனஸ் இலக்கம் 04 | இரண்டாவது போனஸ் இலக்கம் 03

தேசிய லொத்தர் சபை

**சேவன**

திகதி 2018/08/25
சீட்டிழுப்பு இலக்கம் 112
ஆங்கில எழுத்து S | வெல்லப்பட்ட இலக்கங்கள் 19 23 62 65

தேசிய லொத்தர் சபை

**ஜாதிக சம்பத**

சீட்டிழுப்பு திகதி 25-08-2018
சீட்டிழுப்பு இலக்கம் 868
ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கங்கள் 3 6 6 6 7 8

தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**

திகதி 2018.08.25
சீட்டிழுப்பு இலக்கம் 1862
ஆங்கில எழுத்து G | வெல்லப்பட்ட இலக்கங்கள் 34 35 47 68

தேசிய லொத்தர் சபை

## நல்லாட்சி அரசாங்...

அவர் ஊடகங்களுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே இதனைக் குறிப்பிட்டார். இதன்போது, இலங்கையில் முன்னைய ஆட்சியில் இடம்பெற்றதைப் போன்று இல்லாவிட்டாலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

அத்தோடு, எந்த ஆட்சியில் உரிமை மீறல்கள் நடைபெற்றிருந்தாலும், அதற்குப் பொறுப்புக்கூறவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நல்லாட்சி அரசாங்கத்தில் பேச்சுச் சுதந்திரம் காணப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், இதுவரை காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் மனித உரிமை ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.(ம)


### மாடி வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைதியான சூழலில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்கு உண்டு. (4 அறைகள், 2 பெரிய ஹோல், 2 குளியலறைகள், சமையலறை, 2 வாகனங்கள் விடக்கூடிய வாகனத்தரிப்பிடம், நன்னீர் வசதி உட்பட) விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு: 077 503 5549**

(5460)



### CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

(C-3570)



### FLC FRENCH LANGUAGE CENTRE

# பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 01.09.18 சனி 8 மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி
021 320 2973
ஆரம்பம் 03.09.18 மாலை 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(C-3549)



### விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-3569)



### கடைகள் விற்பனைக்கு உண்டு

வவுனியா மில் வீதியில் அடுத்தடுத்துள்ள இரண்டு கடைகள் விற்பனைக்கு உண்டு.

குறிப்பு:- ஒரே கடையாகவும் பயன்படுத்த முடியும்

நீளம் - 85 அடி
அகலம் - 12 அடி } ஒரு கடைக்குரியது

தொடர்புகளுக்கு:- **078 678 0145** (5355)



### ஆடை வடிவமைப்பாளர்கள் தேவை

137, Post box, Junction Palaly Road, Thirunelvely இல் இயங்கி வரும் நியூ டிலான் ரெக்ஸ் ரெயிலர்களுக்கு ஆடை வடிவமைப்பாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தேவை. வெளிமாவட்ட வேலை ஆட்களுக்கு தங்குமிட வசதிகளும் வழங் கப்படும்.

**தொடர்புகளுக்கு:**

**0771387239, 0212214184**

(5465)



### வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-3561)



### உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
24 மணி நேரத்திற்குள்

கொழும்பு ⇄ யாழ்ப்பாணம்

காப்புறுதி செய்யப்பட்ட வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவையும் உண்டு

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|
| 7.30 | 8.00 | 8.30 | 10.00 | 12.30 |

| Document | 25 -100Kg | 200 + Kg | 500Kg above |
|---|---|---|---|
| 100 Rs | 12 Rs /kg | 10 Rs /kg | 8 Rs /kg |

தொடர்புகளுக்கு: 0771271892

216 - கஸ்தூரியார் வீதி , யாழ்ப்பாணம்.




(சி-3636)



### உத்தரவாத FRENCH பாசை பயிற்சி

நாளுக்கு 1:30 மணி வீதம் கிழமைக்கு 4:30 மணி நேர வீதப்படி மூன்று மாதங்களில் FRENCH பாசை சாதாரணமாக பேசவும், எழுதவும் பயிற்சி வழங்கப்படும்.

**குறிப்பு:**

- இப்பயிற்சி எங்கள் இடத்திலோ தங்கள் இடத்திலோ வழங்கப்படும்.
- இம்மூன்று மாத பயிற்சி காலமானது ஆங்கில அறிவுகொண்டவர்களுக்கும், ஆசிரியர் பயிற்சியின் பின் சுயமுயற்சி பயிற்சி செய்பவர்களுக்கும் மட்டுமே பொருத்தமானது.

**தொடர்பு: 0759396600**

(C-3574)



# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

## Excellent Teachers' Panel & Individual Attention

**Diploma / Advanced Diploma in English**
ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என விரிவாகக் கற்பிக்கப்படும்.

**IELTS (Academic / General ) Student Migration Visa**
மூலம் செல்பவர்களது Approved Centre for Registering Online (ORS) Candidates

**IELTS Life Skills A1 Exam - Sponsor / Settlement Visa**
மூலம் UK செல்பவர்களுக்கு British High Commission னால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

**Spoken English With Grammar - Quick Learning Course**
குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமானதாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

**Spoken Sinhala**
சிங்களத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்கு உகந்த முறையில் கற்பிக்கப்படும். மாணவர்கள், தொழில் புரிவோர், சிங்களம் கற்க விரும்புவோர் அனைவருக்கும்

**Diploma in Sinhala**
ஓரளவு சிங்கள அறிவு உள்ளவர்கள் மேலும் சிங்கள அறிவை விருத்தி செய்ய, சிங்களத்தினை மேலும் விரிவாகக் கற்றுக் கொள்ள விரும்புவோர்களின் தெரிவு.

**யாழ்ப்பாணத்தின் முன்னணி ஆங்கில கல்லூரி**

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட 30% கட்டணக் கழிவுகளுடன் பாடநெறிகள் ஆரம்பம்

**No.15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna**

**Tel: 021 222 4550/ 076 536 7818**

(C-3635)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி


சங்குநாதம்

நாதம் 180

விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 26.08.2018 தொலைபேசி : 021 222 3378








# வெடுக்குநாறிச் சிவனே!

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## பூநாறி மரத்தில வெடிக்காத செல்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

எங்கட அரசியல் பிரச்சினையும் சரிவராது போல. விதானையார் விசுவலிங்கம் மனம் சலித்தவராய் கூறினார்.

விதானையாரின் சலிப்பு ஆலடியில் இருந்த அனைவருக்கும் உடன்பாடாக இருந்தது. எனினும் நம்பிக்கையைத் தளர விட்டால் எல்லாம் அம்போ என்றாகிவிடும் என்பதால் பண்டிதர் பரமலிங்கம் விதானையாரின் சலிப்பை ஆற்றுப்படுத்த முற்பட்டார்.

**பண்டிதர்:** தமிழ் மக்களின்ர பிரச்சினையைத் தீர்க்காவிட்டால், இலங்கையைப் பாதுகாக்க தமிழ் மக்களின் உதவியை இலங்கை அரசாங்கம் நாடவேண்டிவரும் என்று எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா கூறி இருக்கிறார். ஆகையால எல்லாவற்றுக்கும் ஓர் எல்லை உண்டு. நாங்கள் எப்பவும் நம்பிக்கையோட இருப்பம். பண்டிதரின் ஆற்றுகை விதானையாரின் மன ஆதங்கத்துக்கு ஒத்தடம் கொடுத்த மாதிரியாக இருந்திருக்கும் போல.. விதானையார் மௌனமாகினார்.

விதானையாரின் மௌனத்தால் ஆலடியில் நிலவிய நிசப்தத்தைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:** யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவின்ர யாழ் விருது சந்நிதியான் ஆச்சிரம இயக்குநர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. சுவாமிகளுக்கு எங்கட வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்வோம்.

**கங்காணி:** சாத்திரியார் சொல்லத்தான் ஞாபகம் வருகுது. சைவசமய விவகாரக் குழுவின்ர யாழ் விருது வழங்கல், நல்லைக் குமரன் வெளியீடு என்ற இரண்டு நிகழ்வுக்கும் நான் போயிருந்தனான். நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடந்தன.

இந்த நிகழ்வில யாழ். மாநகரசபை முதல்வர் ஆனல்ட் உரையாற்றும் போது; இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று கூறினால், இலங்கையில் இருக்கிற பஞ்ச ஈச்சரங்களைக் கட்டிக் கொடுத்தது யார் என்றொரு கேள்வியை கேட்டிருந்தார்.

அவரின் இந்தக் கேள்வி மிகுந்த அர்த்தமுடையது. சைவ ஆலயங்கள் போதும் இலங்கையில தமிழ் மன்னர்களின் ஆட்சி இருந்தது என்பதற்கு. அந்த அடிப்படையிலதான் யாழ். மாநகர முதல்வர் மேற்படி கேள்வியை முன்வைத்திருந்தார்.

**பண்டிதர்:** உள்ளூராட்சி அமைப்புக்கள் இப்ப உற்சாகத்தோட வேலை செய்யிறதைப் பார்க்க முடியுது.

**விதானையார்:** கடும் போட்டியில உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி நிர்வாகம் அமைந்தபடியால் போட்டி போட்டுச் சேவையாற்ற வேண்டிய தேவை இருக்குது.

**வாத்தியார்:** இளம் பிள்ளைகள் உள்ளூராட்சி சபைகளில இடம்பெற்றிருப்பதும் சேவை திறமையாக நடப்பதற்கு ஒரு காரணம் எண்டு நினைக்கிறன்.

அண்மையில எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் பளைப் பிரதேச சபைக்குப் போயிருந்தார். அங்க சுரேன் என்பவர் தவிசாளராக இருக்கிறார்.

உப தவிசாளராக கஜன் பணிபுரிகிறார். ஒரு வீதிப் பிரச்சினை பற்றிக் கதைத்த போது உடனடியாக அந்த வீதியைப் பார்க்கிறதற்கு உப தவிசாளர் கஜன் நேரில வந்தார் என்று அந்த அன்பர் என்னிடம் சொல்லிப் பெருமைப்பட்டார்.

இப்படி சேவை மனப்பாங்குள்ள இளைஞர்கள் சபையில இருக்கிறது உண்மையில வரவேற்க வேணும்.

**மூப்பர்:** உண்மைதான். ஒவ்வொரு பிரதேச சபைகளும் தத்தம் பணிகளை ஒழுங்காகச் செய்தால் அது எங்கட மக்களுக்கு ஓர்ளவேனும் ஆறுதலைக் கொடுக்கும்.

**கங்காணி:** பளையைப் பற்றிக் கதைக்கத்தான் ஞாபகம் வருகுது. பளை பஸ்தரிப்பு நிலையத்தில டிப்பர்களை பார்க் பண்ணிறதால போக்குவரத்து பஸ்கள் பயணிகளை ஏற்றாமல் ஏ-9 வீதியால வேகமெடுக்கிறதாகப் பலரும் சொல்லுகினம்.

ஆகையால இது தொடர்பில போக்குவரத்துப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து, பளை பஸ் தரிப்பு நிலையத்தில டிப்பர்கள் தரித்து நிற்பதைத் தடுக்கிறதோட டிப்பர்களைப் பார்க் பண்ணக் கூடிய பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்து கொடுக்கவும் வேணும்.

**மூப்பர்:** கங்காணியார் சொல்லுறது முழுக்க முழுக்க உண்மை. பளையில மட்டுமல்ல பொதுவில பொருத்தம் இல்லாத இடங்களில வாகனங்களை நிறுத்திறதால பயணிகளும் பாதசாரிகளும் மிகப்பெரும் கஷ்டங்களை அனுபவிக்கினம். இது தொடர்பிலும் போக்குவரத்துப் பொலிஸாரின் கவனம் தேவை.

**சாத்திரியார்:** அதுசரி வேலணைப் பிரதேச சபையும் சாட்டிக் கடற்கரையை கவனத்தில எடுக்கவேணும். சாட்டிக் கடலில ஏகப்பட்டவர்கள் நீராடினாலும் உடை மாற்றுகின்ற இடங்கள் செம்மையில்லாமல் இருக்குது. இது பற்றிக் கடந்த முறையும் இவ்விடத்தில பிரஸ்தாபித்திருந்தனாங்கள். இது தொடர்பில சேர்மன் கருணாகர குருமூர்த்தி உரிய நடவடிக்கை எடுப்பார் என்று நம்பிறம். சாட்டிக் கடலில அடையிற கடற் சாதாளையை ஒழுங்கா அகற்ற வேணும்.

எப்பவும் இடங்களைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம்தான் மக்களைக் கவரமுடியும்.

**விதானையார்:** எனக்குத் தெரிந்த ஓர் அன்பர் சொன்னவர் கே.கே.எஸ். வீதியில இருக்கிற பூநாறிச் சந்தியில இருக்கிற பூநாறி மரத்தில வெடிக்காத செல்லொன்று மரத்திற்குள்ள குத்தியிருக்குதாம். இப்ப அந்தச் செல்லை மரம் தனக்குள்ள எடுத்து வெளியில மறைச்சுப் போட்டுது.

எண்டைக்காவது ஒரு நாள் அந்த மரத்தை தறித்தால் அண்டைக்கு அந்தச் செல் வெடிக்கும். இதால அநியாயமான மரணங்கள் ஏற்படலாம்.


எனவே பூநாறி, மரத்தில இருக்கிற செல்லை எடுத்து அதனைச் செயலிழக்கச் செய்யவேணும்.

இது தொடர்பில சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேணும்.

இவ்வாறு விதானையார் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**





# மக்களின் நம்பிக்கை வீண்போகக்கூடாது

காணாமல்போனோர்தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அவசியப்படுமானால் சர்வதேச உதவிகள் பெற்றுக்கொள்ளப்படுமெனத் தெரிவித்திருக்கும் காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் அலுவலகத்தின் இடைக்கால அறிக்கை இம்மாதம் 30 ஆம் திகதியன்று ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் கையளிக்கப்படவிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார். சர்வதேச காணாமல் போனோர் தினம் எதிர்வரும் 30 ஆம் திகதியென்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி அலுவலகம் மேற்கொண்டு முன்னெடுக்கவிருக்கும் விடயங்கள் குறித்து நேற்று முன்தினம் அவர் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தியிருக்கிறார்.



காணாமல்போனோர் விடயத்தில் எமது அலுவலகம் என்ன செய்ய முடியும்? என்பதை தனித்து எதனையும் கூறமுடியாதெனவும், இது விடயத்தில் தடைகளை விட சவால்களே அதிகம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். இந்தச் சவால்களை வெற்றிகொள்வதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நீண்ட காலமாகக் காணப்படும், மன அவலங்களை ஏற்படுத்தியிருக்கும் காணாமல் போனோர் விடயத்தில் எடுத்த எடுப்பில் எந்தத் தீர்வையும் முன்வைக்கக்கூடிய சாத்தியம் இல்லை என்பதையே சாலிய பீரிஸின் தகவல் வெளிப்படுத்தியிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

1983 முதல் இதுவரையில் 21 ஆயிரத்துக்கும் கூடுதலானோர் காணாமல் பேயிருக்கலாமென அண்ணளவான தரவுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதுதான் சரியான எண்ணிக்கை என்று உறுதியாகக் கூறவியலாது. ஆய்வுகளும், விசாரணைகளும் தொடர்வதால் இறுதி எண்ணிக்கையை முழுமையான அறிக்கை வெளிவரும் போதே அறிந்துகொள்ள முடியும். இந்தப் பணி கடுமையான தென்பதை மறுத்துரைக்க முடியாது. என்றாலும் கூட சாத்தியமான சகல வழிகளையும் மேற்கொண்டு முழுமையான அறிக்கையை தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கூடுதலாக காணாமலாக்கப்பட்டவர்கள் வடபுலத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்களின் உறவுகள் நீண்டகாலமாக கண்ணீர் சிந்தியவாறு அழுது புலம்பிக்கொண்டிருக்கின்றனர். அப்படிக் காணாமல் போனோர் குறித்த் உண்மையான தகவல்களையாவது தமக்குப் பெற்றுத் தருமாறு உறவுகள் வலியுறுத்தி வருகின்றனர். இது விடயத்தில் அரசு பாராமுகமாகச் செயற்பட்டு வருவதாகவே உறவுகள் குற்றம் சுமத்தி வருகின்றனர். ஜனாதிபதியும், பிரதமரும் நீதி கிடைக்கச் செய்வோமென உத்தரவாதமளித்திருப்பதால் அந்த உறவுகள் ஓரளவு நம்பிக்கையுடன் காணப்படுகின்றனர். காலம் தாழ்த்தாமல் தமக்குத் தீர்வு பெற்றுத்தருமாறு உறவுகள் நல்லாட்சி அரசைக் கேட்டிருக்கின்றனர்.

இதன் பொருட்டே அரசு காணாமல் போனோர் குறித்து விசாரிப்பதற்கான குழுவை அமைத்தது. 6 மாதங்கள் கடந்த நிலையிலும் பூரணமான அறிக்கையை தயாரிக்க முடியாத நிலைக்கு குழு தள்ளப்பட்டுள்ளது. காணாமல் போனோரின் எண்ணிக்கை 21 ஆயிரம் எனக் கூறப்படுகின்றபோதும் அது சரியான தரவாகக் கூற முடியாது என குழுவின் தலைவர் கூறியிருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். 30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருப்பது இடைக்கால அறிக்கை மட்டுமே. விசாரணைகளை முன்னெடுப்பதில் பல நெருக்கடிகள் காணப்படுவதை அவர் சுட்டிக்காட்டுகிறார். இதனை தடைகளாக அவர் கருதவில்லை. சவால் என்றே கூறுகின்றார். சவால்களை வெற்றிகொள்ள சில மாற்று வழிகளைக் கையாளப் போவதாகவும் கூறுகின்றார்.

பல்வேறு தரப்புகளிலு மிருந்து முரண்பாடான தகவல்கள் வெளியிடப்படுவதால் விசாரணைக் குழுவால் தீர்க்கமானதொரு முடிவை எட்ட முடியாத நிலை உருவாகியுள்ளது.

எனவே தான் சர்வதேச உதவிகளைப்பெற ஆலோசிப்பதாக சுட்டிக்காட்டப்படுவதை வரவேற்கவே வேண்டும். எந்த வழியிலேனும் காணாமல்போனவர்களின் உறவுகளுக்கு ஓரளவு தானும் மன ஆறுதலைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டை அரசு கொண்டிருப்பதை இங்கு சுட்டிக்காட்டியாக வேண்டும்.

இந்த இடைக்கால அறிக்கையிலும் சில பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது எனினும் முழுமையான அறிக்கை வந்த பின்னரே பரிந் துரைகளை நிறைவேற்றக்கூடியதாக இருக்கும். எனவே மேலும் காலம் கடத்தாமல் துரிதமாக விசாரணைகளை முன்னெடுத்து முழுமையான அறிக்கையைக் கையளிக்கப்படுவதோடு பரிந்துரைகளையும், நிறைவேற்றப்படக் கூடிய விதத்தில் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

காணாமல்போனோர் பற்றிய தகவல்களை இது வரையில் வெளியிடாத வர்களுக்கு மற்றொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை அரசியல் மயப்படுத்தி அதில் ஆதாயம் தேட முற்படாமல் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் நிம்மதி யடையவும், அவர்களுக்கு நியாயம் கிடைக்கவும் சகலரும் ஒத்துழைக்கவேண்டும். உண்மையை கண்டறிதலிலும், நீதியை நிலைநாட்டுவதிலும் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அடுத்த வாரம் வெளியிடப்படும் இடைக்கால அறிக்கையில் கூட இது குறித்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் முதற்கட்ட நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்படுவது அந்த உறவுகளுக்கு ஆறுதல் தரக்கூடியதாக அமையலாம்.

எனவே காணாமல்போனோர் குறித்த விசாரணைக் குழு மீது பாதிக்கப்பட்ட மக்களும், நாடும் கொண்டிருக்கும் நம்பிக்கை வீண்போய்விடக் கூடாது. 30 ஆம் திகதிக்குப் பின்னரான அடுத்தகட்ட நகர்வுக்கு இடைக்கால அறிக்கை சாதகமாக அமைய வேண்டுமென்பதே சகலரதும் எதிர்பார்ப்பாகும்.

ஆரோக்கியமான இந்த முயற்சி நல்ல சாதகமான பலனை ஏற்படுத்தி உறவுகளின் கண்ணீருக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படவேண்டியது கட்டாயக் கடப்பாடாகும்.




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில்
உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

## மறவாதே



பெற்ற தாயை மறவாதே
பேணும் தந்தையை மறவாதே

கற்ற குருவை மறவாதே
கடவுள் எண்ணம் மறவாதே

கல்வியை என்றும் மறவாதே
கற்றதைச் செய்ய மறவாதே

நல்லவர் சொல்லை மறவாதே
நாட்டு பணியை மறவாதே

ஒழுக்கம் தன்னை மறவாதே
உண்மை பேசு மறவாதே

**து.நிசாதனா**
**யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்,**
**தரம்-06**
**எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,**
**ரோகிணி வீடு**

## விடுகதைகள்

**1. கீழே வீசினால் மேலே வருவான். அவன் யார்?**

**2. உயர உயரப் பறப்பான். அவன் யார்?**

**3. ஒரு குப்பிக்குள் இரண்டு தைலம். அது என்ன?**

**4.வயிறு நிறைந்தால் வானத்தில் பறப்பான். அவன் யார்?**

**5. பச்சைப் பெட்டிக்குள் தங்கக் கட்டிகள். அது என்ன?**

**விடைகள்:**
**1. பந்து 2. பட்டம் 3. முட்டை**
**4.பலூன் 5.பலாப்பழம்**

**மெ.நிரோசினி.**
**தரம்-2பி**
**யாழ்.இந்து மகளிர் கல்லூரி.**
**எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்**

## பொது அறிவு

1.பாலின் தூய்மையை அறிய- லாக்டோ மாட்டர்
2.மாலிமிகள் திசை அறிய - காம்பஸ்
3.புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படுவது - லெசர் (LASER )
4.எதிரி விமானத்தை அறிய - ரேடார் (RADER)
5.இருதயத் துடிப்பை அளவிட - E.C.G (Electro Cardio Gram)
6.இதய துடிப்பு மற்றும் நுரையீரலின் இயக்கம் காண - ஸ்டெத்தாஸ்கோப்
7.தூரத்திலுள்ள பொருட்களை தெளிவாகப் பார்க்க - பைனாகுலர்
8.உடலின் வெப்ப நிலையைக் கணக்கிட- தெர்மோமீற்றர்
9.சிறு அளவு மின்னோட்டத்தை அளக்க- கால்வனா மீற்றர்
10.இரத்த அழுத்தத்தை அளக்க - பிக்மோ மானோ மீற்றர்



## பழமொழிகள்

1.பகலில் பக்கம் பார்த்துப் பேசு. இரவில் அது தானும் பேசாதே.
2.பகுத்தறியாமல் துணியாதே, படபடப்பாகச் செய்யாதே.
3.பசி எடுத்தவனுக்கு ருசி தெரியாது.
4.பசியுள்ளவன் ருசி அறியான்.
5.படிக்கிறது திருவாய் மொழி. இடிக்கிறது பெருமாள் கோயில்.
6.பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.
7.பணம் பந்தியிலே குலம் குப்பையிலே.
8.பதறாத காரியம் சிதறாது.
9.பலநாளைத் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான்.
10.பல்லுப் போனால் சொல்லுப் பேச்சு.

## திருக்குறள்




திருக்குறள் (Thirukkural) உலகப்புகழ் பெற்ற தமிழ் இலக்கிய மாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர் என்று அறியப்படுபவர். இதில் 1330 குறள்கள் பத்து பத்தாக 133 அதிகாரங்களின் கீழ் தொகுக்கப் பெற்றுள்ளன. திருக்குறள் சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினெண்கீழ்க்கணக்கு எனப் படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் இருக்கிறது. இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். மாந்தர்கள் தம் அகவாழ்விலும் சுமுகமாக கூடி வாழவும், புற வாழ்விலும் இன்பமுடனும் இசைவுடனும் நலமுடனும் வாழவும் தேவையான அடிப்படைப் பண்புகளை விளக்குகிறது.

வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் திருக்குறள் கூறுவதால், அதைச் சிறப்பித்துப் பல பெயர்களால் அழைப்பர்: திருக்குறள், முப்பால், உத்தர வேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம் என்ற பெயர்கள் அதற்குரியவை. கருத்துக்களை இன, மொழி, பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருந்துவது போல் கூறி உள்ளதால் இந்நூல் "உலகப் பொது மறை" என்றும் அழைக்கப்படுகிறது

திருக்குறள் - இதற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் புகழ் வாய்ந்ததாக விளங்குவதும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதும் பரிமேலழகர் உரைதான். தற்காலத்திலும் பலர் உரை எழுதியுள்ளனர்.

### படங்களில் உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்



அன்பு என்றும் உன் உள்ளத்திலிருந்தால்
அறிவு என்றும் உன்னை விட்டகலாது.









நா கூசாமல் அடுத்த வருடம் தீர்வு என்கின்றதே கூட்டமைப்பு?

கேரள வெள்ளத்தால் கேரளக் கஞ்சா குறையுமா?

நுண் கடன் கொடுமை எப்போது தீரும்?

**நேதா — வதிரி**

**நுண் கடன் கொடுமை எப்போது தீரும்?**

கொடுமை கொடுமை கொடுமையின் உச்சம் இந்த நுண்கடன். பெண்களுக்கு மட்டும் வழங்கும் கடன் என்று இனிக்க இனிக்க பேசி அதிக வட்டி வீதத்தில் கடனைக் கொடுத்து விட்டு கடனைப் பெற வீடுவந்து அவமதிப்பு, அதிகாரப்பேச்சு, வீட்டு வாசலிலேயே காத்து நின்று உள நெருக்கடி கொடுத்து... இப்படி இந்த நுண்கடன் நிறுவனங்கள் எம் இனத்தை வேரறுத்துக் கொண்டிருக்கிறது. இவர்களைத் துரத்தி அடிக்க ஆளில்லையா இறைவா...

**பரமேஸ் — வதிரி**

**கேரள வெள்ளத்தால் கேரளக் கஞ்சா குறையுமா?**

கேரளாவில் வரலாறு காணாத பிரளயம் ஒன்று ஏற்பட்டு கேரளா தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. கேரளக் கஞ்சா என்ற விடயத்தை தூக்கி எறிந்து விட்டு அவர்களின் கண்ணீரை துடைக்க வழி செய்வோம்.

**சுதன் — குப்பிளான்**

**நாடு பிரியும் என்கிறதே கூட்டமைப்பு?**

இந்த விளையாட்டுச் செய்திகள், நகைச் சுவைச் செய்திகள் போன்றவற்றிற்கு நான் பதில் எழுதுவதை நிறுத்திவிட்டேன் புறோ.

**நிசான் — வல்வெட்டித்துறை**

**அண்ணன் பலசாலியாக இருந்தாலும் தம்பிகளிடம் தோற்று விடுகிறார்களே?**

வானத்தைப் போல, ஆனந்தம், சமுத்திரம் இப்படி அண்ணன் சென்டிமன் படங்கள் பார்த்துப் பார்த்து அண்ணன்கள் தம்பிகளுக்கு அடிமையாகிவிட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**காவியா — யாழ்ப்பாணம்**

**மனித வாழ்வின் முக்கியமான கட்டம் எது?**

கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்துவது, அதே சந்தர்ப்பத்தை நழுவ விடுவது இந்த இரண்டுமே மனித வாழ்வில் முக்கியமானது தான். கிடைப்பது எப்படியும் கிடைக்கும். கிடைக்காதது எப்போதுமே கிடைக்காது என்பதற்காக முயற்சிக்காமல் இருப்பது மடைமைத்தனம்.

**நிலா — சுழிபுரம்**

**பெண்களின் மனதின் ஆழத்தைக் கண்டவருண்டா?**

பெண்களின் உள்ளம் படுகுழி என்பேன். விழுந்து எழுந்தவர் யார்? கரையைக் கடந்தவர் யார்? ஆழம் அளந்தவர் யார்? என ஒரு கவிஞர் பாடியிருக்கிறாரே.

**அகிலன் — யாழ்ப்பாணம்**

**யாழ்ப்பாணம் வாள்பாணம் ஆகிறதே?**

அடிக்கும் அடி எப்படி இருக்கிறது என அட்மினுக்கு வீடியோ போல் எடுத்து நேரடி ஒளிபரப்பு செய்யும் அளவில் இருக்கிறது நிலை.

எது நடந்தாலும் அது தமிழனுக்குத்தானே நடக்கட்டும் என்ற நயவஞ்சகத்துடன் இருப்பவர்கள் எல்லாம் முடிந்த பின்பு வந்து முண்டியடிப்பதில் பயனேதும் இல்லை. அவ்வளவு தான்.




**சயன் — யாழ்ப்பாணம்**

**நா கூசாமல் அடுத்த வருடம் தீர்வு என்கின்றதே கூட்டமைப்பு?**

மாவைக் கந்தா நீ இதை எல்லாம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறாயோ? போரால் துவண்டுபோய் இருந்த வீடும் இடிந்து போக நிரந்தரமும் இல்லாமல் அரை நிரந்தரமும் இல்லாமல் ஏழைகள் அல்லல்பட அதன் நடுவே அண்ணாந்து பார்க்கும் மாளிகை கட்டி ஒய்யாரமாய் இருக்கும் மனசாட்சி இல்லாதவர்கள் அடிக்கும் கூத்துக்களை, குத்துக்கரணங்களை இன்னும் நீ பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாயோ?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**ஆடுற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும் என்பது சரி. மாடு எப்படிப் பாடும் வியாசரே?**

பழமொழி என்னமோ மாட்டைச் சொல்கிறது. ஆனால் அந்தப் பழமொழி மனித மாட்டுக்குரியது.

ஆடியும் கறக்கலாம் பாடியும் கறக்கலாம். சில மாட்டுக்கு அடிபோட்டுத் தான் கறக்க வேண்டுமென்றால் அதனிடம் ஆடிப்பாடிப் பயனேதும் இல்லையே.

**கலை — மிருசுவில்**

**காதலின் வலி பற்றிச் சொல்வீர்களா வியாசரே?**

அது நிச்சயமாக காதலிகளுக்குத் தெரிவதில்லை என்கிறது ஆய்வு. உருகி உருகிக் காதலித்து விட்டு டாட்டா காட்டுவது, அல்வா கொடுப்பது கூடவே கல்யாணப் பத்திரிகை கொடுப்பது, அழைப்பிதழைக் கொடுத்து விட்டு வரவேண்டாம் என்ற அறிவுறுத்தலைக் கொடுப்பது இப்படி காதலிகளின் குத்துக் கரணத்திற்கு எல்லையே இல்லை என்கிறார் முகப்புத்தகத்தில் பதிவிட்ட ஏமாற்றப்பட்ட ஒரு காதலன்.

**ஜிஷான் — மானிப்பாய்**

**நான் எதிர்வரும் தேர்தலில் கூட்டமைப்பின் தேர்தல் வேட்பாளராகலாம் என நினைக்கிறேன். உங்கள் கருத்து என்ன?**

பந்தயம் கட்ட வேண்டும் என்று முடிவெடுத்தால் கொஞ்சம் ஓடக் கூடிய குதிரையில் கட்டலாமே. அதை விட்டு விட்டு... உங்களுக்கே புரியும் என நினைக்கிறேன். பத்திரம்.

**யதுசன் — கொக்குவில்**

**கொள்ளை – கொள்கை இரண்டையும் ஒப்பிட முடியுமா?**

கொள்கை – கொள்கை என்று கொள்ளை அடிப்போருக்கு தொல்லை இல்லை. அவர் நாலு தலைமுறைக்கு சொத்துச் சேர்த்துவிட்டார். இந்த நாலு தலைமுறை அல்ல அடுத்த நாற்பது தலைமுறைக்கும் தமக்கு நிம்மதி இல்லை என்ற தத்துவம் புரியாத மடையர் அவர்.

**இன்பா — சுழிபுரம்**

**சேவை செய்யும் மனம் உள்ள மனிதரை உருவாக்குவது எப்படி?**

அது அடிமட்டத்தில் இருந்து கட்டி எழுப்ப வேண்டிய விடயம். மூன்று மாடிக்குப் போட்ட அத்திபாரத்தில் ஐந்து மாடி கட்ட முடியாதல்லவா. அது போலத்தான் அத்திபாரத்தை சரியாப் போட்டால் எல்லாம் சரிவரும்.

**செல்வா — கரவெட்டி**

**உங்களை வெங்காயம் என்று சொன்னால் ஏற்றுக்கொள்வீர்களா?**

அதில் ஒன்றும் பிரச்சினையில்லை. ஆனால் ஒரு கண்டிசன். என்னை வெங்காயம் எனக் கூறக்கூடியவர் ஒரு வெங்காயமாகத்தான் இருக்க வேண்டும். இப்போது சொல்லுங்கள் எந்த வெங்காயம் என்னை வெங்காயம் என்று சொல்ல ரெடி?



உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்

## கடைசி யுத்தத்து கானல்

முள்ளிவாய்க்காலில்
கயவர்கள் குண்டு போட
கங்கணம் கட்டி நின்றனர்

கடைசி நேரம் ஈழ அஸ்தமனத்தை
உறுதியாக்கப்போகின்றோம் என்று
முண்டியடித்து குண்டு போட்டான்

அவனுக்கென்ன தமிழச்சியின்
துகில் உரித்த துச்சாதனன் பரம்பரை அல்லவா

துஞ்சியவன் மீதேறி உசிர் கையில் பிடித்து
எஞ்சியவன் ஓடிய போது
பந்தடித்து விளையாடினான்
பீரங்கி வண்டியில்

நந்திக்கடலில் மூன்று தசாப்தம்
கோலோச்சிய ஈழவன்.கையை துண்டித்து
துடுப்பு போட விடாமல் துண்டாடி மகிழ்ந்தான்

என் இனத்து இரத்தங்களை
நந்தியில் கரைத்தான்

நான் என்ன செய்ய என் கையும்
துண்டானதால் -இத்
துண்டுப் பத்திரத்தில் - மனம்
துவண்டு எழுதி
கண்ணீர் சொரிகின்றேன்

பண்டிதமணி ஊரான்
செ.துஷாந்தன்,மட்டுவில்

கவிதைக்கலசம்

## பொசிந்துவிட்ட இனம்

அகிலம் போற்றிய தமிழினம்
ஆண்டியானது யாராலோ
அன்று தொட்டு இன்றுவரை
அத்தனையும் அநியாயம்
தமிழரின் இருப்பை இல்லாதொழிக்க
கலாசாரம் கரைக்கப்படுகிறது
பண்பாடு சிதைக்கப்படுகிறது
கல்வி கலப்படமாகிறது
தற்பொருளாதாரம் தறிகெட்டு விட்டது
பொதுநல தமிழன் பொசுங்கி விட்டான்
சுயநல தமிழன் பெருகிவிட்டான்
இத்தனையும் யாராலோ
கொள்கையற்ற
தமிழ்த் தலைமைகளாலே

அராலியூர் ப.தர்மகுமாரன்



## எழுந்து வா!

விண்ணகம் வாழ்த்திட வையகம் போற்றிட
இதய சிறைக்குள் வள்ளலாக
வாழ்ந்திடு மானிடா!

வளர்பிறையேனும் தேய்பிறையேனும்
கறை கொண்ட மானிடம்
குறைவின்றி வாழவிடுமா எழுந்துவா மானிடா!

கடல் அலை மோதி கரை அழுதிடுமா
மற்றவர் வார்த்தைகள் தூற்றி
நீ அழுவதா -இல்லை உன் குறை நீ கண்டு
கவலை அடைவது சரியா எழுந்துவா மானிடா!

துன்பமே விதி என்று வாழ்ந்து விடாமல்
எண்ணிய குறைகள் மெல்லமாய் தீர்ந்திட
திட்டம் போட்டு வாழ்ந்திடு மானிடா!

காலத்தை எண்ணி துவண்டு விடாதே
நேரம் பார்த்து பயந்து விடாதே
தோற்றம் மாறும் முதல் மாற்றம் கொண்டுவா
உன் வாழ்க்கையில் மானிடா!

எஸ்.ஏ.கோகுலன்
கோப்பாய்

## அழகுத்தாய்!

என்னைச் சுமந்தவளே நீ ஓர் அழகு
என் வளர்ச்சிக்கு நீ அழகு
என் பார்வைக்கு நீ அழகு
என் பசிக்கு நீ அழகு
என் அறிவுக்கு நீ அழகு
என் உயர்வுக்கு நீ அழகு
என் பெருமைக்கு நீ அழகு
என் பரிசுக்கு நீ அழகு
என் வாழ்வுக்கு நீ அழகு
நான் நீடூழி வாழ நீ அழகு
மொத்தத்தில் இவ்வுலகிலே
அழகு அழகு என் தாயவளே!

சி.கலாமணி, மண்டைதீவு

## வாள் எடுத்த ராசாவே

08

வாள் எடுத்து பிறர்
வாழ்வழிக்கும் ராசாவே

பள்ளிக்கூடத்திலிருந்து
பசியுடன் வருமுனக்கு
பலகாரம் தருவாளே பாட்டி

நீ நித்திரை கொள்வதற்காய்
பாட்டி பலகதை சொல்வாளே
அதைக்கேட்டு துயில்கொள்ள
உச்சி முகர்ந்து
உறங்க விடுவாளே

அம்புலிக்கதைகளை
ஆர்வமாய்க் கேட்பாயே
விக்ரமாதித்தன் போல்
வீரனாய் சிரிப்பாயே

அந்த விக்ரமாதித்தன்
அநியாயங்கண்டு வாளெடுத்தான்
நீயோ
அநியாயத்திற்கு
வாளெடுத்து- உன்
வாழ்வழித்து
வாழ்விழந்து
வாடுகிறாயே

பாசமாய் வளர்த்த பாட்டி
காலமான செய்தியறிந்து
கதறி அழுவாய் என்று
காத்துக் கிடந்தோம்


இரும்பினிலும் ஈரமிருக்கும்
ஈரமின்றிய இரும்பாகியதோ
உன் இதயம்

போதை உன்னை அல்ல
எம்வாழ்வையும்
சேர்த்தழித்துவிட்டதடா

(அடுத்தவாரம் ராசா வருவான்...)

மாவை. நா. கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 410



## முடிசூடா மன்னன்

ஏர் பிடித்த சீர் உழவன்
பார் போற்றும் பெருவீரன்
கார்மேகம் பொழியும் வரை
காத்திருந்து ஏர் பூட்டி
வயலுழுது தரணியெலாம்
பசுமைப்புரட்சி செய்திடுவான்
மக்கள் பசிதீர உணவளித்து
நாட்டின் முதுகெலும்பாக
திகழ்ந்திடும்
முடிசூடா மன்னன் இவன்
புகழ் பாடிடுவீர் மாந்தர்களே!

சி.கஜா
முரசுமோட்டை

## உலகம் உய்ய

நின்தோளின் வலிமை தெரிகிறது
விரல் முள்ளந்தண்டின் நேர் தெரிகிறது
உன் போல் உழைப்பால் உயர்ந்தோரே
உலகம் உய்ய வழியது செய்தவரே

வானம் பார்த்து பயிர் வளர்ப்பாய்
வழங்கிய நிலத்தை குளிர்விப்பாய்
ஏனாம் இன்னும் உணவு இறக்குமதி
ஏழை நாடாய் இனும் இருப்பதற்கா

சேற்றில் இறங்கிய செயல் ஊக்கம்
சிரசாம் உழவின் சிறப்போங்கும்
ஆற்றில் கரைந்த உப்பாகிச் சிலர்
ஆற்றார் தொழில் ஏதும் இலவாமோ

வை.க.தவமணிதாசன்
கொக்குவில்

## போராட்டம்

மண்ணில் ஏர் பிடித்து
அயராது உழைத்து
ஊருக்கே சோறு போடும்
விவசாயிகள் நாம் நம் வாழ்வில்
உயர இப்படிப் போராட
வேண்டியுள்ளது

க.ஜெயரூபன், பருத்தித்துறை

## தேவராசா

கருங்காலி நிலமாய்
இறுகிக் கிடக்கும் மண்ணை
ஏர் ஏற்றி உழுது பண்படுத்தி
பாருக்கு சோறளிக்கும்
தேவராசாவே
இந்த உலகில்
உயர்ந்தவன் நீ

கி.தர்சிகன், யாழ்ப்பாணம்

## ஏர் பூட்டி

ஏர் போட்டி விவசாயம்
செய்தோம்
காலத்தின் கோலத்தால்
இதனை மறந்தோம்
எங்கள் வயல்களில் எல்லாம்
பற்றைக் கோலங்கள்
என்னம் சில வயல்களில்
இராணுவத்தின் இருப்பிடங்கள்
ஏர் பூட்டி விவசாயம்
செய்ய காலம்
எப்போ வரும்?

பா.கலாதேவி
சண்டிலிப்பாய்

## உழவனைப் போற்றுவோம்

ஏர் தூக்கும் பெரியவரை
வல்ல கரம் காட்டி
ஊக்குவிக்கும் நம்
இனிய தாய்க்குலமே!
யாவர்க்கும் உணவளிக்கும்
உழவனைப் போற்றி நின்று
பாடுகிறேன் கவியொன்று
வயல்காத்து, பயிர்காத்து
உயிர்காக்கும் ஏர் தாங்கும்
தலைவனே!
உன் வயோதிபத்தைகூட
மதிக்காமல் செயற்படுகிறாயே
உன் பணி சிறக்க வாழ்த்துகிறேன்

அபிகுலமாலிகா
சங்கானை

# இவ்வார மௌனத்தின் தேடல் -411



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

## ஏரும் வாளும்

ஊர் கூடி நலம் நாடி
தேர் இழுப்பது போல்
உயிரோம்ப உதவிடும்
உழவுத் தொழிலுக்கு பெருவிழா
உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோர்
இதை உலகிற்குணர்த்தி
பசுமைக்கு வித்திடும் விழா
வாழ நினைத்தால் நெல்லுடன்
வாழையும் வைத்து வாழலாம்
மிரட்டும் வாள் வெட்டுக்கள்
புரட்டிப்போடும் வாழ்வையே
ஏர்முனைக் கலப்பையை
தேர்தல் சின்னமாக்கிடின்
பண்பாட்டை மறவாதவரென்று
தன் வாக்கை விரும்பிப் போடுவர்

க.நாகராசா
நுணாவில்

## விவசாய மேம்பாடு

அபிவிருத்திச் செயற்றிட்டத்தை
செயற்படுத்தத் துணிவோடு
வயதுபோன நிலையிலும்
மக்களின் பசிபோக்க
விவசாயம் செய்ய எண்ணி
நெல் மணிகளை விதைத்து
அறுவடை செய்ய
ஏரினைத் தோளில் சுமந்து
வயலுக்குப் புறப்படுகின்றார்
கமநலசேவையாளன்
குணநலம் வேண்டி மக்கள்
ஆரவாரித்து வாழ்த்துகின்றனர்

துரை, தென்மட்டுவில்

## உலகம் செழிக்கும் உழவு

கலப்பையெடுத்து
தோளில் வைத்து
நிலத்தை உழுது
மண்ணைப் பண்படுத்தி
நீர் பாய்ச்சி
நெடுவயல் நிரப்பி
கலகலத்த நெல் விதைத்து
ஊரார் உண்ண
உணவு தந்த
உந்தன் பின்னால்
உலகம் இன்று
ஊர்வாழ உதவும்
உழவுக்கு வந்தனை
செய்வோம் வாரீர்

கி.திவ்வியா, யா/ப.மே.ம.வி

வலது கையும் வலது காலும் இயங்காத நிலையில் இருபத்தைந்து வயதிலேயே சாவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் "கோடீ" என்னும் கோடீஸ்வரனின் ஆழ்மனது அவனை முள்ளாய்க் குத்திக் கொண்டிருந்தது. என்னதான் இருந்தாலும் தெய்வம் நின்று கொல்லும் என்பது இவனது வாழ்வில் முழுக்க முழுக்க உண்மையானது. பதினாறு வயதில் பழகிய கெட்டபழக்கம் கோடீஸ்வரனாக இருந்த இவனது வாழ்வினை எங்கேயோ ஒரு தெருக் கோடியில் முடக்கிப் போட்டது.

எல்லோரும் இவனைப் பார்த்து பயந்த காலம் போய் எல்லோரும் இவனை ஏளனமாகப் பார்க்கின்ற காலம் இது. "துள்ளுகின்ற மாடு பொதி சுமக்கும்" என்பார்கள். இளமைத் துடிப்பில் இவன் செய்த பாவம் இவனை இன்று அணுவணுவாய்க் கொல்கின்றது.

வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்தவனாய், எது நிஜம் என்பதை உணர்ந்தவனாய் சற்றுக் கண்களை இருக்க மூடினான். அப்போது அவன் ஊரின் விளையாட்டுவிழா ஒன்றில் பிரதம விருந்தினர் உரை நிகழ்ந்து கொண்டிருந்தது. அவரது உரை இவனது மனத்திரையில் இவனது கடந்தகாலப் பசுமையான நினைவுகளும் அவனது திசை மாறிய காலங்களும் திரையோடச் செய்தது.

தொன்மைமிகு கிராமம் தன் அழகாபுரி பெயருக்கேற்ப இயற்கை வனப்புடன் பச்சைப் பசேல் என்று காட்சிதரும் வயல வெளிகளும் ஓங்கி வளர்ந்த் தென்னைகளும், கிராம மக்களிடையேயான ஒற்றுமையும் நன்கு நிறைந்திருந்தது. தாயாய்ப் பிள்ளையாய்ப் பாசமாகப் பழகும் நல்ல தொரு இக்கிராமத்தின் கிராமத் தலைவர் தவப்புத்திரனுக்கும் இலக்குமி அம்மாவுக்கும் ஆறாவது புதல்வனாய் பிறந்தவன் தான் இந்த கோடீஸ்வரன்... இளமையில் துடிப்பும் அழகும் மிக்க இவன் தனது குடும்பத்திற்கே உரித்தான விருந்தோம்பல், உறவுகளைச் சிறந்த முறையில் பேணல், பிறர் மீது அன்பு கொள்ளல், தன்னுயிர் போல் பிறர் உயிரையும் மதித்தல், ஈகை, தன் உயிர்கொடுத்தேனும் மானங்காக்கும் வேட்கை, தன் கடன் பணிசெய்து கிடத்தல் போன்ற நற்பண்புடனும் சிறந்த விளை யாட்டு வீரனாகவும் சிறந்த முறையில் கல்வி கற்பவனாகவும் இருந்தான்.

எல்லோரது வாழ்விலும் ஒரு திருப்பு முனை வரும். வழமையாக அது பெரும்பாலானோருக்கு நன்மையளித்தா லும் ஒரு சிலரது வாழ்வில் அது தீமையைக் கொடுத்துவிடும். அவ்வாறே இவனது வாழ்விலும் பெரும் தீமையான திருப்பு முனை ஒன்று வந்து சேர்ந்தது.

அன்று வைகாசித் திங்கள் வழமை போல் காலைப் பொழுது விடிந்தாலும் வெளியில் ஏதோ சலசலப்பு இவனது வீட்டுக்கு அருகில் நீண்டநாட்களாக மூடப்பட்டிருந்த வீடு திறந்திருந்தது. இவனது தந்தையும் ஊரின் சில முக்கிய நபர்களும் அங்கு கூடியிருந்தனர் "ஏதேனும் களவு கிளவோ.. ச்சீஎங்கட ஊரில தான் களவே நடக்கிறதில்லை" இல்லாடிக்கு எதுவும் பிரச்சினையா? அப்படிப் பிரச்சினைகளும் வருவதில்லை. நடக்கும் போதே மற்ற நுண்ணுயிர்கள் சாகக் கூடாது என எதிர்பார்க்கும் நல்ல ஊர்.

எல்லோரிலும் அன்பையும் அன்பான வார்த்தைகளையுமே பார்க்கக்கூடிய ஊர். அப்படிப் பிரச்சினை நடக்க வாய்ப்பு ஏதும் இல்லை என எண்ணியவாறு எதற்கும் எட்டிப் பார்ப்பம் என்று துள்ளித் துள்ளிப் பார்த்தான் கோடீ. கார் ஒன்றும், வீட்டுப் பொருட்களுடன் உழவு இயந்திரம் ஒன்றும் அந்த வீட்டு வாசலில் நின்றது. ஆவலுடன் எட்டிப் பார்த்த கோடீக்கு அப்போது தெரியவில்லை தன் வாழ்நாட்களை இருண்ட யுகம் சூழ்ந்து கொள்வதற்காகவே இன்றைய காலைப் பொழுது அர்த்தமில்லாது உதித்தது என்று...

அந்தவீடு இவனது சிறு வயது நண்பன் நகுலன் வாழ்ந்து வந்த வீடு. கடந்த ஏழு வருடங்களாகத் தந்தையின் தொழில் விடயமாக வெளியூரில் வசித்துவிட்டு மீண்டும் இவ்வூருக்கு இன்றுதான் மீளக் குடி புகுந்திருந்தார்கள். தன் நண்பன் மீளவந்த சந்தோசம் இவனை வானில் பறக்கவை த்தது. சினிமாவில் வருவது போல் நட்புக்கான பாடல் ஒன்றும் இவன் மனதில் வந்துபோனது...



சிறுகதை

# வாழ்நாள் கைதி



மறுநாள் இவன் படிக்கும் பாடசாலையிலேயே நகுலனும்வந்து சேர்ந்தான். தரம் பத்து பக்கு வப்படாத வயது. எத ற்கும் கோபப்படும் வயது. காதல் வலை யில் வீழ்வதற்கு அத்திபாரம் இடப்படும் வயது. இந்த கட்டிளமைப் பருவ வயது. எதற்கும் பயம் அறியாது. மற்றவர்கள் இவர்களைப் பார்த்துப் பயப்படுவது இவர்க ளுக்கு ஒரு தெனாவெட்டு. யார் புத்திமதி கூறினாலும் காதில் ஏறாத வயது. என்ன நற்பண்புகளை தம்முள் வளர்த்தாலும் அதனைக் குழப்புவதற்கென ஒரு கூட்டமே புறப்படும் வயது.

கோடீயின் தாத்தா அடிக்கடி சொல்லும் வசனம் "கூடாத கூட்டங்கள் சேர வேண் டாம் கூடினாலும் கூடங்கள் மாடங்கள் ஏற வேண்டாம் ஏறினாலும் கீதங்கள் நாதங்கள் பாடவேண்டாம்" இதனை மனதில் நிறுத்தியே தனது நண்பர்களை வழமையாகத் தெரிந்தெடுப்பான் கோடீ.

ஆனால் நகுல் விடயத்தில் இதனை அவன் கடைப்பிடிக்கவில்லை. சிறு வயதிலிருந்து ஒன்றாகப் பழகினவன் தப்புத் தண்டாவுக்குப் போகமாட்டான் என முழுமையாக நம்பி அவனுடன் நட்புக் கொண்டான். நகுலும் இவனுடன் கவனமாகவே பழகினான். இருந்தபோதிலும் நகுல் எழிலழகியைக் காதல் கொண்டான் அவளும் இவனைக் காதலித்தால் பதினாறு வயதிலேயே காதல் பிஞ்சிலேயே பழுத்ததுகள் என்று பெரியோர் பேசுவது இவர்கள் காதில் விழுவதே இல்லை... தான் காதலிப்பது மட்டும ல்லாது கோடீயையும் அடிக்கடி தூண்டுவான் புவனத்தினைக் காதலிக்குமாறு முதலில் தயங்கிய கோடீ நாளடைவில் இவனது தூண்டுதல் காரணமாகப் புவனத்தின் மீது காதலை வரவழைத்தது.

மிகவும் வெறித்தனமாக புவனத் தினை ஒருதலையாகக் காதலித்து தன் காதலைப் புவனத்திடம் சொன்னான். புவனமோ இவனது காதலை ஏற்க மறுத்தாள். பல தடவை முயற்சித்தும் அவள் தமது குடும்பமும் கோடீயின் குடும்பமும் குடும்ப நண்பர்கள் என்பதால் இவன் காதலை அறவே மறுத்தாள். இவனுக்குப் பித்துப் பிடித்தது போல் இருந்தது.

சந்தர்ப்பவாதியாக இருந்த நகுல் இந்த நேரம் பார்த்துதான் பட்டணத்தில் பழகியிருந்த குடி என்னும் கொடிய பழக்கத்திற்கு கூட்டுச் சேர்ப்பதற் காக கோடீயை குடிக்கத் தூண்டினான். அறவே மறுத்த கோடீக்கு நகுலின் வார்த்தைகள் "நீ புவனத்தை மறக்க வேண்டும் என் நண்பன் பழைய கோடீயா கொடி கட்டிப் பறக்க வேண்டும்" அவளை மறப்பதற்கு குடியே சிறந்த வழி வா ஒருநாள் குடி அவளை மறந்திடலாம்' என்ற வார்த்தைகள் கோடீயைத் திசை திருப்பி விட்டன. துக்கத்தை மறைக்க் நல்லதைச் செய்தாலும் பரவாயில்லை இவன் குடி என்ற கொடிய அரக்கனுக்கு அடிமையாகியது மட்டுமல்ல போதைப்பொருள் பாவனைக்கும் அடிமையாக்கியது. கோடீ யின் வீட்டார் எவ்வளவு எடுத்துக் கூறியும் அவன்திருந்துவதாகத்தெரியவில்லை!

கடைசியாக வீட்டில் பெரும் சண்டை மூண்டு கோடீயை வீட்டிலிருந்து வெளியில் துரத்திவிட கோடீ தன் போதைப் பொருள் பாவனைக்காக சிறுசிறு களவுகளில் ஈடுபடத் தொடங்கினான்...

போதை தன் குடும்ப அந்தஸ்து மற்றும் கௌரவத்தை அழிப்பதைச் சற்றும் உணராதவனாய் இவன் முழுக்க முழுக்க அதனுள்ளேயே அடிமையாகிப் போக போதைப்பொருள் வாங்க போதிய பணம் இல்லாமையால் பெரிய பெரிய கொள்ளைகளில் ஈடுபடத் தொடங்கினான்.

வாள்வெட்டு, கட்டப்பஞ்சாயத்து என சகல வேலைகளிலும் ஈடுபட்டான். இவன் யார் சொல்லுக்கும் கட்டுப் பாடாது காட்டுமிராண்டியாக தன்னை மாற்றிக் கொள் வதற்கு போதை வழி சமைத்தது.

ஒருநாள் நிறை வெறி வீதியால் வந்த காரை மறித்தான். காரில் இருந்தது யார் என்பதுகூடத் தெரியாத இவன்நகைகளைக் கொள்ளை யிட முற்பட்டபோது ஏற்பட்ட முரண்பாட்டால் அந்தக் காரில் இருந்தவர்களைக் கண்டதுண்டமாய் வெட்டினான். இருவரும் இரத்த வெள்ளத்திலிருந்து கொடுத்த குரல் இன்றும் இவன் காதில் ஒலித்தது. அது இன்றும் இவனைக் கொன்று தின்று கொண்டிருக்கின்றது" நான் இரத்தத்தையே பாலாக்கி உனக்கு ஊட்டி வளர்த்தேன். இன்று என்னையே இரத்த வெள்ளத்தில் தள்ளி விட்டாய் உன் தந்தை தன்னையே உருக்கி உனக்கு ஒளிதந்தார். அவரையே இருளுக்குள் தள்ளிவிட்டாய்" இதைக் கேட்டதும் தான் இவனுக்குப் புரிந்தது தான் வெடிட்டியது தன் தாய் தந்தையை என்று.

செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினான், அழுது புலம்பினான். தலை கால் புரியாத வெறியிலும் கூட உடனடியாக காரில் ஏற்றிக் கொண்டு வைத்தியசாலைக்குச் சிட்டாகப் பறந்தான். வைத்தியசாலை க்கு கொண்டு செல்லும் வழியில் தந்தை தாயின் உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றது.

ஊரிலேயே மதிப்பும் மரி யாதையுமிக்க குடும்பம், ஊரே கையெடுத்துக் கும்பிட்ட குடும்பம், இன்று ஊரே கூடி நின்று கைகொட்டிச் சிரிக்கும் அளவுக்கு ஆளாவதற்கு தானே" வளர்த்த கடா மார்பில்குற்றியது போல் காரணமாயிற்றேன்" என்ற குற்ற உணர்வுடன் காரை மீள வீடு நோக் கித் திரும்பும் போது வீதியால் வந்த கனரக வாகனத்துடன் மோதி இவனது நண்பனும்ஏனைய சகாக்களும் தலத்திலேயே பலியாக இவன் மட்டும் உயிர் தப்பித்துக் கொண்டான்.

ஆனால் விபத்தினால் இவனது வலது கையும் காலும் செயலிழந்து போனது. மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாத கசப்பு மருந்தானது இவனது வாழ்வு. இவ்வாறு அந்த உரை முடிவடையும் போது தூக்கில் தொங்கா கைதியாக உண் மையை உணர்ந்த இவனது கண்களால் கண் ணீர் ஆறாகிப் பெருக்கெடுத்துப் பாய்ந்தது...

அரியாலையூர்
கு.பிரதீபன்

# குப்பை மேடாகும் நாடு



இப்போது உலகமானது பல வழிகளில் மோசமாக மாசடைந்து வருகின்றது. நிலம் மாசடைதல், வளி மாசடைதல்,ஒலி மாசடைதல், நீர் மாசடைதல் என பல வகைகளில் இன்று பூமியின் இயற்கை நிறம் மாசடைதலினால் மங்கியே போகிறது

மனிதன் இயற்கையின் சுயத்தினை தனது செயற்கையின் திணிப்பினால் இல்லாமல் ஆக்கிவருகிறான், பஞ்சபூதங்களினையும் இன்று பாழாக்கியே விட்டான். இந்த மாசாக்கங்களின் மூலம் இன்று உலக சூழலியல் பிரச்சினைகளாக புவி வெப்பமடைதல், ஓசோன் வறிதாதல், அமிலமழை, நற்போசனையாக்கம் என இன்னும் பல வழிகளில் புவியினை பலாத்காரத்துக்குட்படுத்தி பாழடையச் செய்துவிட்டான்.

வீட்டுக்கழிவு, தொழிற்சாலைக்கழிவு, விவசாயக் கழிவு, பெற்றோலிய கழிவு, மருத்துவக் கழிவு, இலத்திரனியல் கழிவு என பல கழிவு வெளியேற்றங்களினால் உலகம் பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது.

இக்கட்டுரை ஆனது தற்போது இலங்கையின் புத்தளக் கடற்கரையில் மருத்துவக் கழிவுகளின் கரை ஒதுங்குகை பற்றி ஆராயும் நோக்கமாகும்.

புத்தளக் கரையோரப் பகுதியில் சுமார் 10 கிலோமீற்றர் கடல் பரப்பில் இவ்வாறான மருத்துவ கழிவுகள் **(Medical waste or hospital waste)** சுமார் 60 கிலோகிராம் வரை கரையொதுங்கியிருப்பது ஒரு சவாலான விடயமாகும். அக் கழிவுகளில் மருந்துப் போத்தல்கள், ஊசிகள், சத்திர சிகிச்சை கையுறைகள், இரத்த மாதிரிகள், குளிகைகள், காலாவதியாகிய மருந்துகள், இரத்த சோதனை குழாய்கள் என ஏராளம் அடங்குகின்றன.

இவை இந்திய கரையோரத்தில் இருந்து தான் இங்கு கரையொதுகங்கியுள்ளன என மருந்துப் போத்தலினுள்ள இந்திய இலச்சினைகள் காண்பிக்கின்றன, இதனை இலங்கையின் கடல் வள பாதுகாப்பு மையமும் உறுதி செய்திருக்கிறது.

இன்று உலகே பெரும் சாவாலுக்கு முகம் கொடுக்கும் விதமாக இந்த கழிவு முகாமைத்துவம் அமைந்து வருகிறது. அந்தவகையில் தங்கள் நாட்டுக்குள் உற்பத்தி செய்யப்படும் கழிவுகளை தங்கள் நாடுகளே முகாமை செய்யாது விடுவது பாரதூரமான குற்றமாகும்.

கரையொதுங்கிய இவ்வாறான கழிவுகள் ஏன் கவனமல்லாது கடலில் கொட்டப்பட்டன என்ற கேள்வி இங்கு எழுகிறது. மருத்துவக் கழிவுகளாயின் அவற்றினை அழிக்கும் அல்லது முகாமை செய்ய பிரத்தியேக வழிமுறைகள் உள்ள போது எப்படி சாதாரணமாக இப்படி மருத்துவ கழிவுகளை இப்படி கடலிலே போட முடியும்?

இந்த கழிவுகள் இன்று இலங்கையில் கரையொதுங்கியிருக்கிறது. இதனால் பல்வேறு நோய்கள் ஊடுகடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் நிறையவே உண்டு, பல இரத்த மாதிரி சோதனைக் குழாய்கள் காணப்படுகின்றன இவற்றால் பல்வேறு நோய்கள் பரவ வாய்ப்புக்கள் அதிகம்.

இவ்வாறு கடலில் கழிவுகளை கொட்டுகின்றபோது கடல் வளம் பாதிப்படையும் வழிவகைகளும் உண்டு.

இலங்கை கடல் வள திணைக்களம் முறையான விசாரணை களை மேற்கொண்டு இந்திய அரசுக்கு இதனை தெரியப்படுத்தி இவ்வாறான கழிவுகள் எங்கு எப்போது எந்த வைதியசாலை மூலம் கொட்டப்பட்டது எனக்கண்டறிய வேண்டும்.

எனவே இதற்கான நட்ட ஈட்டினையும் கடல் வள திணைகளம் கோர வேண்டும், வரும் காலத்தில் இவ்வாறான பாதிப்பு தரும் கழிவுகள் இந்து சமுத்திரத்தில் கொட்டப்படாது தடுக்கும் வழிவகைகளை உறுதி செய்ய வேண்டும்.

அத்தோடு கழிவு முகாமையில் இன்று இலங்கை பாரிய பின்னடைவையே கண்டுவருகிறது, கழிவு முகாமைக்காக உரிய திட்டமிடல்கள் நவீன வசதிகள் போன்றன இன்னும் உள்நாட்டு கழிவு முகாமையில் பயன்பாட்டில் இல்லை என்றே கூறலாம்.

ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகள் கழிவு முகாமையில் பல படி முன்னேற்றப் பாதையில் உள்ளன.


அத்தோடு கழிவுகளில் இருந்து பணத்தினையும் அவை ஈட்டத் தவறுவதில்லை, இலங்கையில் சென்ற வருடம் மீதோட்டமுல்லை குப்பை மேடு சரிந்து அழிவை ஏற்படுத்திய நிகழ்வு இலங்கையின் கழிவு முகாமை சீரற்ற நிலையில் உண்டென்பதற்கு தக்க சான்றாகும்.

இன்னும் கழிவு முகாமைத்துவத்தில் நாம் பல படிகள் முன்னேற வேண்டியுள்ளது. 3R கொள்கையினை சரிவர கடைப்பிடித்தலில் எமது நாடும் நாட்டின் மக்களும் இன்னும் விழிப்புணர்வடையவில்லை.

**R_Reduce** பாவனை யினை குறைத்தல், **Reuse_**திரும்ப திரும்ப பாவித்தல், **Recycle_** மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் என பல விடயங்கள் பற்றி நாம் கவனம் செலுத்துவதேயில்லை.

இதனால்தனிமனிதன்வெளியேற்றும் கழிவுகளின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. எனவே கழிவு முகாமைத்துவத்திலும் பல நவீன முறைகளினை உட்புகுத்தி, மக்களிடம் விழிப்புணர்வு களினையும் உண்டுபண்ணி சிறந்த கழிவு முகாமைத் துவத்தினை முன்னெடுத்து கழிவற்ற தேசத்தினை கட்டியெழுப்புவது அனைவரது பொறுப்புமாகும்.

கு.மதுசூதன்



# நறுமணமூட்டிகளில் தங்கம் மஞ்சள்

'ஏழைகளின் குங்குமப்பூ' என்று அழைக்கப்படுகிறது மஞ்சள். இதன் நிறமும் குணமுமே இத்தகைய பெயரைப் பெற்றுத் தந்திருக்கிறது. பிரத்தியேகமான நெடியும் மற்ற நறுமணமூட்டிகளிலிருந்து மாறுபட்ட சுவையும் கொண்டது மஞ்சள். 'நறுமணமூட்டிகளில் தங்கம்' எனப் பெயர் சூட்டுமளவுக்கு மஞ்சளுக்கு மகத்துவம் அதிகம். 'காய்க்கமுகின் கமழ் மஞ்சள்' எனும் பட்டினப்பாலை வரிகள், சோழ நாட்டில் மஞ்சள் விளைச்சல் பற்றிப் பெருமை பேசுகிறது.

திருவிழாக்கள், சடங்குகள், அழகியல், மருத்துவம், சமையல் என நமது உணர்வோடும் உணவோடும் நெருக்கமான உறவுகொண்டிருக்கும் மஞ்சள், நோய்களைத் தடுப்பதில் மிகச்சிறந்த 'இயற்கைக் காவலன்'. ஜப்பான் மற்றும் சீன மருத்துவ நூல்களில் மஞ்சளின் சிறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. மஞ்சளை 'மஞ்சள் இஞ்சி' என்றே சீனர்கள் அழைக்கின்றனர்.

மஞ்சளும் குங்குமப்பூவும் கலந்து செய்யப்படும் 'ஹரிரா' **(Harira)** எனும் 'சூப்' ரகத்தை மொராக்கோ நாட்டினர் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். மஞ்சளைக் கொண்டு தயாரிக்கப்படும் மஞ்சள் நிற கேக் லெபனான் நாட்டில் பிரசித்திபெற்ற சிற்றுண்டியாகும். மத்தியக் கிழக்கு நாடுகளில் அசைவ உணவுகளுக்குச் சுவையூட்டப் பயன்படும் 'செர்மவுலா' **(Chermoula)** எனப்படும் மசாலா வகையில் மஞ்சள் முக்கிய இடம் வகிக்கிறது. தேநீருடன் மஞ்சள் கலந்து பருகும் வழக்கம் ஜப்பானியர்களிடம் இருக்கிறது.

நிசி, பீதம், அரிசனம், கான்சனி ஆகிய பெயர்களைக் கொண்ட மஞ்சளுக்கு வாய்வகற்றி, மணமூட்டி, ஈரல் தேற்றி, கிருமிநாசினி போன்ற செய்கைகள் இருக்கின்றன. கலப்படமில்லாத மஞ்சளை நீர்விட்டு அரைத்துக் குளித்தால், தேகம் பொலிவுபெறுவதுடன் வியர்வை நாற்றம் மற்றும் கபநோய்கள் நீங்கும். கடந்த தலைமுறையில், மேல்நாடுகளைவிட நமது நாட்டில் தொற்றா நோய்களும் நாள்பட்ட நோய்களும் மிகவும் குறைவாக இருந்ததற்கு, சமையலில் அதிக அளவில் சேர்க்கப்பட்ட மஞ்சளும் ஒரு முக்கியக் காரணம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

செரிமானத்தின்போது தானியங்கள், பருப்பு வகைகளில் உள்ள புரதங்களை எளிதாகக் கிரகிக்க மஞ்சள் உதவுகிறது. மஞ்சள் சேர்த்துத் தாளிப்பது, மற்ற நறுமணமூட்டிகளின் மருத்துவக் குணங்களை வெளிக்கொண்டு வரப் பயன்படுகிறது. இறைச்சிகளை மஞ்சள் நீரில் ஊறவைத்தே சமைத்ததாக 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நூல்களில் பதிவிடப்பட்டுள்ளன.

புற்றுநோய், நீரிழிவு, இதயநோய் எனப் பல நோய்கள் வராமல் தடுக்க உதவும் மஞ்சளின் மருத்துவச் செயற்பாட்டுக்கு இதிலுள்ள 'குர்குமின்' **(Curcumin)** எனும் வேதிப் பொருள்தான் காரணம். உடலில் வீக்கத்தை ஏற்படுத்தும் சில காரணிகளைக் கட்டுப்படுத்துவதால், மூட்டுவலி உண்டாகாமல் பார்த்துக்கொள்ளும். இரத்தக் குழாய்களில் ஏற்படும் காயத்தைக் குணப்படுத்துவதில் தொடங்கி மருந்துகளின் செயற்றிறனை அதிகரிப்பது, மருந்துகளால் ஏற்படும் பக்கவிளைவுகளைத் தடுப்பது என மஞ்சளின் தன்மை தனித்துவமானது. பித்த நீரை முறையாகச் சுரக்கச் செய்து, செரிமானப் பிரச்சினைகளைச் சீர்செய்யக்கூடியது.

புற்றுநோய் சார்ந்த மரபணுக்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது, ஆரோக்கியமான செல்கள் புற்றுச் செல்களாக மாற்றமடைவதைத் தடுப்பது, புற்றுச் செல்களின் வளர்ச்சியை மட்டுப்படுத்துவது, பிற உறுப்புகளுக்குப் புற்றுநோய் பரவுவதை நிறுத்துவது எனப் புற்றுநோயின் தீமை தரும் பரிமாணங்களைத் தடுக்கும் ஆற்றலும் மஞ்சளுக்கு இருக்கிறது.

மஞ்சளின் நோய் தீர்க்கும் குணத்தை அதிகரிக்க, மஞ்சளுடன் அதிக அளவில் மிளகு சேர்த்துச் சமைக்கலாம். மஞ்சளின் 'குர்குமின்' மிளகில் உள்ள 'பைப்பெரின்' என்ற ஆல்கலாய்டுடன் கூட்டுச் சேர்ந்து நோய்களை எதிர்த்துப் போராடும். குடல்பகுதியில் 'குர்குமின்' உறிஞ்சப்படும் வேகத்தை அதிகரிக்க 'பைப்பெரின்' உதவுகிறது. சளி, இருமல் இருக்கும்போது பாலுடன் மஞ்சள், மிளகுத்தூள் சேர்த்து அருந்தும் அறிவியல் பின்னணி இதுதான். வெங்காயத்தில் உள்ள தாவர வேதிப்பொருள்களும் மஞ்சளின் குர்குமினும் வினை புரிந்து, நோய்களின் வீரியத்தைத் தடுக்கின்றன.

உடலில் தோன்றும் தேவையற்ற முடிகளை நீக்க மஞ்சள், குப்பைமேனி, வேப்பிலை சேர்த்து அரைத்துப் பூசலாம். மஞ்சள், பால், பச்சைப்பயறு மாவு, அரைத்த சந்தனம் சேர்ந்த கலவை சிறந்த முகப்பூச்சுக் கலவையாகும். குழந்தைகளைக் குளிப்பாட்ட மஞ்சள் பயன்பட்டதாக இல்க்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கிருமிநாசினிச் செய்கை உடையதால், புண்களுக்கான முதலுதவி மருந்தாக மஞ்சள் இருந்திருக்கிறது. மலைவாழ் மக்கள், உடலில் அட்டைப்பூச்சிகள் கடித்தால், அது தன் பிடியைத் தளர்த்த மஞ்சள் தூளைத் தூவுகின்றனர். மஞ்சளை நெருப்பிலிட்டு, அதன் புகையைச் சுவாசித்தால் தலைபாரம், தலைநீரேற்றம் குறையும்.

மஞ்சள், நமது கலாசாரத்தின் பசுமையான சின்னம்!

# இது நம்ம கதைகள்... 13

## பிரெஞ்சுப் பாதிரியாரும் பிக்மீ இனத்தவரும்


மத்திய ஆபிரிக்காவின் பல பகுதிகள் இன்னும் இருண்ட புலங்களாகவே காணப்படுகின்றன. அடர்ந்த காடுகளும், நவீன மாற்றங்களை உள்வாங்க மறுக்கும் மக்களும் இன்னும் மேற்குலகிற்கு அதிசயமாகவும் சவாலாகவுமே காணப்படுகின்றன. பாரம்பரியங்களில் ஊறிய பழங்குடி இனக்குழுக்களின் செல்வாக்கே அங்கே ஆதிக்கம் செலுத்துகின்றது.

இயற்கையுடன் ஒன்றித்து சுதந்திரமாக வாழ்ந்த இம் மக்கள் வாழ்வை 18 ஆம் ,19 ஆம் நூற்றாண்டுகள் புரட்டிப் போட்டன. பிரித்தானியா, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகள் ஆபிரிக்காவில் குவிந்து கிடந்த வளங்களை மோப்பம் பிடித்து பெரும் படையெடுப்புக்கள் நடத்தி மண்ணையும் மக்களையும் அடிமைகளாக்கின. நாகரிகமென்ற பெயரில் அந்த மக்களின் சுய கௌரவத்தையும், பாரம்பரியங்களையும் நாசமாக்கின.

மத்திய ஆபிரிக்க நாடுகளான கொங்கோ, சாட், சூடான், ருவண்டா போன்றவற்றைக் கூறு போட்டு தம் குடியேற்றங்களாக்கின. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் இந்த நாடுகள் மீள சுதந்திரம் பெற்றன. ஒரு நாடு கூறு போடப்பட்டு ஆளப்பட்டமையால் சுதந்திரத்தின் போது அவை பல நாடுகளாகவே பிரிந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்கத்தையவர் கைகளில் சிக்கி ஆபிரிக்கர்கள் அனுபவித்த இன்னல்கள் அளவற்றவை. இதனால் வெள்ளையர்கள் மீதான காழ்ப்புணர்வு இன்றும் அவர்கள் மத்தியில் நிலவுவதைக் காணலாம்.

கிழக்கு றொடிசியா ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திர சிம்பாவேயாக மாறியபோது அதன் முதல் சுதேச அதிபர் றொபேட் முகாபேயிடம் "சுதந்திர சிம்பாவேயில் நீங்கள் நிகழ்த்தவுள்ள முக்கிய மாற்றமென்ன ...?" என ஊடகவியலாளர் கேள்வியெழுப்ப , "இங்குள்ள தேவாலயங்களில் இனி தேவதூதர்களின் சொருபங்கள் கறுப்பாகவும், பசாசுகளின் சிலைகள் வெள்ளையாகவும் மாற்றப்படும் " என பல்லை நறுவிக்கொண்டு அவர் சொன்ன பதில் ஆபிரிக்கர்களின் மன வேதனைகளை அழகாக வெளிக்காட்டியது.

மேற்கத்தையவர்கள் ஆபிரிக்க நாடுகளைக் கைப்பற்றி குடியேற்றங்கள் அமைத்த போது குடியேற்றவாசிகளுடன், பிரித்தானியா, பிரான்ஸ் நாடுகளின் மதகுருமாரும் இணைந்தனர். இவர்கள் குடியேற்றவாசிகளின் ஆன்ம நலன்களைக் கவனித்ததுடன், தம் மதப் பரப்புரையிலும் ஈடுபட்டனர். பிரெஞ்சு கொங்கோ என முன்னர் அழைக்கப்பட்ட கொங்கோ ஜனநாயகக் குடியரசின் இன்றைய சனத்தொகையில் 50 % கத்தோலிக்கர்கள், 20 % புரட்டஸ்தாந்து மதத்தினர், 10 % வேறு கிறிஸ்தவ மதப்பிரிவினர் என்பது குறிப்பிடத்தக்கது.



கொங்கோ பழங்குடிகளில் மிகப் பிரபலமானவர்கள் பிக்மீ (Pygmi) பழங்குடியினர் ஆவர். இவர்கள் பண்டு (Bantu) மொழி பேசும் இனக்குழுமத்தைச் சேர்ந்தவர்கள். மிகக் கொடூரமான - மதிநுட்பமிகு வேட்டைக்காரர்கள் . குள்ளமான - உருளையான உடலமைப்பைக் கொண்ட இவர்கள் பார்ப்பதற்கு கொழுத்த காட்டுப் பன்றி போலிருப்பதால் பிக்மீ என அழைக்கப்பட்டனர். ஆண்களின் சராசரி உயரம் 4' 9". பெண்கள் ஆண்களை விட சற்று உயரமானவர்கள். இவர்கள் பயன்படுத்தும் அம்புகளில் கொடிய விஷத்தை தடவியிருப்பார்கள். மிகக்குறைந்தளவு ஆடைகளையே இவர்கள் அணிவார்கள். ஆண்கள், பெண்கள் எவருமே மேலாடையணிவதில்லை. ஆனால் விதம்விதமான மாலைகள் , துணிகள் கொண்டு தம் தலைமுடியை அழகுபடுத்துவதில் அலாதிபிரியமானவர்கள்.

பிக்மீ இனத்தவரிடையே மறை பணியாற்ற பிரான்ஸ் நாட்டுப் பாதிரியாரொருவர் நியமிக்கப்பட்டார். ஆயினும் அவர்களில் குறிப்பாக பெண்கள் மேலாடையணியாது உலாவுவது அவருக்கு தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தியது. பிரான்சில் வாழ்ந்த தன் உறவினர்கள், நண்பர்களிடம் உதவி பெற்று பெண்களுக்கான வண்ணமயமான மேலாடைகளைக் (blouse - Tops) கொள்வனவு செய்து பிக்மீ இனத் தலைவனிடம் கொடுத்து அடுத்த தடவை ஆலயம் வரும்போது இதை அணிந்து வரும்படி உங்கள் இனப் பெண்களிடம் கொடுங்களென்றார்.

மக்கள் ஆலயம் வரும் நாள் வந்தது. "இன்று எல்லாப் பெண்களும் மேலாடையணிந்து வரப் போகிறார்கள். இந்த மக்கள் வாழ்வில் நாகரிகத்தின் இன்னுமோர் பரிணாமம் இன்று நிகழப்போகிறது. அதுவும் என் முயற்சியால். நிச்சமாக இந்த மக்களின் வரலாற்றில் நானும் இடம்பிடிக்கப் போகிறேன். இந்த மக்கள் தங்கள் மானத்தைக் காத்த மகானாக என்னைப் புகழப் போகிறார்கள். இன்னும் சில நிமிடத்தில் மேலாடையின்றித் திரிந்தவர்கள் அழகான, வண்ணமயமான மேலாடைகளுடன் தங்கள் புது வாழ்வில் தடம் பதிக்கப் போகிறார்கள் " என்ற கற்பனையுடன் கண்ணை மூடிக் காத்திருந்தார் பாதிரியார்.


கண்ணைத் திறக்காமலே அருகில் நின்ற தலைவனிடம் "எல்லோரும் ஆலயம் வந்து விட்டார்களா....?" என்று கேட்டார். "ஆம், போதகரே" என்று தலைவன் சொன்னதும் கண்களைத் திறந்தார். ஆனால் அவர் அங்கு கண்ட காட்சியைப் பார்த்ததும் மயங்கிச் சரிந்தார் சரித்திரநாயகன்.

அந்தப் பெண்களெல்லாம் வண்ணமயமான அந்த மேலாடைகளை தங்கள் தலைகளில் தலைப்பாகையாகக் கட்டியிருந்தனர்.

மாற்றங்கள் கடினமானவை.
மாற்றம் என்பது நம்பிக்கையில் மலர்வது.
அறியாமையும் - அகந்தையுமே
அதன் தடைக் கற்கள் .

எப்.எக்ஸ்.அன்ரன்

# இப்படிக்கு பூமியின் அகதி!



கடந்த நான்கு மாதங்களாக மலேசிய விமான நிலையத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் ஹசன். இப்போதைக்கு அவருடைய வீடு அதுதான். உலகின் அத்தனை தேசங்களும் கைவிட்டுவிட்ட ஒரு மனிதன். இனி பூமியில் தனக்கு இடமில்லை என, செவ்வாய் (மார்ஸ்) செல்லவிருக்கும் அமெரிக்காவின் நாஸா குழுவில் தன்னையும் இணைக்க விண்ணப்பித்திருக்கிறார் இந்த "உலக அகதி."

அதிகாரபூர்வக் கணக்குகளின் படி உலகெங்கும் உள்ள சிரிய அகதிகளின் எண்ணிக்கை 63 இலட்சம். அதில், சிரிய் அகதிகளின் எண்ணிக்கையை இவ்வளவு தான் என உத்தேசமாகச் சொல்லவும் முடியாது. கடலில் ஒதுங்கும் பிணங்களின் எண்ணிக்கையையும், மலைகளில் விலங்குகளுக்கு இரையாகும் எண்ணிக்கையையும் சர்வதேச நிறுவனங்கள் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை.

உலகெங்கும் இருக்கிற நாடற்றவர்களின் எண்ணிக்கை 7 கோடி. அவர்களில் ஒருவர்தான் 'ஹசன் அல் கொண்டார்.'

சிரியாவைச் சேர்ந்தவர். ஐக்கிய அரபு நாட்டில் 2006ஆம் ஆண்டு இன்ஷூரன்ஸ் ஏஜென்ட் வேலைக்காகச் சென்றார். 2011இல் சிரியாவில் யுத்தம் தொடங்கியது. ஹசனை இராணுவத்தில் சேரச் சொன்னது சிரிய அரசாங்கம். மறுத்தார் ஹசன். விசாவை இரத்து செய்தது சிரிய தூதரகம். 2016 வரை ஐக்கிய அரபு நாடுகளிலேயே சட்டவிரோதமாகத் தங்கியிருந்தார் 2016இல் கைது செய்யப்பட்டார். 2017 வரை விசாரணை நடக்க, அதே ஆண்டில் மலேசியாவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

மலேசியாவுக்குள் மட்டும்தான் சிரிய குடிமகன்கள் எளிதில் செல்ல முடியும். ஆனால், மலேசியாவிலேயே அகதியாக வாழ முடியாது என்பதால், ஈகுவடோருக்குச் செல்ல முயற்சி செய்தார். அந்த முயற்சிகளும் தோல்வியடைந்தன. கம்போடியாவுக்குச் சென்ற ஹசனை அந்நாட்டு அரசு மலேசியாவுக்குத் திருப்பி அனுப்பியது. தஞ்சம் புக இடமின்றி ஐ.நாவை அணுகியும் எந்த உதவியும் கிடைக்கவில்லை. கனடாவுக்கு விண்ணப்பித்தார். 24 மாதங்கள் ஆகும் என்கிறார்கள்.

நாடற்ற மனிதனான ஹசன், செல்ல இடமின்றி, கடைசியில் மலேசிய விமான நிலையத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார். தன்னுடைய 37ஆவது பிறந்த நாளை மலேசிய விமான நிலையத்திலேயே கொண்டாடியிருக்கிறார் ஹசன்!

#mystory_hassan> #syrian_stuck_ at_airport போன்ற ஹேஷ்டேக்குகளில் தன்னைப்பற்றிய நிலைத் தகவல்களை டுவிட்டர், பேஸ்புக்கில் பதிவிட்டு வருகிறார் ஹஸன்.

ஒரே உணவை மூன்று வேளையும் உண்பது, அங்கிருக்கும் நாற்காலியில் படுத்துறங்குவது என ஹஸனின் வாழ்க்கை வித்தியாசமானது. இத்தனை துன்பங்களையும் அனுபவங்களையும் நகைச்சுவை கலந்து எழுதுகிறார். கிகி சேலஞ்ச் தொடங்கி கேம் ஒஃப் த்ரோன்ஸ் தொடர் வரை ஹஸன் பேசாத விடய்ங்களே இல்லை. அவருடைய பதிவுகளுக்கு உலகெங்கும் ரசிகர்கள் அதிகமாகிக் கொண்டிருக் கிறார்கள்!

"2011ஆம் ஆண்டிலிருந்து எங்களுக்கு இந்த நிலை தொடர்கிறது. இனவெறி எங்களைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. எங்களுக்கு இருப்பது மூன்று வழிகள்தான். எங்கள்ள நாங்களே சட்டவிரோதமாகக் கடத்திக் கொண்டு வெளியேற வேண்டும் அல்லது மெடிட்டரேனியன் கடலில் மூழ்கிச் சாக வேண்டும் அல்லது மலைகளில் பல மாதங்கள் நடக்க வேண்டும். இவற்றையெல்லாம் கடந்து நாங்கள் உயிரோடு இருப்போமாயின், எங்கேனும் தஞ்சம் புக எங்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படலாம். யாரோ எங்கள் நாட்டில் புரியும் போருக்கு, நாங்கள் இரையாகிக்கொண்டிருக்கிறோம்" என்று உலக அகதிகளுக்காகத் தொடர்ந்து ஒலிக்கிறது ஹசனின் குரல்.

பாஸ்போர்ட் காலாவதி ஆகிவிட்டால், ஹஸன் மலேசிய விமான நிலையத்திலும் இருக்க முடியாத நிலை. தன் அம்மாவுக்கு இப்போதும் ஹஸன் நம்பிக்கை வார்த்தைகளைத் தன் மொபைல் மூலம் அளித்துக் கொண்டிருக்கிறார். சில தினங்களுக்கு முன், ஹஸனின் கிராமமான அல் ஸ்வீடாவில் 200 நபர்களைக் கொன்று குவித்திருக்கிறார்கள் ISIS பயங்கரவாதிகள். அதில் அவரின் நண்பர்களும் அடக்கம். நிகழவிருந்த அவர் சகோதரரின் திருமணம்,



இந்தக் கொலைகளால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஹசனைப் போன்ற அகதிகள் கேட்பது வாழ்வதற்கான ஒரு நிலத்தைத் தான். சக மனிதனுக்கு அந்த உரிமையைக் கூடத் தர மறுத்துக்கொண்டிருக்கிறது உலகை ஆளும் அரசுகள்... என்றால் இந்த உலகம் யாருக்கானது?




# ஓங்கும் அதிகாரப் போட்டி

## அமெரிக்கா-சீனா- ரஷ்யா

"உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்த போது இலங்கைக்கு ஆயுதங்களை விற்க மறுத்த நாடுகள் இப்போது கொடையாக ஆயுதங்களை வழங்குகின்றன. இது ஏனென்றால் அவர்களின் பூகோள அரசியல் நலன்களை அடைவதற்காகவே என்றும் அவர் சாடியிருக்கிறார்"

இரண்டாம் உலகப் போர்க்காலத்துக்குப் பின்னர் அமெரிக்க வரலாற்றில் மிக அதிகமான பாதுகாப்புச் செலவினமாக அமையப் போகும், 2019ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டு அங்கீகாரச் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் கையெழுத்திட்டிருந்தார்.

இதற்கமைய 681.1 பில்லியன் டொலர், 2019ஆம் ஆண்டில் பாதுகாப்பு நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் போட்டியாக அமெரிக்காவின் படைபலத்தை அதிகரிக்கும் நோக்கிலேயே டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை கணிசமாக உயர்த்தியிருக்கிறது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமெரிக்கா தனது படைபலத்தை மாத்திரம் வலுப்படுத்திக் கொள்ளப் போவதில்லை. தனது நட்பு நாடுகள், பூகோள அரசியல் நலன்களின் அடிப்படையில் தனக்கு வேண்டிய நாடுகளின் படைபலத்தையும் அதிகரிக்கப் போகிறது.

அமெரிக்காவின் கூடுதலான இராணுவ நிதியைப் பெறப் போகின்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளும் உள்ளடங்கியிருக்கின்றன.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவத் தலையீடு மற்றும் செல்வாக்கை ஓரம்கட்டுவதற்கு இந்தியாவையும் இலங்கையையும் தமது முக்கிய பங்காளராக சேர்த்துக் கொண்டிருக்கிறது அமெரிக்கா.

2009 தொடக்கம் 2014 வரை இலங்கை தொடர்பாக கடைப்பிடித்த இறுக்கமான போக்கை 2015 ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் தளர்த்த ஆரம்பித்த அமெரிக்கா, இப்போது இன்னும் வேகமாக இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்குவதை அமெரிக்கா இடைநிறுத்தியிருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பயிற்சிகள் உள்ளிட்ட ஒத்துழைப்புகளை மாத்திரம் தொடர்ந்தது.

குறிப்பாக மனிதாபிமான அனர்த்த மீட்பு ஒத்துழைப்புகளையே தொடர்ந்து வந்த அமெரிக்கா 2015 இற்குப் பின்னர் இலங்கைக் கடற்படையை வலுப்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்கத் தொடங்கியது. கூட்டுப் பயிற்சிகள், ஒத்திகைகள் என்று இப்போது அவை விரிவடைந்துள்ளன.

அண்மையில் கூட இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த 62 கொமாண்டோக்களுக்கு திருகோணமலையில் பலன்ஸ் ஸ்ரைல் 2018/1 என்ற திட்டத்தின் கீழ் அமெரிக்க கடற்படையின் சிறப்பு போர்ப் படை அதிகாரிகள் 3 வாரகால பயிற்சிகளை அளித்திருந்தனர்.

இந்தநிலையில் தான் அமெரிக்கா இலங்கையின் கடல்சார் கண்காணிப்பு பலத்தை அதிகரிக்கும் வகையில் இராணுவ நிதியை வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடந்த வாரம் வெளியிட்ட அறிவிப்பில் இலங்கைக்கு 39 மில்லியன் டொலர் இராணுவ நிதி வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு அமெரிக்க பாராளுமன்றம் இன்னமும் அங்கீகாரம் அளிக்கவில்லை.

இந்த நிதியை எவ்வாறு செலவிடுவது என்று இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்தப் போவதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் அமெரிக்காவினால் இலங்கைக்கான இராணுவ நிதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் பெரும் பகுதி கடல்சார் கண்காணிப்புத் திறனை அதிகரிப்பதற்கே பயன்படுத்தப்படும்.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திரமான திறந்த சட்ட திட்டங்களுக்கு அமைவான கப்பல் பயணங்களை உறுதி செய்வதே அமெரிக்காவின் இலக்கு. அதற்காகவே இந்த இராணுவ நிதியை இலங்கைக்கு வழங்கவுள்ளது

அமெரிக்கா, இலங்கைக் கடற்படையின் பலத்தை அதிகரிப்பது இந்தத் திட்டத்தின் ஒரு கட்டம். இதற்காக அமெரிக்கா தனது கடலோரக் காவல் படையில் இருந்து நீக்கப்பட்ட போர்க்கப்பல் ஒன்றையும் இலங்கைக் கடற்படைக்கு வழங்கவுள்ளது.

யுஎஸ்சிஜி ஷேர்மன் என்ற பெயருடைய போர்க்கப்பலே இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்படவுள்ளது. ஹவாய் துறைமுகத்தில் தற்போது தரித்து நிற்கும் யுஎஸ்சிஜி ஷேர்மன் கப்பலின் மேற்தளத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வில் இந்தக் கப்பல் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்படும்.

378 அடி (115 மீற்றர்) நீளம் கொண்ட இந்தப் போர்க்கப்பல் 1967ஆம் ஆண்டு கட்டப்பட்டது. வியட்நாம் போரின் போது பல கப்பல்களை மூழ்கடித்து சாதனை படைத்த இந்தப் போர்க்கப்பல் அமெரிக்க கடலோரக் காவற்படையில் 50 ஆண்டுகள் பணியாற்றிய நிலையில் கடந்த மார்ச் மாதம் சேவையில் இருந்து நீக்கப்பட்டது.

யுஎஸ்சிஜி ஷேர்மன் போர்க்கப்பல் இலங்கைக் கடற்படையினரிடம் எதிர்வரும் 22ஆம் திகதி கையளிக்கப்பட்டாலும் உடனடியாக அது கொழும்புக்கு கொண்டு வரப்படாது. அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதமே கொழும்புக்கான பயணத்தை ஆரம்பிக்கும்.

அதற்குள்ளாக கப்பலில் திருத்த வேலைகள் மற்றும் கருவிகள் பொருத்தும் பணிகள் இடம்பெறுவதுடன் இலங்கைக் கடற்படையின் மாலுமிகளுக்கும் அதில் பயிற்சிகள் அளிக்கப்படும். இதற்கான செலவுகளை இலங்கை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே அமெரிக்கா 2004ஆம் ஆண்டு கடற்படைக்கு கொடுத்த போர்க் கப்பல் இப்போதும் எஸ்.எல்.என்.எஸ் சமுத்ர என்ற பெயருடன் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் அடுத்த ஆண்டில் அமெரிக்காவின் இன்னொரு கப்பலும் கடற்படையில் இணைந்து கொள்ளப் போகிறது.

சீனாவின் செல்வாக்கை உடைப்பதற்காக அமெரிக்கா போர்க்கப்பல் மற்றும் இராணுவ உதவிகளை இலங்கைக்கு அளித்து வருகின்ற நிலையில், சீனாவும் அதற்குப் போட்டியாக போர்க்கப்பல் ஒன்றை வழங்கப் போவதாக அண்மையில் அறிவித்திருந்தது. எந்த வகையான போர்க் கப்பலை இலங்கைக் கடற்படைக்கு சீனா வழங்கப் போகிறது என்று சீனா இன்னமும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை.

எனினும் **Type C28A** அல்லது **Type C 138** ரகத்தைச் சேர்ந்த போர்க்கப்பலாகவோ அல்லது அண்மையில் சீனக் கடற் படையில் இருந்து ஓய்வுபெற்ற **Type 053** போர்க்கப்பலாகவோ அது இருக்கக் கூடும் என்று நம்புவதாக சீன இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மூன்று வகை சீனப் போர்க் கப்பல்களும் தான் பொதுவாக ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுபவை.

சீனாவின் இந்தப் போர்க்கப்பல் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடும் என்று இந்திய ஊடகங்களும் ஆய்வாளர்கள் சிலரும் புரளியைக் கிளப்பி விட்டிருந்தார்கள்.

ஆனால் அதற்குச் சீன ஆய்வாளர்களோ, இந்தியா எவ்வாறு இலங்கைக் கடற்படைக்கு போர்க்கப்பல்களைக் கொடுத்ததோ அவ்வாறு தான் சீனாவும் கொடுக்கிறது என்று பதிலடி கொடுத்திருக்கிறார்கள்.

ஏற்கனவே இந்தியாவும் இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை இலங்கைக் கடற்படைக்கு கொடையாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் பழைய போர்க்கப்பல்கள் கொடையாக வழங்கப்பட்டாலும் கூட அவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜயந்த கொலம்பகே இந்திய ஊடகம் ஒன்றிடம் அண்மையில் தெரிவித்துள்ளார்.

போர்க்கப்பல்களை பல்வேறு நாடுகளில் இருந்து கொடையாக பெற்றுக் கொள்ளும் போது அவற்றில் பொருத்தக் கூடிய ஆயுதங்கள் தொடர்பாக பிரச்சினைகள் எழும்பக் கூடும். ஏற்கனவே இருந்த ஆயுதங்கள் பதிலீடு செய்யப்பட வேண்டும்.

பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடக் கூடும். கையாளுதல் மற்றும் பல ஆயுதப் பொறிமுறைகளை இணைத்தல் ஒரு சவாலான பணியாக இருக்கும். உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொள்வதும் பிரச்சினைக்குரிய ஒன்றாக இருக்கக் கூடும்.

இலங்கைக்கு இப்போது இராணுவத் தளபாடங்கள் தேவையில்லை. ஏனென்றால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் அவர்களின் முழுமையான இராணுவத் திறனும் அழிக்கப்பட்டதுடன் நிறைவுக்கு வந்து விட்டது.

ஆனாலும் பிராந்திய மற்றும் பூகோள ரீதியாக சக்திவாய்ந்த நாடுகள் இலங்கைக்கு இராணுவத் தளபாடங்களை குறிப்பாக போர்க்கப்பல்களை கொடையாக வழங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்தியப் பெருங்கடலின் கட்டுப்பாட்டுக்காக மேற்குலகம் மற்றும் இந்தியா ஒரு பக்கமும் சீனா மற்றொரு பக்கமும் நடத்துகின்ற போட்டிக்குள் இழுத்துச் செல்லவே இவ்வாறு போர்க்கப்பல்களை கொடையாக வழங்குகின்றன.

உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்த போது இலங்கைக்கு ஆயுதங்களை விற்க மறுத்த நாடுகள் இப்போது கொடையாக ஆயுதங்களை வழங்குகின்றன. இது ஏனென்றால் அவர்களின் பூகோள அரசியல் நலன்களை அடைவதற்காகவே என்றும் அவர் சாடியிருக்கிறார்.

2009 தொடக்கம் 2017 வரை 398 வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்துள்ளன.

இந்தியாவின் 82 போர்க்கப்பல்களும், பாகிஸ்தானின் 24 போர்க்கப்பல்களும், ஜப்பானின் 67 போர்க்கப்பல்களும், பங்களாதேஷின் 23 போர்க்கப்பல்களும், சீனாவின் 31 போர்க்கப்பல்களும், அமெரிக்காவின் 18 போர்க்கப்பல்களும், ரஷ்யாவின் 28 போர்க்கப்பல்களும் இந்தக் காலப்பகுதியில் இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

அட்மிரல் கொலம்பகேயின் கருத்து நிலையில் இருந்து பார்க்கும் போது சர்வதேச சக்திகளின் இராணுவ மயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கை அகப்பட்டு விட்டது என்றேகருத வேண்டியுள்ளது.

இலங்கை அரசாங்கமே நினைத்தாலும் கூட இதிலிருந்து இலகுவில் வெளியே வந்துவிட முடியாது என்பதையே இது உணர்த்தி நிற்கிறது.

# சச்சின் சாதனையை ஹோலி முறியடிப்பாரா?



நான் யாரைப் பார்த்து கிரிக்கெட் விளையாடத் தொடங்கினேனோ அவரோடு என்னை ஒப்பிடுகிறீர்கள். என்னோடு ஒப்பிட்டு அவருக்கு அவமரியாதை ஏற்படுத்திவிடாதீர்கள் என்று கோலியே ஒருமுறை சொல்லியிருக்கிறார்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒகஸ்ட் 18 ஆம் திகதி மாற்று ஓப்பனராக இந்திய அணிக்கு அறிமுகமானார் விராட் கோலி. இன்று... இந்திய கிரிக்கெட்டின் முகம் அவர்தான். இந்த 10 ஆண்டுகளில் அவர் கண்டிருப்பது அசுர வளர்ச்சி. சச்சினை ரோல் மாடலாகக் கொண்டிருந்தவர், அவரது இடத்தில் மாற்று வீரராகக் களமிறங்கினார். பின்னர் அவரோடு இணைந்து விளையாடினார். அவரை தோளில் சுமந்தார். இப்போது அவர் சுமந்த அணியையும் சுமந்துகொண்டிருக்கிறார். சச்சினோடு இணைந்தும் பேசப்படுகிறார்.

சச்சின் - அக்ரம், மெக்ராத், வார்னே போன்ற ஜாம்பவான்களை எதிர்த்து விளையாடியவர். அன்றைய கிரிக்கெட் பந்து வீச்சிலும் பல ஜாம்பவான்களைக் கொண்டிருந்தது. இன்று அப்படியல்ல. கிரிக்கெட் முழுக்கமுழுக்க பட்ஸ்மேன்களுக்கான ஆட்ட மாக மாறிவிட்டது. இங்கு யார் வேண்டுமானாலும் ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதம் அடிக்கலாம். அதனால் இன்றைய தலைமுறை வீரர்களை, முந்தைய தலைமுறை வீரர்களை ஒப்பிடுவது அபத்தம். நான் யாரைப் பார்த்து கிரிக்கெட் விளையாடத் தொடங்கினேனோ அவரோடு என்னை ஒப்பிடுகிறீர்கள். என்னோடு ஒப்பிட்டு அவருக்கு அவமரியாதை ஏற்படுத்தி விடாதீர்கள் என்று கோலியே ஒருமுறை சொல்லியிருக்கிறார்.

கோலி இந்த தலைமுறை வீரர்களிடமிருந்து தனித்து நிற்கிறார். தொடர்ந்து ரன்கள் குவிப்பதில் யாரும் தொடமுடியாத உயரத்தில் இருக்கிறார். சாதனைகளை ஜஸ்ட் லைக் தட் என உடைத்துக்கொண்டிருக்கிறார். ஆனால், அதற்காக கோலி சச்சினுக்கு நிகர் என்றோ, சச்சினைவிட பெஸ்ட் என்றோ சொல்வது முட்டாள்தனம். இருந்தாலும், சாதனைகள் எல்லோரும் முறியடிக்கக்கூடியதே. சச்சின், முரளிதரன், பிராட்மேன் என யாருடைய சாதனையை யார் வேண்டுமானாலும் முறியடிக்கலாம். அதுவும் கோலி ஒவ்வொரு சதம் அடிக்கும்போதும் ஒரு சாதனை முறியடிக்கப்படுகிறது.



அந்த வகையில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில், சச்சினின் ரன் மற்றும் செஞ்சுரி சாதனைகளை கோலி எப்போது, எந்த போட்டியில் முறியடிப்பார் என்று ஒரு கூட்டல், கழித்தல், வகுத்தல் கணக்கு போட்டுப் பார்த்தோம். சச்சினின் சராசரி, கோலியின் சராசரி, இன்னிங்ஸ் பெர் மேட்ச், செஞ்சுரி பெர் இன்னிங்ஸ் என எத்தனையோ criteria வரையறுக்கப்பட்டு அதன் மூலம் இதைக் கணித்திருக்கிறோம். இந்த 2 ஆண்டுகளில் ருத்ரதாண்டவம் ஆடிக்கொண்டிருக்கும் கோலி, இந்த 2 ஆண்டு (2017,2018) வேகத்திலேயே பயணித்தால் எப்போது சச்சினை முந்துவார்?

**இன்னிங்ஸ் பெர் மேட்ச்**

டெஸ்ட் போட்டிகளில் ஒரு பட்ஸ்மேன் இரண்டு இன்னிங்ஸ்களிலுமே விளையாடுவதில்லை. அதேபோல் ஒருநாள் போட்டிகளிலும், விளையாடும் அனைத்துப் போட்டிகளிலும் பட்டிங் செய்வதில்லை. சில போட்டிகள் மழையால் பாதியில் கைவிடப்படும். சில போட்டிகளில் எதிரணி இன்னிங்ஸ் தோல்வியடையும்போது, ஓப்பனிங் பட்ஸ்மேன்களே மேட்சை முடிக்கும் போதெல்லாம் ஒரு பட்ஸ்மேன் களமிறங்கும் இன்னிங்ஸ்களின் எண்ணிக்கை குறையும். உதாரணமாக கோலியையே எடுத்துக் கொள்ளலாம். கடந்த 2 ஆண்டுகளில் 15 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். பொதுவாகப் பார்த்தால் 30 இன்னிங்ஸ். ஆனால், அவர் பட்டிங் செய்துள்ளது 26 இன்னிங்ஸ்கள்தாம். அதனால் எத்தனை போட்டிகளில் கோலி இலக்கை எட்டுவார் என்று கணக்கிடும் முன், எத்தனை இன்னிங்ஸ் என்பதைக் கணக்கில் கொள்ளவேண்டியுள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் கோலி, சச்சினின் 15,921 ரன்களை முந்த இன்னும் 10,128 ரன்கள் அடிக்கவேண்டும். கடந்த 2 ஆண்டுகளில் அவர் கொண்டுள்ள 66.04 என்ற சராசரியில் அந்த இலக்கை எட்ட அவருக்கு அவருக்கு இன்னும்154 இன்னிங்ஸ்கள் தேவைப்படும். அதை அவர் எத்தனை போட்டிகளில் விளையாடியிருப்பார். இந்த இடத்தில்தான் இன்னிங்ஸ் பெர் மேட்ச்சின் தேவை ஏற்படுகிறது. இந்த 2 ஆண்டுகளில் அவர் விளையாடியுள்ள இன்னிங்ஸ்களை (26), போட்டியால் வகுத்தால் (15), கோலி ஒரு போட்டிக்கு சராசரியாக 1.73 இன்னிங்ஸ்கள் விளையாடியிருக்கிறார். சச்சினை முந்த தேவைப்படும் இன்னிங்ஸ்களை (154) இன்னிங்ஸ் பெர் மேட்ச்சால் (1.73) வகுக்கும்போது அவருக்கு எத்தனை போட்டிகள் தேவை என்பதைக் கணக்கிட்டு விட முடியும். டெஸ்ட் போட்டிகளில் இந்த 2 ஆண்டு வேகத்திலேயே கோலி விளையாடினால், சச்சினின் ரன் சாதனையை இன்னும் 89 போட்டிகளில் முடித்துவிடுவார். அதாவது தன் 158ஆவது டெஸ்ட் போட்டியில்!



**செஞ்சுரி பெர் மேட்ச்**

சரி, சச்சினின் 51 சதங்களை விராட் எப்போது முறியடிப்பார். லார்ட்ஸ் டெஸ்ட் போட்டிவரை 22 சதங்கள் அடித்துள்ள கப்டன் கோலி, சச்சினின் சாதனையை முந்த இன்னும் 30 சதங்கள் தேவை. 2017ஆம் ஆண்டுக்குப் பிறகு 7 டெஸ்ட் சதங்கள் அடித்துள்ளார். 26 இன்னிங்ஸ்களில் 7 சதம் எனில், ஒவ்வொரு இன்னிங்ஸுக்கும் சராசரியாக 0.27 சதம். இந்த விகிதத்தில் அவர் இன்னும் 30 சதங்கள் அடிக்க 112 இன்னிங்ஸ்கள் தேவை. இந்த இடத்திலும் இன்னிங்ஸ் பெர் மேட்ச் criteria-வை புகுத்தினால், 30 சதங்கள் அடிக்க இன்னும் அவருக்கு 65 போட்டிகள் தேவை. அதாவது தன் 133-வது போட்டியில்.

இதேபோல்தான் ஒருநாள் போட்டிகளுக்கும் கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக ஒருநாள் போட்டிகளில் மிரட்டலாக ஆடிவரும் விராட், 35 போட்டிகளில் 2,209 ரன்கள் குவித்துள்ளார். 88.36 என்ற சராசரியில் விளையாடினால், சச்சினின் 18,426 ரன்கள் என்ற சாதனையை இன்னும் 98 இன்னிங்ஸ்களிலேயே முறியடித்துவிடுவார். 2016, 2017-ம் ஆண்டுகளில், ஒருநாள் போட்டிகளில் அவரது இன்னிங்ஸ் பெர் மேட்ச் 1 என்பதால் அவருக்குத் தேவைப்படும் போட்டிகளின் எண்ணிக்கையும் 98 தான். விராட் ஒருநாள் போட்டிகளில் சச்சினின் ரன்களை தன் 309-வது போட்டியில் முறியடிக்கக்கூடும்.

இந்த இரண்டு ஆண்டுகளில் ஒவ்வோர் ஒருநாள் இன்னிங்ஸ்களுக்கும் 0.26 சதம் அடித்துள்ளார் விராட். அதாவது 35 இன்னிங்ஸ்களில் 9 சதங்கள். இந்த விகிதத்தில் அவர் 50 சதங்கள் அடிக்க இன்னும் 58 போட்டிகள் போதும். அதாவது 58 ஆட்டங்கள். தன் 269ஆவது போட்டியிலேயே அவரால் சச்சினின் சத சாதனையை ஒருநாள் போட்டிகளில் முறியடிக்கக்கூடும்.

விராட் கடந்த 2 ஆண்டு பார்மில் விளையாடினால், அந்தந்த பார்மட்களில் சச்சினின் சாதனைகளை முறியடிப்பார் என்று கணித்திருக்கிறோம். ஆனால், இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு அவரால் இதே பார்மில் விளையாட முடியும். இறுதிக்கட்டத்தில் சச்சினின் வேகமே குறைந்ததே. மிஞ்சிப் போனால் கோலியால் இன்னும் மூன்று நான்கு ஆண்டுகள் இதே வேகத்தில் ஆட முடியும். அதன் பின் நிச்சயம் வேகம் குறையும், இதையும் கவனத்தில் கொள்வது அவசியம். அதனால் இதுவரையிலான கோலியின் வாழ்நாள் சராசரி, இன்னிங்ஸ் பெர் மேட்ச், செஞ்சுரி பெர் மேட்ச் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்தும் கணிக்கப்பட்டுள்ளது.

# எங்கெங்கு காணிலும்...



அன்பான சங்குநாத வாசகர்களுக்கு ஜிம்மிக்குட்டியின் அன்பான வணக்கங்கள்.

“எங்கெங்கு காணிலும் சக்தியடா தம்பி
ஏழு கடல் அவள் வண்ணமடா”

என்ன கொடுப்புக்கை சிரிக்கிறியள். கவிதை கவிதையா வருகுது. அவ்வளவு சந்தோசம்-தெய்வீக அனுபங்கள் இப்ப கொஞ்ச நாளா கிடைச்சபடியே இருக்கு. எல்லாம் இருக்குமிடத்தைப் பொறுத்ததுதானே. அதுதான் பெரியவரோடை திரியிறதாலை அவர் பெற்ற இன்பம் நானும் பெற்றுக் கொண்டிருக்கிறன். சாம்பிராணிப்புகை வாசமும் கற்பூர ஒளியும் நாதஸ்வர இசையும் மணி ஓசைகளும் ம்..ம்...குடுத்து வைச்சுப் பிறந்திக்கிறன். பிரார்த்தனை, நேர்த்தி எண்டு வாறவை தலையை விரிச்சுப் போட்டு வாறதைப் பற்றி எல்லாரும் தான் கத்திக் கத்திச் சொல்லுகினம். எனக்கும் விளங்கும். பார்த்தாலே பத்திக் கொண்டு வரும். ஓமோம் சன நெரிசலுக்கை இந்தத் தலை விரிகோலம் எவ்வளவு கரைச்சலைக் குடுக்குது. பின்னாலை நிக்கிறவை எல்லாம் ஒரே தும்மல் தான். பின்னை என்ன அப்பிடியும் இப்பிடியும் தலையைத் திருப்பத் திருப்ப தலைமுடி மூக்குக்கு உள்ள போக எப்படி இருக்கும் சொல்லுங்கோ.

அதுசரி...பிரசாதங்கள், புத்தகங்கள் விக்கிற இடத்திலை இனி ஒரு பெட்டிக் குட்டானுக்குள்ள நிறம் நிறமா இருக்கிற... அந்தப் பின்னுக்குப் போடுற “வூல்பான்ட்” எண்டு சொல்லுற வட்ட வட்ட வளையமா இருக்கும். அதையும் இலவசமாக குடுக்கலாம் எண்டு அண்டைக்கு நான் நினைச்சனான். ஒலிபெருக்கியிலை, நகைகள் பத்திரம், காசு பத்திரம், போன் பத்திரம் எண்டு சொல்லுற மாதிரி தலைவிரிச்சுக் கொண்டு வாறவையிட்ட இந்த வூல்பான்ட் இலவசமாக கிடைக்கும் எண்டு அறிவிச்சுப் போட்டு எடுத்துக் குடுத்தால் அவை அதைப் போட்டுக் கொண்டு போவினம் தானே. எனக்குத் தெரியுது சிரிப்பை அடக்கிறியள் போல. அல்லது கல்லைத் தேடுறியளோ எறியிறதுக்கு... பின்னை என்ன தலையை விரிச்சுப் போட்டு கற்பூரத் தீபத்துக்குப் பக்கத்திலை போனா செகச் சோதியா நெருப்புப் பத்தி எல்லோ எரியும். ஏன்... இதை ஒருத்தரும் கவனிக்கிறேல்லையோ?

“பிள்ளை இஞ்சை வாருங்கோ. இந்த வூல்பான்ட் போட்டுத் தலைமுடியை ஒதுக்கிக் கட்டிக் கொண்டு உள்ளை போங்கோ. நாளைக்கு பின்னிக்கொண்டு வாங்கோ...” இப்பிடிச் சொல்ல ஒரு நாதி இல்லை.

மரியாதையான இரண்டு அம்மாக்கள் இப்பிடிச் செய்தால் இந்தப் பிரச்சினை தீரும்தானே. ம்...“நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு” எண்டு எங்கடை இனத்தைப் பற்றி மாணிக்கவாசகர் திருவாசகத்திலை பாடியிருக்கிறார் பாருங்கோ... எங்களைவிடத் தன்னைக் கீழானவன் எண்டு எவ்வளவு பரிதவிப்போடை பாடியிருக்கிறார். அப்ப இப்பிடியான கருத்துக்களைச் சொல்ல எனக்கு உரிமை இருக்குத்தானே.

அம்மாளாச்சியைத் தேரிலை வைச்சுப் பார்க்க வந்த சனத்தை நினைச்சால் கண்ணீர் பெருகுது. எங்கை பார்த்தாலும் தலைகள் தலைகள். தலைக்கு மேலை குவிச்ச கைகள். இந்தக் காட்சியைத் திரும்பவும் காண ஒரு வருசம் காத்திருக்க வேணும். அதுவரைக்கும் வீடியோவைப் பார்த்துக்கொண்டிருக்கலாம் தானே. பெரியவர் வாறார். பக்கத்திலை இருக்கிறார். என்னைப் பார்க்கிறார்.

“என்ன ஜிம்மி புலம்பிறாய். நீயும் பேப்பர் பார்த்தியோ?

ஒரே வன்முறை வன்முறை- எங்கை பார்த்தாலும் வாளேந்திய மறவர்குழுதான். ம்... அவங்களைப் பிடிச்சு முள்ளு மிதியடி கட்டி நடக்க விட வேணும். தெய்வத்தை மண்டாடினாலாவது நல்ல புத்தி வராதே? ஒரே தலை வேதனைதான்.

பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தினம். பார்த்தீனியத்தை ஒழிச்சுக் கட்டினம். டெங்கு ஒழிப்பிலையும் வெற்றி காணுறம். இந்தப் போதையையும் வன்முறையையும் ஒழிக்க முயேல்லையே... பூபாரம் தீர்த்து புவி காத்த அவதாரங்கள் எல்லாம் மௌனித்துப் போய் உறை பனியாகி விட்டனரோ. பாய் விரித்துப் படுப்பவனும் வாய் திறந்து தூங்கும் போது பஞ்சணையில் படுத்தும் நெஞ்சில் அமைதியில்லை என்று பாடிய கவிஞர்கள் வாக்கை மறுதலிப்பதுபோல் “இல்லானை இல்லாளும் வேண்டாள்” என்று செல்வச் செழிப்புக்கு முக்கியம் கொடுத்தவர்களும் நம் முன்னோர்தானே. பேனா முனைகளெல்லாம் கூர் பெறுமேயானால் ஆயுதக் கிடங்குகள் யாவும் மூடப்பட்டுவிடும் என்று மார்தட்டிய கவிஞர்கள் இன்றும் உயிர்ரோடு வாழ்கிறார்கள். ஆனால் கூர் மழுங்கிய பேனாக்களும் குப்பைக் கூடமாகி விட்ட அறிவியல் தளங்களும் பலமிழந்துவிட்ட துர்ப்பாக்கிய நிலையில் இது யார் குற்றம் என்று ஆராய்வதில் என்ன பயன். அற்புதமான இளமைகள் அழிந்து கொண்டிருக்க எதிர்கால சந்ததியே வெறும் சடங்களாக, நடைப் பிணங்களாக உலாவும் நிலையை நோக்கித் தளம்பி தள்ளாடிய நிலையில் மணற்புயல் வீசும் பாலைவனமாக இந்த மண் மாதா வரண்டு தவிக்கிறாள். பசுமை பொங்கும் இளையோரைப் படுகுழிகள் விழுங்கி விட்டனவே. போதை, அறிவைக் கெடுக்க அறியாமை ஆட்சி செலுத்த அறிவுத்தெய்வம் ஒடுங்கிப் போய் விடுகின்ற துர்ப்பாக்கிய நிலையைத் தெய்வங்கள் சீர்படுத்த முன்வருமா? ம்...” ஆற்றாமையோடு பெரியவர் சாய்ந்து பெருமூச்சு விடுகிறார். பாவம்.ம்...எனக்கும் அழுகை வருது.நான் போட்டு வாறன்.

திருமதி.பாரதி கணேஷ்
சுன்னாகம்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அவள் ஒரு தொடர்கதை
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
இயற்றியவர் : கண்ணதாசன்
பாடகர் : கே.ஜே.ஜேசுதாஸ்




தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
இந்த ஊரென்ன சொந்த வீடென்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?

நான் கேட்டுத் தாய் தந்தை படைத்தாரா? ஆ...
நான் கேட்டுத் தாய் தந்தை படைத்தாரா? - இல்லை
என் பிள்ளை எனைக் கேட்டுப் பிறந்தானா?
தெய்வம் செய்த பாவம் இது போடி தங்கச்சி
கொன்றால் பாவம் தின்றால் போச்சு இதுதான் என் கட்சி

ஆதி வீடு அந்தம் காடு இதில்
நான் என்ன அடியே நீ என்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?

வெறும் கோவில் இதிலென்ன அபிஷேகம் உன்
மனமெங்கும் தெருக்கூத்து பகல் வேஷம்
கள்ளிக்கென்ன முள்ளில் வேலி போடி தங்கச்சி
காட்டுக்கேது தோட்டக்காரன் இதுதான் என் கட்சி


கொண்டதென்ன கொடுப்பதென்ன - இதில்
தாயென்ன மணந்த தாரம் என்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதையென்ன?

தெளிவாகத் தெரிந்தாலே சித்தாந்தம் - அது
தெரியாமல் போனாலே வேதாந்தம்
மண்ணைத் தோண்டித் தண்ணீர் தேடும் அன்புத் தங்கச்சி
என்னைத் தோண்டி ஞானம் கண்டேன் இதுதான் என் கட்சி

உண்மை என்ன பொய்மை என்ன இதில்
தேனென்ன கடிக்கும் தேளென்ன ஞானப் பெண்ணே

வாழ்வின் பொருளென்ன நீ வந்த கதை என்ன?
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு
தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு

# உலக சாதனை படைத்த சிறுவன்



சீனாவில் 11 வயது சிறுவன் ஒருவன் 6 அடி உயரம் வளர்ந்து இருப்பதால் உலகிலேயே உயரமான சிறுவன் என்னும் பெருமையைப் பெற்றுள்ளான்.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தை சேர்ந்த ரேன் கேயூ என்ற 11 வயது சிறுவன் அதே பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் தரம் 6 இல் படித்து வருகிறான். அந்த சிறுவனின் உயரம் 6 அடி ஆகும்.

இது குறித்து பேசிய அந்தச் சிறுவன், சிறு வயதிலிருந்தே ஏனைய குழந்தைகளை விட நான் உயரமாக இருந்தேன். உயரமாக இருந்ததால் என்னால் பாடசாலை நாற்காலியில் உட்கார முடியவில்லை. நான் உயரமாக இருப்பதால் என்னை விளையாட்டில் சேர்க்கத் தயங்குவார்கள். மேலும் பலர் என்னை அதிசயமாகப் பார்ப்பார்கள். இதனிடையே நான் 6 அடி உயரம் பெற்றிருப்பது கின்னஸ் சாதனை புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது என அந்தச் சிறுவன் கூறியுள்ளான்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசையா அருந்ததிப்பிள்ளை



யாழ். சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், தில்லைகட்டியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட **இராசையா அருந்ததிப் பிள்ளை** அவர்கள் 23.08.2018 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வையித்திலிங்கம் -மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு - கைராசி தம்பதிகளின் அன்பு மருமகளும், இராசையா (இளைப்பாறிய காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், லதா (ஜேர்மனி), சுதாகர் (லண்டன்), ஸ்ரீதர் (மட்டுவில்), வனஜா (ஜேர்மனி), பிரபாகர் (நோர்வே), சகிலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், நடராஜா, இராமசந்திரன் மற்றும் சாந்தா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தனபாலசிங்கம் (ஜேர்மனி) திருலோகநாயகி (லண்டன்), ஜெயந்தா (மட்டுவில்), உருத்திரகுமார் (ஜேர்மனி), நிமலராஜி (நோர்வே), புவேனந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஷா, ஷாலினி, ஷாமிலி, கஜேந்திரநாத், ராம்நாத், உதயநாத், அசோக்நாத், கஜதீபா, நிதுரன், டுவாரகன், தாரணி, அஜய், ஆகாஸ், பாரதி, இளங்கோ, மக்சிம், மத்தில்த், ஜனிக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டாஷா, ஈஷா, ஆருஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியை 26.08.2018 ஞாயிற்றுக்கிழமை இன்று மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கொத்தியாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தில்லைகட்டி. சுன்னாகம். தகவல் - குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு :- 021 791 1891. 077 613 6767

(5472)

## கோலமாவு கோகிலா 20 கோடி ரூபாய் வசூல்



நயன்தாரா லேடி ப்பர் ஸ்டார் என்ற பட்டத்திற்கு மிகவும் பொருத்தமானவர். இவர் நடிப்பில் சமீபத்தில் கோலமாவு கோகிலா படம் திரைக்கு வந்தது.

இப்படம் ரசிகர்கள் மத்தியில் செம்ம வரவேற்பு பெற்றுள்ளது. இதுவரை தமிழகத்தில் மட்டுமே இப்படம் ரூ 15 கோடிகளுக்கு மேல் வசூல் செய்துவிட்டது.

அதை விட கர்நாடகாவில் ரூ 1 கோடி இப்படம் வசூல் செய்ய, ஒரு ஹீரோயின் படத்திற்கு இப்படி ஒரு வரவேற்பு வெளி மாநிலத்தில் சாதாரணம் இல்லை. உலகம் முழுவதும் கோலமாவு கோகிலா ரூ 20 கோடி வரை வசூல் செய்துவிட்டதாக கூறப்படுகின்றது.

## அடுத்த 5 நாட்களுக்குள் சர்கார்




தளபதி விஜய் நடிப்பில் இந்த தீபாவளிக்கு சர்கார் படம் பிரமாண்டமாக வரவுள்ளது. இப்படத்தின் மீது ஏற்கனவே பெரிய எதிர்ப்பார்ப்பு உருவாகிவிட்டது.

இந்நிலையில் நேற்று சர்கார் இசை வெளியீட்டு விழா ஒக்டோபர் 2 என அப்டேட் வர ரசிகர்கள் இணையத்தை தெறிக்கவிட்டனர்.

தற்போது அவர்களை இன்னும் சந்தோஷமாக்க அடுத்தடுத்த 5 நாட்களில் சர்கார் படத்தின் படப்பிடிப்பு புகைப் படங்கள் வெளி வரவுள்ளதாம்.

இதை சன் பிக்சர்ஸ் நிறுவனம் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

Athavan News

இலங்கை செய்திகள் | உலகச் செய்திகள்
சினிமாச் செய்திகள் | விளையாட்டுச் செய்திகள் | சுவாரசிய துணுக்குகள்
போன்றவற்றை உடனுக்குடன் அறிந்துகொள்ள

www.athavannews.com




உங்கள் MOBILE & TABLET களில்
ஆதவன் நியூஸ்
APPS இனை DOWNLOAD செய்து
பெறுமதிமிக்க பரிசில்களை
வெல்லுங்கள்

GET IT ON Google Play
Download on the App Store

Terms & conditions apply. Closing date 10th September 2018 at 10:00 am Sri Lanka time
You must download the Athavan News app to be eligible to enter the raffle.

நல்லூர் முன்றலில் செப்டெம்பர் 10ஆம் திகதி ( பூங்காவனத் திருவிழா ) மாலை 6 மணிக்கு
அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்படுவர்

ஆதவன் தொலைக்காட்சி மற்றும் இணையத்தளத்தில் விளம்பரங்கள், மரண அறிவித்தல்களுக்கு

தொடர்பு கொள்ளுங்கள் 011 406 3006 sales@athavannews.com

# தளபதி-தலைவர் காத்திருக்கும் தலைவலிகள்





தி.மு.க.பொதுக்குழுதான், அந்தக் கட்சியின் திசைவழியைத் தீர்மானிக்கும் முக்கிய செயற்பாடு. கருணாநிதி இருந்தவரை அது பெரிய சலசலப்பை ஏற்படுத்தியதில்லை. ஆனால், தற்போது நடக்கப்போவது, கருணாநிதி இல்லாத காலத்தில் நடைபெறும் முதல் பொதுக்குழு. கருணாநிதியின் வாரிசுகளில் ஒருவரான அழகிரி தன்னைக் கட்சியில் சேர்க்க வேண்டும் என்று ஒரு பக்கம் போர்க் கொடி உயர்த்திக் கொண்டிருக்க, மற்றொரு வாரிசான ஸ்டாலினுக்குத் தலைவர் பட்டம் கட்டப்போகும் இந்தப் பொதுக்குழுவை, அரசியல் களத்தைத் தாண்டி அனைவரும் உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

**தள்ளிப்போன பொதுக்குழு!**

2016ஆம் ஆண்டு நடக்க வேண்டிய தி.மு.க பொதுக்குழு நடக்கவில்லை. காரணம், கருணாநிதிக்கு அப்போது உடல் நிலை சரியில்லாமல் போனது. அதனால், 2017 ஜனவரி 4 ஆம் திகதி அது நடைபெற்றது. அதில் கருணாநிதி கலந்துகொள்ளவில்லை. மு.க.ஸ்டாலின் அப்போது செயல் தலைவர் என்ற பதவியைப் பெற்றார். அத்துடன், அவரிடம் பொருளாளர் பதவியும் இருக்கிறது. 2017இல் நடக்க வேண்டிய பொதுக்குழுவும் கருணாநிதியின் உடல் நிலை காரணமாகத் தள்ளிப்போனது. அது ஓகஸ்ட் 19 ஆம் வானகரம் திருமண மண்டபத்தில் நடக்கும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், அதுவும் கருணாநிதி உடல் நிலையால் தள்ளிப்போனது. இந்த நிலையில், அவர் மரணத்துக்குப் பிறகு, ஓகஸ்ட் 28ஆம் திகதி தி.மு.க பொதுக்குழு நடைபெறவுள்ளது. இதில் செயல் தலைவர் ஸ்டாலின் தலைவராக ஆவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

**புதிய பொருளாளர்!**

தி.மு.கவில், பொருளாளர் பதவி மிக முக்கியத்துவம் வாய்ந்தது. கருணாநிதியும், எம்.ஜி.ஆரும், மு.க.ஸ்டாலினும் அந்தப் பதவியை வகித்தவர்கள் என்பதிலிருந்தே அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். அண்ணா காலத்தில் கருணாநிதி அந்தப் பதவியில் இருந்தார். அதன்பிறகு, அந்தப் பதவிக்கு எம்.ஜி.ஆர்.வந்தார். அப்போதுதான், கருணாநிதிக்கு எதிராக அவர் கணக்குக் கேட்டது, கலகம் செய்தது எல்லாம். தி.மு.கவிலிருந்து பிரிந்து அ.தி.மு.க உதயமானது. எம்.ஜி.ஆருக்குப் பிறகு, 1994 வரை அந்தப் பதவியில் சாதிக் பாட்சா இருந்தார். அவருக்குப் பிறகு, ஆற்காடு வீராசாமியிடம் அந்தப் ப்தவி ஒப்படைக்கப்பட்டது. மு.க.ஸ்டாலின் விரும்பி அந்தப் பதவியைக் கேட்டுப்பெற்றார். அதில் மனம் உடைந்து போன ஆற்காடு வீராசாமியை சமாதானம் செய்வதற்காகவே, தி.மு.க. விதியைத் திருத்தித் தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் என்ற பதவியை உருவாக்கி, அதில்அவரை அமர்த்தினார் கருணாநிதி. உடல் நலக் குறைவு ஏற்பட்டதும், அந்தப் பதவியிலிருந்தும் ஆற்காடு ஒதுங்கிக் கொண் டார். அதனால், அது துரைமுருகனுக்குப் போனது.

2008 முதல் இப்போதுவரை பொருளாளர் பதவி ஸ்டாலின் வசம்தான் உள்ளது. அந்தப் பதவியைக் கைப்பற்ற துரைமுருகன், டி.ஆர்.பாலு, பொன்முடி, ஐ.பெரியசாமி, எ.வ.வேலு போன்றோர் கடும் முயற்சியில் இறங்கினர். இந்த ரேஸில்முன்னணியில்இருந்தவர் எ.வ.வேலுதான். கட்சிக்குப் பெருமளவு நிதி கொடுத்துப் பெரிய புரவல ராகத் திகழ்ந்த அவர்மீது, ரஜினியுடன் நெருக்கம் காட்டுகிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. "தி.மு.க அறக்கட்டளை விடயத்தில் நிகழ்ந்த ஒரு குளறுபடியும் அவரைப் பின்னுக்குத் தள்ளியது. எனவே, பெரும்பான்மை அடிப்படையில் அந்தப் பதவி துரைமுருகன் வசம் போகிறது.

**முதன்மைச் செயலாளர்!**

துரைமுருகன் இதுவரை வகித்துவந்த முதன்மைச் செயலாளர் பதவி இப்போது டி.ஆர்.பாலுவுக்குச் செல்கிறது. இதுதான் புது சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. "கட்சியில் டி.ஆர்.பாலு சீனியர். அவர் அந்தப் பதவிக்குத் தகுதியானவர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால், முதன்மைச் செயலாளராகவும், துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவராகவும் முக்குலத்தோர் இனத்தைச் சேர்ந்தவர்களே இருக்கிறார்கள். தி.மு.கவின் முக்கிய வாக்கு வங்கியான முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. சற்குண பாண்டியன் மறைந்த பிறகு நாடார் சமூகத்துக்கும் மேடையில் இடமில்லை. தமிழகத்தின் பெரும்பான்மை சாதியினர் பலருமே குறிப்பிட்ட கட்சிகளின் வாக்கு வங்கிகளாக மாறிவிட்டனர். சின்னச்சின்ன ஜாதிகளைச் சேர்ந்த தலைவர்களுக்கு மரியாதை கொடுத்தே தி.மு.க வளர்ந்துவந்தது. இந்த வாக்கு வங்கிதான் வட மாவட்டங்களிலும் மத்திய மாவட்டங்களிலும் தி.மு.கவுக்கு வெற்றியைத் தேடித் தருகிறது. ஆற்காடு வீராசாமி பதவி விலகியபிறகு, அவர்களுக்கும் முக்கியத்துவம் இல்லை. இது பெரும் மனக் குமுறலை ஏற்படுத்தியுள்ளது" என்கிறார்கள் தி.மு.கவின் முன்னணி தலைவர்கள் சிலர்.

**மற்ற முன்னணிப் பதவிகள்!**

தி.மு.க செயற்குழு, பொதுக்குழு மேடைகளில் அமரும் வாய்ப்பு... தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் துணைப் பொதுச் செயலாளர்களுக்குக் கிடைக்கும். தி.மு.கவில் நான்கு துணைப் பொதுச் செயலாளர்கள் பெண்களுக்கு 50சதவீத இட ஒதுக்கீடு ஓர் இடம் தலித் என்ற வகை யில் இதில் பங்கீடு இருக்கும். சற்குண பாண்டி யன் இறந்துவிட, வி.பி.துரைசாமி, ஐ.பெரிய சாமி, சுப்புலட்சுமி ஜெகதீசன், ஆகியோர் மட்டுமே இப்போது துணைப் பொதுச் செயலா ளர்களாக உள்ளனர். சற்குண பாண்டியன் இடத்துக்குப் புதியவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இந்தப் பதவி தனக்குக் கிடைக்கும் என கனிமொழி எதிர்பார்க்கிறார். ஆனால், அவருக்கு இந்தப்பதவி இப்போதைக்குக்கிடைக்க வாய்ப்பில்லை என்கிறார்கள் உள்விபரம் அறிந்தவர்கள். ஏனெனில், சற்குண பாண்டியன் இடத்தில் வேறு யாரையும் இப்போது நியமிக்கும்எண்ணம்இல்லை. ஈரோடுமண்டல மாநாட்டில் சுப்புலட்சுமி ஜெகதீசன் சரியாகச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு கிளம்பியது. அதனால், அவரது இடத்துக்கு வேறு யாரை யாவது கொண்டு வரலாம் என்று பேச்சு எழுந்தது. வி.பி. துரைசாமிக்கு பதிலாக துணைப்பொதுச் செயலாளராக ஆ.ராசாவை நியமிக்கலாம் என்றும்பேசப்பட்டது. ஆனால், "அழகிரி குழப்பம் இருக்கும் நேரத்தில் புதிய குழப்பங்கள் வேண்டாம் என்பதால், துணைப் பொதுச் செயலாளர்களில் எந்த மாற்றமும் செய்ய வேண்டாம் என ஸ்டாலின் தீர்மானித்திருக் கிறார்" என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள்.

**அழகிரி அழைப்பு!**

இப்போது ஸ்டாலின் கண்களுக்குத் தலைவர் நாற்காலி பெரிதாகத் தெரிந்தாலும், அதைவிட பூதாகரமாக அழகிரியின் உருவம் தென்படுகிறது. செப்டெம்பர் 5 ஆம் திகதி சென்னையில் பேரணி நடத்தவிருப்பதாக அறிவித்திருக்கும் அழகிரி, அதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாகிவிட்டார். தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும், பொறுப்பில் உள்ள மாவட்டச் செயலாளர்களுக்கு எதிராகச் செயற்பட்டுவரும் அதிருப்தி கோஷ்டியினரின் பட்டியல் இப்போது அவர் கைகளில் இருக்கிறது. சென்னையில் ஆரம்பித்து காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், வேலூர், திருவண்ணாமலை என வடமாவட்டங்களில் இருக்கும் அதிருப்தியாளர்கள் பலருக்கும் அழகிரி தரப்பிலிருந்து போன் போகிறது. முக்கியமான நபர்களிடம் அழகிரியே பேசுகிறார். "நீங்கள்வரவேண்டாம் ஆனால் உங்கள் ஆதரவாளர்களை அனுப்பி வையுங் கள். இப்போதைக்கு உள்ளே இருந்தபடி அமைதியாகச் செயற்படுங்கள். நேரம் வரும்போது வெடித்துக் கிளம்பலாம்" என்று சொல்லியிருக்கிறார். இதைத் தொடர்ந்து, பலரும் தொண்டர்களை அனுப்பிவைப்பதாக உத்தரவாதம் கொடுத்துள்ளனர். அதன்னால் தான், "அமைதிப் பேரணிக்குத் தலைவர்கள் யாருக்கும் அழைப்பு விடுக்கவில்லை. தி.மு.கவில் தொண்டர்கள் தான் தலைவர்கள்" என்று அழகிரி கூறினார்.

**அழகிரிக்கு அடுத்து...**

அழகிரி சவாலைக் கடந்துவருவதை அவ்வளவு கடினமான காரியமாக ஸ்டாலினுக்கு நெருக்கமானவர்கள் நினைக்கவில்லை. ஆனால், அதைத் தாண்டிய பெரிய தலை வலிகள் ஸ்டாலினுக்குக் காத்திருக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாட்கள் அதிகமில்லை. இப்போது தி.மு.கவின் தலைவராவதில் ஸ்டாலினுக்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால், நாடாளுமன்றத் தேர்தல் முடிவுதான், இது அவருக்கு முள் கிரீடமா என்பதைத் தீர்மானிக்கும். கருணாநிதியும் ஜெயலலிதாவும் களத்தில் இல்லாத முதல் நாடாளுமன்றத் தேர்தல். மு.க. ஸ்டாலினைப் பொறுத்தவரையில், அவர் எழுதப் போகும் முக்கியமான அரசியல் தேர்வு இது.

"தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ், இடது சாரிகள், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் இடம் பெறலாம். பி.ஜே.பி தமிழகத்தில் வலிமையாக இல்லையென்றாலும், அவர்களால் இங்கு வலிமையான கூட்டணியை அமைக்க முடியும். தேர்தல் ஆணையம், ஊடகங்கள், பணம், அரசு அதிகாரம் போன்றவற்றுடன் பி.ஜே.பி கைகோத்துள்ளது. கூடவே, ஆளும் அ.தி.மு.கவும் அவர்களுடன் இணைந்து போட்டியிடுவார்கள். ரஜினி ஒரு பக்கம் வேகம் காட்டுகிறார். அவருடன் கூட்டணி வைக்க பல அரசியல் கட்சிகள் ஆர்வம் காட்டுகின்றன. இவர்களின் வாக்கு சத விகிதம் சிறிது சிறிதாக உயரத்தொடங்கியுள்ளது. தி.மு.க. கவலை கொள்ளும் அளவுக்கு கமல் கட்சியின் தாக்கம் இல்லை. ஆளும்கட்சியே அச்சப்படும் அளவுக்கு அயராது வலம்வருகிறார் டி.டி.வி.தினகரன்.

**சமாளிப்பாரா ஸ்டாலின்?**

ஆளும் அ.தி.மு.கவுக்கு தேர்தலில் வெற்றி கிடைக்கவில்லை என்றாலும், அவர்களுக்குப் பெரிய இழப்பு ஏதுமில்லை. ரஜினியின் இலக்கு 2021 சட்டமன்றத் தேர்தல் மட்டுமே. நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காவிட்டால், டுவிட்டரில் ஒரு பதிவு போட்டுவிட்டு அவர் இமயமலை போய் விடலாம். கமல்ஹாசனும் தேர்தல் தோல்வியைப் பற்றிப் பெரிதாகக் கவலைகொள்ள மாட்டார். தினகரனுக்கும் 'வந்தால் இலாபம், இல்லையேல் நட்டம் ஏதுமில்லை' என்கிற நிலைதான். ஆனால், தொடர்ந்து இரு தோல்விகளைச் சந்தித்த தி.மு.கவுக்கு இது அமிலப் பரிசோதனை" என்கிறார் தி.மு.க முன்னணித் தலைவர் ஒருவர்.

"அதிகார பலமும் பணபலமும் இணைந்த பி.ஜே.பி-அ.தி.மு.க கூட்டணி, தினகரன் கட்சி, பா.ம.க என அத்தனை பேரும் தி.மு.கவை வீழ்த்தவே வியூகம் வகுக்கப்போகின்றனர். ரஜினி தன் அரசியல் பயணத்தைத் தொடங்கினால், அவரின் ஏவுகணையும் ஸ்டா லினை நோக்கியே பாயும். அவருக்கு உறு துணையாக மு.க.அழகிரி கண்ணிவெடி களைக் களம் முழுவதும் புதைத்துவிட்டு வருவார்.

இவற்றையெல்லாம் சமாளிக்க ஸ்டாலினிடம் என்ன திட்டம் உள்ளது? ஆளும்கட்சி மீதான அதிருப்தி நியாயமாக தி.மு.கவின் ஆதரவு வாக்குவங்கியாக மாற வேண்டும். அது இங்கு நடக்கவில்லை. ஸ்டாலின் குடும்பத்தினரின் ஊடுருவலால் கட்சியின் முன்னணித் தலைவர்கள் அதிருப்தியில் உள்ளனர். உட்கட்சிப் பூசலால் கீழ்மட்ட நிர்வாகிகள் ஆர்வம் இழந்துள்ளனர்.

தேர்தல் கள நெருக்கடிகளையும், கட்சி நெருக்கடிகளையும் கருணாநிதி போல சாதுர்யமாக ஸ்டாலின் சமாளிப்பாரா என்ற கேள்வி தொண்டர்கள் மத்தியில் எழுந்திருக்கிறது. எம்.ஜி.ஆர் காலத்தில் நாவலர், செ.மாதவன், ப.உ.சண்முகம் உள்ளிட்ட பெருந்தலைவர்கள் விலகிய போதும்... வைகோவுடன் பெரும்பான்மையான மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கழக சீனியர்கள் வெளியேறி, கட்சியின் கொடிக்கே ஆபத்து வந்த இக்கட்டான காலகட்டத்திலும் தனது ஆளுமையால் கட்சியைக் காப்பாற்றினார் கருணாநிதி. நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்ட போதெல்லாம் அன்பழகன், ஆற்காடு வீராசாமி, முரசொலி மாறன், துரைமுருகன், வீரபாண்டி ஆறுமுகம் போன்ற சீனியர்களின் ஆலோசனைகளைக் கேட்டார் கருணாநிதி. ஆனால், ஸ்டாலின் தன் குடும்ப நண்பர்களின் ஆலோசனையை மட்டுமே கேட்கிறார். துரை முருகன். டி.ஆர்.பாலு, கே.என்.நேரு, பொன்முடி, தயாநிதி மாறன், ஐ.பெரியசாமி உள்ளிட்ட தலைவர்கள் யாரும் ஸ்டாலினின் நாற்காலியில் அமர்ந்திட நினைக்கவில்லை. ஸ்டாலின் முதல்வர் நாற்காலியில்அமர்ந்திட வேண்டும்என்றே நினைக்கிறார்கள். இதை உணர்ந்து கட்சிநடவடிக்கைகள்அமைந்தால்தான், அசுரப் பாய்ச்சலை தி.மு.க வால்நிகழ்த்த முடியும் எனக் கள யதார்த்தத்தை உணர்த்துகிறார் இன்னொரு மூத்த நிர்வாகி.

**ஜூனியர் விகடன்**

# facebook

# அப்பா பிள்ளை



அதிகாலை பெரியவனும் சின்னவனும் நேர் எதிர்த்திசையில் 3 மற்றும் 9 எதிரே நின்றிருந்தாருங்கள் கடிகாரத்திற்குள். அம்மா அறைக்குள் வருகிறாள் மணி 9.15 ஆச்சு இன்னும் 6 மணி மாதிரி ரெண்டு பேரும் தூங்கிக்கிட்டிருக்கிறீங்க என்று சொல்லிக்கிட்டே திரை சீலையை விலக்குகிறாள்.

குட்டிச்செல்லம் கண்ண முழிச்சு என்ன பாருங்க டைம் ஆச்சு ஸ்கூலுக்கு போகணும் எந்திரிங்கனு சொல்லிட்டு தான் பாதியில் விட்டு வந்த வேலையை பார்க்க அடுப்பங்கரையை நோக்கி விரைகிறாள்.

அரைத்தூக்கத்திலிருந்து மீண்டும் ஆழ்தூக்கத்திற்கு செல்கிறார்கள் இருவரும்.

ஆழ் தூக்கத்திருப்பவர்களை அலறி அடித்து எழுந்திருக்க வைக்கும் ஒருகுரல் இப்பொழுது டேய் தம்பி எழுந்திருடா ஸ்கூல் போகணும் லேட்டா போன மலர் மிஸ் திட்டு வாங்கனு சொல்லி முடிப்பதற்குள் பெரியவனுக்கு முழிப்பு வந்து பதறி அடித்து எழுந்தான். சின்ன தம்பி செல்லக்குட்டி எந்திரிங்கனு அவனை ஒரு குலுக்கு குலுக்கி விட்டு பாதியில் விட்டு வந்த வேலையை தொடர்ந்தாள்.

டேய் எந்திரிடா என்று பெரியவன் சின்னவனிடம் ஒரு குட்டி கலாட்டா பண்ணி எழுப்பினான்.

இருவரும் தங்களை ரெப்பிரேஷ் பண்ணிட்டு ஹோலில் வந்து உட்கார்ந்து டிவிஐ ஆன் செய்தார்கள். டிவி ஒன் ஆவதற்குள் இருவருக்கும் சண்டை ஸ்டார்ட் ஆகியது. இருவருக்கும் இடையில் சொத்து சண்டையை வரப் போகுது எந்த சனல் பார்ப்பது என்ற சண் டைதான்.

பெரியவன் சுட்டி டிவி வைக்கணும்னு சொல்றான் சின்னவன் போகோ வைக்கணும்னு சொல்றான்.

சண்டை இறுதிக்கட்டத்தை அடைவதற்குள் டிவி ஐ ஓப் செய்கிறாள் அம்மா. பாலை ஒழுங்கா குடிச்சுட்டு குளிக்க போங்கன்னு சொல்லிட்டே இருவரிடமும் ஒரு வேலையை தருகிறாள்.

சின்னவனே பெரியவன் பால் சாப்பிடுறது உன் பொறுப்பு பெரியவனே சின்னவனை குளிக்க வச்சு கிளப்புறது உன் பொறுப்பு எனக்கு இன்னும் சமையல் வேலை முடியலன்னு சொல்லிக் கொண்டே மீண்டும் சமையல் கட்டிற்குள் நுழைகிறாள்.

சின்னவன் பாலை எடுத்து மூச்சு விடாமல் குடிக்க ஆரம்பிக்கும் முன் பெரியவரிடம் நீயும் எடுத்து குடின்னு சொல்லுகிறான்.

குடிக்க மாட்டேனே நீ என்ன பண்ணுவேன்னு விளம்பரத்தில் வருவதுபோல் ஆடுகிறான்.

குடிக்கலைனா அம்மாகிட்ட சொல்லுவேன். அம்மா இப்போ அடுப்படிக்குள்ள இருக்காங்க தோசை கரண்டியால் உனக்கு சூடு கன்போர்ம் என்றான். இதை எதிர்பாராத பெரியவன் சற்றே நடுங்கித்தான் போனான் என்று தான் சொல்ல வேண்டும். உடனே இப்போ குடிக்கிறேன். ஆனா ஸ்கூல்ல குடிக்க மாட்டேனே என்ன பண்ணுவேன்னு கை விரலை மடக்கி கொக்கரிக்கும் பொது இன்னுமா குளிக்க போலன்னு அம்மாவின் குரல் படுக்கை அறையிலிருந்து கேட்டது. அடுத்தகணம் இருவரும் குளியலறையில் குளித்துக் கொண்டிருந்தார்கள்.

இருவரும் சமத்தாக கிளம்பி ஸ்கூலுக்கு கிளம்ப ரெடி ஆகியாச்சு. இருவரும் அம்மாவிடம் சொல்லிவிட்டு ஸ்கூலுக்கு செல்கிறார்கள்.

இருவரும் ஒரே வகுப்பில் இருந்தால் ஓவர் சேட்டை பண்ணுகிறார்கள் என்று சொல்லி தனி தனி வகுப்புகளில் சேர்த்து வதை கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் இங்கு கதை வேற பெரியவனை வேற கிளாஸ்ல போடத்தான் நா ஸ்கூல்க்கு போவேன் இவனோட தொல்லை என்னால தாங்க முடியலன்னு வீட்ல அடம்பிடிச்சு சண்டை போட்டதுனால இருவரும் வேற வகுப்புகளில் படிக்கிறாங்க.

இருந்தாலும் அந்த ஸ்கூல்ல ரெண்டு கிளாஸ்சும் ஒரு பீரியட்ல சேர்ந்துதான் ஆகணும் அது தான் ட்ராயிங் கிளாஸ். ஸ்கூலோட ட்ராயிங் மாஸ்டர் லோங் லீவுல போயிருக்காரு அதனால டெம்ப்ரவரியா ஒரு டீச்சர் வாரத்துல ரெண்டு நாள் வாராங்க.

அவர் இப்பொழுதுதான் கல்லூரி படிப்பை முடிச்சிருக்காங்க. அவங்க எப்பொழுதும் ஸ்கூலுக்கு வரும் பொது மாட்சிங்காதான் வருவாங்க.

பிரீ ஹேர் நெற்றியில சின்னதா ஒரு போட்டு. அந்த பொட்டு நைல் பாலிஷ் கழுத்துல போட்டிருக்கிற சின்ன செயின் அப்புறம் அவங்க செருப்பு இதெல்லாம் அவங்க சேரிக்கு மேட்ச்ஆ இருக்கும்.

இன்னைக்கு அவங்க இன்னும் அழகா இருந்தாங்க எல்லோரும் அவங்கள பார்த்ததும் மிஸ் இன்னைக்கு ரொம்ப சுபெர்ப் ஆஹ் இருக்கீங்கன்னு சொன்னாங்க. ஆனால் பெரியவன் மட்டும் ஒரு படி மேலே பொய் பாட ஆரம்பிச்சுட்டான் மலரே நின்னை காணத்திருந்தால் (ப்ரேமம் சோங்) டீச்சர் மனதிற்குள் சந்தோசம் இருந்தாலும் அவனை அதட்டினார்... இன்றைய கிளாஸ் இனிதே முடிந்தது.

இருவரும் வீடு திரும்பினார்கள் வரும் வழியில் சின்னவன் பெரிய்வரிடம் ஐஸ்கிறீம் வாங்கித்தர சொல்றான்.

மழை பெய்யுது இப்போ முடியாது என்று பெரியவன் சொல்ல அம்மா கிட்ட சொல்லவானு கேக்குறான் என்னடா பெருசா சொல்ல போற சொல்லிக்கோன்னு சற்றே தெனாவெட்டாக சொல்றான் மலரே நின்னை காணத் திருந்தால் (ப்ரேமம் சோங்) சின்னவன் முனங்கினான். அந்த குளுமையான நேரத்திலும் சற்றேன்று வியர்க்க தொடங்கியது பெரியவனுக்கு சின்னவனை சரிக்கட்ட வேற வழி தெரியாமல் ஐஸ்கிறீம் கடைக்கு முன்னால் வண்டி நின்றது. (தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1493

### கஜானி


கடிகாரத்திற்கு நேரத்தை மட்டுமே காட்டத் தெரியும்



அதை நல்ல நேரமாகவும் கெட்ட நேரமாகவும் மாற்ற மனிதனால் மட்டுமே முடியும்!

### ஜெனனி

கதவைத் திற காற்று வரட்டும் என்ற காலம் போய்



கதவை மூடு ஜீ வெளியே போகுது என்ற காலம் வந்துவிட்டது

### தர்சிகா

நான் என்ற நம்பிக்கையோடு வாழலாமே தவிர...



நான் என்ற ஆணவத்தோடு வாழக்கூடாது

### தாட்சாயினி

அப்பா: நீ அவகிட்ட ஐ லவ் யூ சொன்னியா
மகன்: சொன்னேன், ஆனா நடக்காதுப்பா
அப்பா: ஏன்டா...?
மகன்: அவ வேற யாரையோ இரண்டு பேரை லவ் பண்றாளாம்
அப்பா: உனக்கு எப்படித் தெரியும்?
மகன்:அவ சொன்னா ஐ லவ் யூ டூ ன்னு



### அபிராமி

தவறாக இருக்கும்பொழுது வாயை மூடிக்கொண்டிருந்தால் நீ புத்திசாலி



அதுவே சரியாக இருந்தும் வாயை மூடிக்கொண்டிருந்தால் நீ புருஷன்

### சிலோ

யாரையும் தூக்கி நிறுத்தாவிட்டாலும் பரவாயில்லை



தள்ளி விடாமல் இருந்தாலே போதும்


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 145

# சிபிலிஸ் எனப்படும் மேக நோய்




### மேக நோய் / சிபிலிஸ் (Syphilis) என்றால் என்ன?

மேக நோய் / சிபிலிஸ் எனும் நோய் பாலியல் தொடர்பு மூலம் பரவுகின்ற Treponema pallidum எனும் சுருளி வடிவம் கொண்ட அசையும் ஆற்றலுடைய பற்றீரியாவினால் ஏற்படுகிறது. இந்த நோய் அபிவிருத்தி அடைந்துவரும் இலங்கை போன்ற நாடுகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

### இந்த நோயின் தாக்கமும், பரவுகையும் எவ்வாறு உள்ளது?

இந்த நோய் பாலியல் தொழிலாளர் போன்றவர்களையே அதிகமாகப் பீடிக்கிறது. மேலும் ஓரினச் சேர்க்கையிலீடுபடும் ஆண்கள், நோயாளித் தாய்மாருக்குப் பிறக்கும் சிசுக்களையும் தொற்றுகின்றது.

முதன்மையான (Primary Syphilis) மற்றும் துணையான (Secondary Syphilis) மேக நோய் பெருமளவில் தாயிலிருந்து சிசுவுக்குக் கடத்தப்படுகிறது.



மேக நோய்க்கிருமி அகவணியில் ஏற்படும் காயமூடாகத் தொற்றுகிறது. நோய்க்கிருமி தொற்றி 10-90 நாட்களில் நோய் அறிகுறிகள் வெளிக் காட்டப்படுகின்றன.

### மேக நோய்க்கான அறிகுறிகள் எவை?

மேக நோய் ஏற்படும் காலம், ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவற்றைக் கொண்டு முதன்மையான மேகநோய் (Primary Syphilis) துணையான மேகநோய் (Secondary Syphilis) மற்றும் மூன்றாவது மேகநோய் (Tertiary Syphilis) என வகைப் படுத்தலாம்.

### முதன்மையான மேக நோய்?

இது நோய்க்கிருமி தொற்றி 2-10 கிழமைகளில் ஏற்படுகிறது. நோய்க்கிருமி தொற்றிய பகுதியில் நோயற்ற சிறிய வீக்கம் முதலில் தென்படும். இது பின்னர் சிறிய புண்ணாக மாறுகிறது. தொடர்ந்து வலியற்ற இறப்பர் தன்மையான நிணநீர்க் கணுக்கள் குறிப்பிட்ட பகுதியிலும் பின் உடலெங்கும் தோன்றும். மேக நோய்ப் புண் மலவாசலை, வாயைச் சூழவுள்ள பகுதியிலும் ஆண்குறி, பெண்ணில் யோனி வழி, கருப்பைக் கழுத்து போன்ற அங்கங்களிலும் ஏற்படும்.

### துணையான / இரண்டாவது மேக நோய்?

முதன்மையான மேக நோய் தோன்றி 2-10 கிழமைகளின் பின் துணையான மேக நோயாக மாற்றமடைகிறது. நோய்க்கிருமி தொற்றிய பகுதியிலிருந்து குருதி மூலம் உடலெங்கும் பரவு கிறது. இதன்போது காய்ச்சல், தசை நோவு, தலையிடி, கைகால் நோவு போன்ற அறிகுறிகளும், தோல்அழற்சி, நிணநீர்க்கணு வீக்கம், அகவணிப்புண் போன்றவையும் வெளிக்காட்டப்படும்.

தோல் அழற்சியமானது ஆரம்பத்தில் சிவப்புநிறமான பொட்டுகளும் தொடர்ந்து செப்பு நிறமான கணுவடிவிலான வீக்கமாகவும் விருத்தியடைகிறது. இவை பொதுவாக உள்ளங்கை / உள்ளங்கால் மற்றும் அக்குள் பகுதிகளில் காணப்படும். ஈரலிப்பான பகுதிகளில் பாலுண்ணி வடிவிலான கணுக்கள் தோன்றும்.

இதன்போது ஈரல் அழற்சி, என்பு அழற்சி (என்பு நோவு) கண்ணின் கருமணியழற்சி மற்றும் நரம்பு சம்பந்தமான நோய்களும் ஏற்படும். அத்துடன் விழித்திரை, சிறுநீரகம் போன்றவையும் பாதிக்கப்படலாம். முதன்மையான மற்றும் துணையான மேகநோய் தாமாகவே குணமானாலும் வீரியமான தொற்றுகையை ஏற்படுத்தக்கூடியன.

மேக நோயாளிகளில் 30 வீதமானோர் சிகிச்சையின்றித் தாமாகவே குணமடைவர். 30 வீதமானோர் நோய் உறங்கு நிலைக்குச் செல்வர். மிகுதியானோர் மூன்றாவது மேக நோய்க்கு (Tertiary Syphilis) ஆளாவர். நோய் உறங்கு நிலைக்குட்பட்டோர் நோய் அறிகுறிகளைக் கொண்டிராதவர்களாகவும் ஆனால் நோய்க் காவிகளாகவும் தொழிற்படுவர்.

### மூன்றாவது மேகநோய் (Tertiary syphilis)

- இந்தநோய் நிலைமை நோய்க்கிருமி தொற்றி 3-5 வருடங்களின் பின் வெளிக்காட்டப்படும்.
- இதன் போது எதட்டச் எனப்படும் இழையவளர்ச்சி, தோல், எலும்பு மற்றும் ஈரலில் ஏற்படுகிறது.
- தோலில் ஏற்படும் இதய வளர்ச்சி பொருக்கு அல்லது புண்போன்று விருத்தியடையும். ஈற்றில் மாறி வடுக்களைத் தோற்றுவிக்கும். மேலும் இவை ஈரல்விதைகள், இரப்பை, நாக்கு போன்ற அங்கங்களையும் பாதிக்கின்றன.

### மேக நோயால் ஏற்படும் சிக்கல் நிலைகள் எவை?

அ. இருதய மற்றும் குருதிக் கலன் பாதிப்பு-பொதுவாக நோய்க் கிருமி தொற்று ஏற்பட்டு அண்ணளவாக 20 வருடங்களின் பின் ஏற்படலாம். தொகுதிப் பெருநாடி அழற்சி, கல்சியம்படிதல், வால்வு பாதிப்பு, இருதயச் செயற்பாட்டுத்திறன் குறைவு, தொகுதிப் பெருநாடி வீக்கம் ஏற்பட்டு மரணத்துக்கு இட்டுச் செல்லலாம்.

ஆ. நரம்புப் பாதிப்பு-பொதுவாக அறிகுறியை வெளிக்காட்டுவதில்லை. மைய நரம்புகளின் செயலிழப்பு பாரிசவாதம்இநரம்பு அழிவு ஏற்படலாம். ஞாபகமறதி, கவனக்குறைபாடு, வலிப்பு, பலவீனம், நடத்தலில் பாதிப்பு போன்ற பிரச்சினைகளும் ஏற்படலாம்.

### தாய் - சேய் பரவுகை பற்றிய விபரம்?

- நோய்த் தொற்றுகைக்குட்பட்ட கர்ப்பிணித்தாய் தனது சிசுவிற்கு 10-15 கர்ப்பகால வாரங்களில் சூல் வித்தகம் மூலம் நோய்க்கிருமி பரவக் காரணமாகின்றார்.
- நோய்த் தொற்றுக்குட்பட்ட சிசுக்களின் கருச்சிதைவு, சிறு இறப்பு பிரசவத்தின்போது இறப்பு, முதிராப் பிறப்பு காரணமாகிறது.
- நோய்த் தொற்றிற்குட்பட்ட சிசுக்களில் தோல் அழற்சி, ஈரல் பாதிப்பு, பார்வைக்குறைபாடு, என்பு அழற்சி, நரம்புப்பாதிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

### மேக நோயை எவ்வாறு கண்டறியலாம்?

மேக நோயை குருதிப்பரிசோதனை, நுணுக்குக்காட்டிப் பரிசோதனை போன்றவை மூலம் கண்டறியலாம்.

### மேக நோய்க்கான சிகிச்சை?

மேக நோய்க்கான அறிகுறிகள் காணப்படுமிடத்து அல்லது மேக நோயாளிகளுடன் பாலுறவு வைத்திருப்பின் உடனடியாக வைத்தியரை நாடி சிகிச்சை பெறுவதுடன் பாலுறவுப் பங்காளியையும் சிகிச்சைக்குட்படுத்த வேண்டும். இதன் மூலம் நோயினைக் குணப்படுத்துவதுடன் பரவுதலையும் தடுக்கலாம்.

கர்ப்பிணித்தாயை உடனடியாகச் சிகிச்சைக்குட்படுத்துவதால் சிசுவிற்கு நோய் பரவுவதையும் அதன் சிக்கல் நிலையையும் தவிர்க்கலாம். பிரசவத்தின் பின் சிசுவையும் பரிசோதனைக்குட்படுத்தி தகுந்த சிகிச்சையளிக்க வேண்டும்.

### மேகநோயை எவ்வாறு தடுக்கலாம்?

- சகல மேக நோயாளிகளுக் கும் முறையாகக் சிகிச்சையளித்தல்.
- நோயாளியின் பாலியற் பங்காளிகளைக் கண்டறிந்து சிகிச்சைக்குட்படுத்தல்.
- ஆணுறை/பெண்ணுறை அணிந்து பாதுகாப்பான உடலுறவை மேற்கொள்ளல்.
- தனிமனித ஒழுக்க விழுமியங்களை இறுக்கமாகப் பேணுதல்.
- மேகநோய் தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தல்.

Dr.யோ.சிவாகரன்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்